Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

வாரமலர்


# தினச்செய்தி

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்



# வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு விரைவில் சர்வதேச நிதியம் ஏற்பாடு செய்கிறார் - சம்பந்தன்



வடக்கு கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி வேலைகளுக்கு சர்வதேச நிதியம் ஒன்றை அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டணி தலைவர் இரா.சம்பந்தன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அபிவிருத்தி வேலைகளுக்கான இந்த சர்வதேச நிதியத்தை ஜப்பான் நாட்டின் உதவியுடன் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

திரு.இரா.சம்பந்தன் 'தினச்செய்தி'க்கு வழங்கிய விசேட செவ்வியில் குறிப்பிடுகையில், இவ்வாறான சர்வதேச நிதியம் அமைப்பது மிகவும் அவசியம் என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் உதவியுடன் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பிற்பாடு, வடக்குக் கிழக்கு மாகாணங்களிற்கு எவ்வித அபிவிருத்தி வேலைகளையும் செய்யவில்லை. கடந்த அரசாங்கம் அபிவிருத்தி வேலைகளை செய்தோம் என்று பீற்றிக் கொண்டார்களே தவிர, யுத்த காலத்தில் சேதமடைந்த எந்த கைத்தொழிற்சாலைகளும் மறுசீரமைப்புச் செய்யப்படவில்லை, என்று கூறினார்.

பார்க்க பக்கம் 2இல்

## உள்ளே...

04. இன்னும் இருக்கிறதா தமிழினம்

06. புலம்பெயர்ந்தோர் நாடு திரும்பலாமா?

17. மனம் திறக்கிறார் அனந்தி

## இலங்கையர்களின் ஏகோபித்த பிரதிநிதி

அரசியல் விவகாரங்களில் உரிமைக் குரலில் ஒலிக்கின்ற சிந்தனைகளும், எண்ணங்களும் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் ஒற்றுமையுடன் ஒலிக்கும் குரல்கள் இல்லை. எனவே, இதற்காகத்தான் இலங்கை தேசிய சங்கத்தை இராமநாதன் அமைத்தார். நாட்டில் இங்கொன்றும், அங்கொன்றுமாக சிதறிக்கிடந்த தேசிய பற்றாளர்களை ஒருங்கிணைத்தார். நாட்டின் இறைமையையும், சிறப்பையும் விளக்கினார். நாட்டின் சுதந்திரம் என்ற போர்க் குரலையும் எழுப்பினார்.

பார்க்க பக்கம் 11இல்



தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

# அரசியல் அமைப்புச் சபை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதம மந்திரியுமான திரு. ரணில் விக்கிரமசிங்க புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக, இலங்கை நாடாளுமன்றத்தை எதிர்வரும் 9 ஆம் திகதி ஓர் அரசியல் அமைப்புச் சபையாக மாற்றியமைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இன்றைய நிலையில், எமது நாட்டிற்கு புதிய அரசியல் சட்டம் தேவைதானா? என்ற ஒரு கேள்வி எழுகின்றது.

அரசியல் சட்டங்களை வைத்துக் கொண்டுதான் ஆட்சியை நடாத்தவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடும் இல்லை.

எந்தவொரு பயங்கரமான அரசியல் ஷரத்துக்கள் ஓர் அரசியல் சட்டத்தில் இருந்தாலும், ஆட்சி செய்பவர்கள் பெரிய மனப்பாங்கு உள்ளவர்களாக இருந்தால் எந்த ஒரு அரசியல் சட்டத்தின் மூலமும் நாட்டை நல்ல ஆட்சி செய்யலாம். அதே நேரத்தில், சட்டத்தை மதிக்காதவர்கள் ஆட்சியில் இருந்தால் நல்ல அரசியல் ஷரத்துக்கள் ஒரு யாப்பில் நிறைந்திருந்தாலும் ஆட்சி செய்பவர்கள் குறுகிய மனப்பான்மை படைத்திருந்தால் மக்களின் திருப்திக்கமைய ஆட்சி செய்ய முடியாது.

உதாரணத்திற்கு தற்போதுள்ள 1978 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தன 1987 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தம் என்று கூறி சில ஷரத்துக்களை உள்வாங்கினார். அந்த திருத்தத்தில் மகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குதல், மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட அதிகாரம் வழங்குதல் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை அவர்கள் ஆட்சியிலிருந்த காலம் வரை அமுல்படுத்த முன்வரவில்லை.

அரசியல் சட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், இரண்டு வகையான சட்டங்கள் உள்ளன. ஒன்று எழுதப்படாத அரசியல் சட்டம். இது தான் பிரித்தானியாவில் அன்றுதொட்டு இன்றுவரை நடைமுறையிலுள்ளது. மற்றையது எழுதப்பட்ட அரசியல் சட்டம். இதுதான் இன்று இலங்கை, இந்தியா உட்பட பல உலக நாடுகளின் நடைமுறையிலுள்ள சட்டமாகும்.

இலங்கைத் தீவு 1505 ஆம் ஆண்டு தொடக்கம் காலணித்துவ ஆட்சிமுறையின் கீழ் அடிமைப்பட்ட நாடாக 1948 ஆம் ஆண்டு வரை இருந்தது. ஆரம்பத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகள் போர்த்துக்கேயர் ஆட்சிக்கும், அதையடுத்து ஒல்லாந்தர் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது. ஆனால் மத்திய பகுதியிலிருந்த கண்டிய இராச்சியம் சுதந்திரமாகவே இருந்தது.

1796 ஆம் ஆண்டு, ஒல்லாந்தர் கைவசம் இருந்த கரையோர பகுதி பிரித்தானியர் கைவசமாக மாறியது. 1802ஆம் ஆண்டு இலங்கையை குடியேற்ற நாடாக மாற்றினர். 1815 ஆம் ஆண்டு கண்டிய இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றினர். அதன்பின், இலங்கை முழுவதும் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் வந்தது.

தங்களது ஆட்சியின் கீழ் இலங்கை வந்ததன் பிற்பாடு, இலங்கை முழுவதையும் ஒரேவிதமான ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள்.

1831 ஆம் ஆண்டு முதன்முதலில் கோல்புறூக்கின் ஆணைக்குழுவின் சிபாரிசினை அடுத்து, சட்டநிர்வாக சபை, சட்ட நிரூபணசபை என இரண்டு சபைகளை அறிமுகப்படுத்தினார். 1912 ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் மூலம் சட்டநிர்வாக சபைக்கு படித்த இலங்கையர் பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டார்.

அதையடுத்து, 1931ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசை அடுத்து, ஸ்ரேற் கவுன்சில் அமைக்கப்பட்டது. அதற்கு 56 உறுப்பினர்கள் கொண்ட பிரதிநிதிகள் வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

தொடர்ந்து 1947 ஆம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசினை அடுத்து, இரு அவைகள் கொண்ட நாடாளுமன்றமும், தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் முறையும் அறிமுகமாகிற்று.

1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்தது.

இந்த அரசியல் சட்டத்தில் 19 ஏ பிரிவின் கீழ் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. அந்தச் ஷரத்தினை இரத்துச் செய்ய முடியாதபடி சோல்பரி ஆணைக்குழுவினர் அதனை வரைந்திருந்தனர்.

ஆனால் 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலிலே ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான அரசியல் கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தது. அவ்வாறு ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் தங்கள் புதிய அரசியல் சட்டம் ஒன்றை நாட்டில் உருவாக்க தேர்தல் காலத்திலே மக்களிடம் அங்கீகாரம் பெற்றோம் எனக் கூறி, புதிய அரசியல் சட்ட்ம ஒன்றை உருவாக்க முன்வந்தார்கள்.

அதன் அடிப்படையில், புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்க ஒரு அரசியல் அமைப்பு சபையை 19 யூலை 1970 ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள நவ ரங்க 'லா என்ற நாடக மன்றத்தில் ஆரம்பித்து வைத்தார்கள்.

இதுவே அரசியல் சாசனத்தை திருத்துவதற்கு என்று அமைக்கப்பட்ட முதலாவது சபையாகும். முதல் கூட்டத்தை அடுத்து நாடாளுமன்றத்தை அரசியல் சாசன சபையாக மாற்றிக் கொண்டார்கள். இந்தச் சபையில் தொடர்ந்து ஆலோசனைகள் நடைபெற்றது. 22 மே 1972 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இலங்கையை ஒரு குடியரசு நாடாக பிரகடனப்படுத்துவதாக அமைந்த ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்கினார்.

அதையடுத்து, 1977 ஆம் ஆண்டு ஆட்சிப்பீடம் ஏறிய ஜே.ஆர். ஜெயவர்த்தன 1972 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை ரத்துச் செய்து, இன்று நடைமுறையிலுள்ள 1977 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

இந்த அரசியல் சட்டம் இதுவரையில், கடந்த 28 ஏப்ரல் 2015 வரை மொத்தமாக 19 திருத்தங்கள் அமுலுக்கு வந்துவிட்டது. 20 ஆவது திருத்தமும் தேர்தல் முறையை மாற்றியமைக்க பிரேரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் தான் திரு.ரணில் விக்கிரமசிங்க புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்க முயற்சிப்பதாக நாம் நம்புகின்றோம்.

தமிழ்த் தலைவர்கள் அவதானத்துடன் தங்கள் கொள்கைகளை புதிய அரசியல் சட்டம் உருவாக்கும் சபையில் முன்மொழிந்து வெற்றி பெறவேண்டும்.

தமிழர்களை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

# வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு...

வடமாகாணத்தைப் பொறுத்த வரை யுத்தம் ஏற்பட முன்பிருந்த காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையே இரசாயன தொழிற்சாலை, ஒட்டிசுட்டானில் ஓட்டுத் தொழிற்சாலை ஆகியன யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன.

யுத்தம் முடிவடைந்த பிற்பாடு – (2009 மே) காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் ரூபாய் கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த இயந்திரங்களை எல்லாம் அன்று யாழ்ப்பாணத்தில் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்கா காலத்தில், தொழிற்சாலையிலிருந்த இயந்திரங்கள் சகலதும் பழைய இரும்புக்கு வெட்டப்பட்டு இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. இவ்வாறு விற்கப்பட்ட பணம் அரசாங்க திறைசேரியில் வைப்பிலிடப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

எனவே, கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாகவும் ஏற்கனவே இருந்த கைத்தொழிற்சாலைகளின் புனர்நிர்மாணம் சம்பந்தமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவரும், திருகோணமலை தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனிடம் 'தினச்செய்தி' கேட்டபொழுது, "வடக்கு கிழக்கு மாகாணங்களை சர்வதேசத்தின் உதவியுடன் அபிவிருத்திக்கு தேவையான நிதிகளைப் பெற்று போரினால் பாதிக்கப்பட்ட அழிவடைந்த கைத்தொழிற்சாலைகளை மீண்டும் கட்டியெழுப்பத் திட்டமிட்டுள்ளோம்," எனக் கூறினார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழ்த தேசியக் கூட்டணி வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதில் இனிமேல் முக்கிய கவனம் செலுத்தும் என்றார். இவ்வாறு பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் தமிழ் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்களை உறுதிப்படுத்த முடியும் என்றும் இரா.சம்பந்தன் கூறினார்.

மேலும், அண்மையில் தமிழ் மக்கள் பேரவை என்ற ஓர் அமைப்பு திரு.சீ.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்பட்டது.இது சம்பந்தமாக இரா.சம்பந்தரிடம் "தினச்செய்தி" கேட்டபொழுது, "ஜனநாயக ரீதியில் இயங்குவதற்கு சகலருக்கும் உரிமையுள்ளது. ஆனால், வடமாகாண முதலமைச்சர் திரு.விக்கினேஸ்வரனைப் பொறுத்த வரையில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டணிப் பிரதிநிதித்துவப்படுத்துபவர். இவர் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிட்டுத்தான் மாகாண சபையின் முதலமைச்சரானார். மேலும், தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த இலங்கை தமிழரசுக் கட்சி, மற்றும் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சியினர் சகலரும் இவரது தேர்தல் வெற்றிக்கு உழைத்துள்ளனர்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டணியையும், அதன் கொள்கைகளையும் பின்பற்றி செயற்பட வேண்டிய கடப்பாட்டில் தான் திரு. விக்கினேஸ்வரன் உள்ளார். தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிறேமச்சந்திரன் போன்றவர்கள் சூழ்ச்சிகளுக்கு பலியாகி தமிழ்த் தேசியக் கூட்டணியையும், இலங்கை தமிழரசுக் கட்சியையும் மலினப்படுத்த திரு. விக்கினேஸ்வரன் முயல்வது விரும்பத்தக்க செயலன்று, எனக் கூறினார்.

மேலும், இந்த விடயம் சம்பந்தமாக அதிகம் கூற தான் விரும்பவில்லை என்றும் திரு.சம்பந்தன் கூறினார்.

மாகாணசபை என்பது, அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக அமைக்கப்பட்ட அமைப்பு என்றும், கடந்த இரண்டு வருட காலமாக முதலமைச்சர் திரு.விக்கினேஸ்வரன் தலைமையிலான வட மாகாண சபை அரசினால் எந்த அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் "தினச்செய்தி" திரு. சம்பந்தனுக்கு சுட்டிக்காட்டிற்று.

மேலும், வடமாகாணசபை ஓர் அரசியல் களமாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றதே தவிர, அங்கே வேறு எதுவும் நடைபெறவில்லை என்றும் "தினச்செய்தி" மேலும் எடுத்துக்காட்டியது.

இனிவரும் காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு முக்கிய மாகாண சபைகள் முக்கிய பங்குவகிக்கும் என்று திரு. சம்பந்தன் உறுதியளித்தார்.

மேலும், வடக்கு கிழக்கில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நல்ல தீர்வு வரும். அவர்களுடைய இடங்களை மீட்டுக் கொடுக்க ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதாகவும் திரு.சம்பந்தன் கூறினார்.

அதே சமயம், வடமாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளில் தமிழ்த் தேசியக் கூட்டணி அதிக கவனம் செலுத்தும் என்றார். முஸ்லிம் மக்களின் வீட்டுப் பிரச்சினைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டணி முக்கிய கவனம் செலுத்தும் என்றார்.

தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் எமது சகோதரர்கள். அவர்கள் பால் தமிழ்த்தேசியக் கூட்டணி நிறைய அக்கறையும், கரிசனையும் கொண்டுள்ளது.. அவர்கள் வாழ்ந்த நிலங்களை இன்று இழந்து வாடுகின்றார்கள். அவர்கள் பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்துவோம் என்றும் திரு.சம்பந்தன் "தினச்செய்தி"க்கு வழங்கிய பேட்டியில் கூறினார்.

# இன்னும் இருக்கிறதா தமிழினம்...?

மனிதம்... மனிதம்... என்பதான குரல்கள் இன்றைய நாட்களிலே அதிகளவில் ஒலிக்கப்படுவதை அவதானிக்கவும், கேட்கவும் முடிகின்றது. ஆனால் செயற்பாட்டுத் தளத்தில் அவைசார் இயங்கியல் இல்லாத ஒன்றாகவே இருக்கின்றது. காலங்கள் மாறையிலே கால் தடங்கள் மறைகின்றமை வழமை. உறவுநிலைப்பட்ட கருத்துக்கள், ஆள்வினைத் தொடர்புகள் என்பன இன்று ஒருமுறையற்ற தளத்தில் இருப்பதை அவதானிக்க முடியாமலில்லை. அதாவது மனிதன் எனும் விலங்கு என்றுமே தனித்து வாழ்ந்துவிட முடியாது. மனிதனாய்ப் பிறந்தவன் எப்படியும் இன்னொருவருடன் தனது தேவைக்காக ஆள்வினைத் தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியமான விடயமாக இருக்கின்றது. அதுபோல இவ்வுலகில் வாழும் அனைவருமே ஒரு தேவையுடன் தான் பிறருடன் பழகுகிறோம். இருப்பினும் ஒரு மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவி செய்து வாழ்வதுதான் மனித வாழ்க்கையின் பூரணத்துவமாக அமைகிறது. எமது வாழ்க்கையில் எத்தனையோ பேர் எம் கண் முன்னால் உணவில்லாமல் வாழ்கின்றனர், நல்ல உடையில்லாமல், ஒரே உடையுடன், இருக்க வீடு இல்லாமல் தெரு வீதிகளிலும் வாழ்ந்து வருவது நாம் அறிந்ததே. இருப்பினும் பகட்டுக்காக பிறந்தநாள் என்றால் முதலாளித்துவ நிறுவனங்களிடம் சென்று எமது பணத்தைச் செலவழித்து வீணாக பணக்காரனை மேலும் பணக்காரனாக மாற்றுகிறோமே தவிர, உள்ளூர்க்கடைக்காரனிடம் சென்று உணவருந்தியோ, இல்லாதவர்களிற்கு உணவளித்தோ, கற்க வழியில்லாத மாணவர்களிற்கு ஒரு புத்தகத்தையோ இல்லை, ஒரு கற்றல் உபகரணத்தையோ வாங்கிக் கொடுக்கிறோமா என்றால் இல்லை என்பது தான் விடை. சுயநலப்பட்டுப்போன சமூகமாக நாம் மாற்றம் பெற்று இருக்கிறோம். யுத்தகாலத்தில் கூட புலிகள் போராட வேண்டும், நாடு எமக்கு கிடைக்க வேண்டும், என்று பேசியவர்கள், எண்ணியவர்கள் போன்றோர் எத்தனை பேர் தத்தமது பிள்ளைகளை களத்திற்கு அனுப்பினார்கள் என்றால் அது மிகவும் சிந்திக்க வேண்டிய விடயம்தான்.

தேர்தல் மேடைகளிலும், இலக்கியக் கூட்டங்களிலும் எதையும் பேசுவார்கள். செய்வதற்குத்தான் இந்தப் பாமர ஜனங்கள் இதனைத் தான் இவ்வளவு காலமும் எம்மினம் செய்து வந்திருக்கிறது. இதன் ஒரு கட்டம் தான் யாழ்.மாநகர சபை ஊழியர்களின் நிலையாக இருக்கின்றது. ஒரு வயதான முதியவரை வீதி வழியே காணக்கூடியதாக இருந்தது. குப்பைகளை வெறும் கையால் அள்ளுகிறார் எம்மால் சகிக்க முடியாமல் இருக்கிறது. கடைநிலை ஊழியர்கள் என்றே தெரியவில்லை. இவ்வாறான பாரபட்சங்கள் மிகஅதிகளவில் இருக்கின்றன. ஏசி வாகனங்களில் செல்லும் அதிகாரிகள் தாங்கள் மனிதர் போன்று, அவர்களும் மனிதர்கள் என்பதை உணர்ந்து நடக்க வேண்டும். தற்கால வீட்டு மற்



றும் இயற்கைக் கழிவுகள் உட்பட்ட வீதிக்கழிவுகளும் அதிகளவில் செயற்கையாக நச்சுத்தன்மை கொண்டவையாக காணப்படுகின்றன. இதனால் இவர்கள் அதிகளவிலான நோய்த்தாக்கத்திற்கு உள்ளாவது அதிகம். அதேவேளை இவர்களிற்கு சிறப்பு சுகாதார பராமரிப்புகளோ, நோய் ஆய்வுச் சிகிச்சைகளோ வழங்கப்படுவதாக தெரியவில்லை. ஏதோ கழிக்கப்பட்ட சமூகத்தினராக இச்சமூகம் வாழ்ந்து மடிந்து போகின்றது.

பாடழிவால் அழிந்த இனம் எமது இனம். என்னவோ உண்மை தான் யுத்தகாலத்தில் தமது உயிர், தத்தமது குடும்பம் என யோசித்து பழக்கப்பட்டதாலோ வந்த நிலைமையோ என்னவோ சுயநலம் கொண்ட சமூகமாகவோ அதிகளவில் இருந்துவிட்டோம். மாற்றானைப்பற்றி சிந்திக்கின்றவர்களாக நாம் இல்லை. வடக்கில் இடம் பெறுகின்ற கலாச்சார சீரழிவு, அதீத போதைப்பொருள் பாவனை என்பவற்றுக்கு என்ன காரணம் என விரிவாக ஆராயும்போது இவை சார்ந்த உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வடக்கின் பணப்புழக்கம் என்பது ஒரு வரம்பை மீறிய அளவில் நிகழும் விடயமாக இருக்கின்றது. "மிகைப் பணப்புழக்கம்" வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்திலே காணப்படுகிறது. மேற்குறிப்பிட்டவாறு மிகைப்பணப்புழக்கம் நிகழும்போது, ஒவ்வொரு வீட்டிற்கும் (பெரும்பான்மையாகி மாதாந்த செலவினைவிட அதிக மான பணம் வெளிநாடுகளில் இருந்து வருகிறது. உழைத்துப் பெறாமல் வருகின்ற பொருளாதாரமாகவே இது இருக்கிறது. அப்படி வரும் பணம் எம்மவர்கள், ஏலவே கட்டுப்பட்டுக் கிடந்தவர்கள் புதிய பொருள்களை கண்டவுடன் எல்லை மீறி கொள்வனவு செய்பவர்களாக இருக்கிறார்கள். அதேநேரம் பழக்கமில்லாத மதுவும், மாதுவும் புதிதாக எமது பண்பாட்டினுள் உட்சேர்க்கப்பட்ட விடயமாக இருக்கிறது. இதனையும் அனுபவித்துப் பார்த்தால் என்ன? என்ற கேள்வி எம்மவர் மனதில் உதிக்கிறது. அது நடைமுறைச்சாத்தியமாகவும் மாறுகிறது. எம்மவர்கள் பக்கத்து வீட்டுக்காரன் எப்படி வாழ்கிறான் என்று சிந்திக்கத் தலைப்படவில்லை (ஒரு சிலரைத்தவிர) ஆதலால் வரும் பணத்தில் தாம்தாம் சந்தோசமாக இருந்தால் போதுமென்ற மனநிலை தோற்றம்பெற்று இருக்கின்றது. ஆகையால் மதுப்பாவனை ஏறுமுகத்தில் இருக்கிறது. தமிழரின் பண்பாட்டுத்தளம் எவ்வாறான நகர்வுத்தளத்தில் இருக்கின்றது என்பதை மீட்டுப்பார்க்க வேண்டிய முக்கியமான தருணமொன்றிலே இருக்கின்றோம். தமிழர் தம் பண்பாடாக வரித்துக் கொண்டவற்றுள் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. பஞ்சமா பாதகம் பற்றிய விடயம், கொலை, களவு, காமம், பொய், கள்ளுண்ணல் போன்ற விடயங்கள் எமது சமூகத்தில் எல்லை மீறி வழக்கத்திற்கு வந்திருக்கிறது. மது அருந்துதல் சாதாரணமாகவே வழக்கத்திற்கு வந்துவிட்டது. களவும் அவ்வாறே பொய்பற்றி சொல்லத் தேவையில்லை. காமமும் இவ்வாறே கட்டுமீறி போயிருக்கிறது. அவ்வாறே கொலையும் எமது சமூகத்தில் நிகழாமல் இல்லை.

இவ்வாறு யாவும் இருக்க எமது சமூகத்தின் ஒட்டுமொத்த இயங்கியல் பற்றி நோக்குகையில் எமது சமூகத்தின் நகர்வு 2009 வரை போராட்டம்சார் சிந்தனை மற்றையது வறுமைநிலை கொண்டிருக்க எப்படியாவது வறுமையை உடைக்க ஒரே ஒரு சாதனம் கல்வி என்பதை உணர்ந்து எமது சமூகம் நகர்ந்தது. யுத்தம் முடிந்தது. யுத்தகாலத்தில் நடையுற்ற பணப்புழக்கம், தொலைத்தொடர்பு என்பவை மிகச்சாதாரணமாக நிகழ்ந்தேறி விட்டது. ஆகையால் உழைப்பதற்கு கல்வியைவிட ஆயிரம் வழிகள் இருக்கின்றன. என்றவாறான நிலை சமூகத்தில் தோன்றி விட்டது. சிந்தனைக்காக ஆளுமை வளர்ச்சிக்காக பயிற்றப்பட வேண்டிய கல்வி எமது இனத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பகாலம் முதலே தொழிலைப்பெற்றுக்கொள்ள, அந்தஸ்து மீட்டலைப் பெறும் ஒரு ஊடகமாகவே இருந்து வந்திருக்கிறது.

என்ன படித்தால், என்ன வேலை என்றவாறான சிந்தனை பலமாக மேற்கிளம்பியுள்ள நிலையில், கல்வியைப் பொறுத்தவரையில் தமிழரின் கருத்துநிலை (Ideology) இவ்வாறு உள்ளதாகையால், தொழிலைப்பெற்றால் போதும் என்ற நோக்கில் பயிற்றப்பட்ட/பயின்ற கல்வி, யுத்தத்திற்கு பின்னர் ஒரு சிந்தனைத்தளம் சார் கூட்டத்தை உடையாத பண்பாடுடைய சமூகமாக எமது சமூகத்தை தோற்றுவிப்பதில் தோல்வி கண்டாயிற்று. எவரும் சிந்திக்கத் தயாராகவில்லை.

இந்தப் பத்தி பல்பரிமாணப்பட்டதாக இருப்பதற்கு காரணம் தமிழர் என்ற இனம் சார்ந்த, அதன் நகர்வுத்தளம் பற்றிய பயம் பற்றியதாலாகும். யதார்த்த காலம் சற்றுப் பிரகண்டமானது. ஒரு புத்தகம், பேப்பர் வாங்க சிந்திக்கும் சமூகம், ஒரு போத்தல் சாராயத்தையோ, KFC இறைச்சியை வாங்க சிந்திப்பதில்லை. "நலியா கால உடையோம் நாம்", "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்றவாறாக சொல்லித் திரிவதைக் காட்டிலும் யதார்த்த காலம் பற்றியும், எமது மக்களின் வாழ்வை சமூகவியல் ரீதியாக ஆராயத் தலைப்படுவோர் எவருமில்லை, வடக்கின் புலமைசார் பெரும்பள்ளி இங்கிருக்கிறது. I am asociologist, I am a psychologist என்று சொல்லிக் கொள்வதைக்காட்டிலும் இனத்தை சீரிய செல்நெறியில் செல்ல வைக்க, மக்களை ஆற்றுப்படுத்தி, சமூக நகர்வியலை ஆராய்ந்து, தற்போதைய இயல்புகளை உய்த்துணர்ந்து எமது சமூகத்தின் பண்பாட்டுப் போக்குக் குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதனூடாகவும், மக்களது மனக்கிலேசங்களை ஆற்றுப்படுத்த வழிவகைகளை மேற்கொள்வது அவசியமாக இருக்கிறது. இது அவசரமானதுங்கூட, இல்லையேல் இனத்திற்கு பெயர்மாற்றம் தேவைப்படுமோ...? என்பதை எமக்கு காலம் தான் பதிலிறுக்க வேண்டும். மனித நேயத்துடன் சார்ந்த சிந்தனைத் தளமுள்ள வளர்கின்ற சமூகம் நோக்கி ஆற்றுப்படுத்த வேண்டும். இது சமூகத்தின் அனைத்துப் பிரிவிடமும் இருக்கிறது. மீளவும் பக்தி நெறியோடு கூடிய அறிவு எழுச்சியுள்ள ஒரு கூட்டத்தை கட்டியெழுப்புதல் தமிழரிற்கு மிக அவசியமாகும். இது காலத்திற்கு எழுந்துள்ள மிக அவசியமான சவாலாகும் பண்பாட்டுச் செல்நெறியை சீரியதாக மேற்கொள்ள பத்திரிகை உள்ளிட்ட அனைத்து ஊடகங்களும், சமூகத்தின் புத்திஜீவிகள் உள்ள அனைத்து தரப்பினரும் விழித்தெழ வேண்டும். இல்லையேல் இன்னும் இருக்கிறதா தமிழினம்...? என்ற கேள்வி எழுந்தால் ஆச்சரியத்திற்கில்லை.



அன்புவழியூர்
ச. திருச்செந்தூரன்
திருகோணமலை.

# தமிழ் மக்கள் பேரவை உருவாக்கம் கூட்டமைப்பிற்கு விழுந்த அடியா?

தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாக்கம் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனே காரணமென ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 19 ஆம் திகதி மாலையே இந்த தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக முதலமைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரனும் இணைத்தலைவர்களாக வைத்திய நிபுணர் பு.லக்ஸ்மன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தின் செயலாளர் ரி.வசந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளனர்.

உண்மையில் தமிழ் மக்கள் பேரவையின் அங்குரார்ப்பணம் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகளின் மீது கொண்ட அதிருப்தி காரணமாகவே உருவாக்கம் பெற்றது எனக் கூறமுடியும்.

தமது இந்தப் பேரவை ஒரு அரசியல் இயக்கம் அல்லவென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள போதிலும் அது எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடாது என கூறுவதற்கில்லை.

ஏனெனில் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளும் கூட்டமைப்பிற்கு வெளியே உள்ள கட்சிகளும் புத்திஜீவிகளும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

அரசியல்துறை, கல்வித்துறை, நலத்துறை, சுற்றாடல்துறை, விவசாயத்துறை, மீன்பிடித்துறை, மீள்குடியேற்றத்துறை, புனர்வாழ்வுத்துறை, கலைத்துறை, பண்பாட்டுத்துறை என பத்து உப குழுக்கள் இதில் அமைக்கப்பட்டுள்ளன.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தமது அரசியல் செயற்பாட்டை நேர்த்தியாக நடாத்திவந்தால் இவ்வாறான ஒருபேரவை உருவாக்கம் பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

தேர்தல் கால வீராவேசப் பேச்சுக்கள் மூலம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களாக தெரிவு செய்தவுடன் மக்களை மறந்து போய்விடுகின்றனர் கூட்டமைப்பினர்.

தேர்தல் காலங்களில் தாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவை என்பது கூட அவர்களுக்கு நினைவில் நிற்பதில்லை. கொழும்பு மைய அரசியலையே அவர்கள் எப்பொழுதும் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்மக்களுக்கான அன்றாட பிரச்சினை என்ன? இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசுடன் பேசி எவ்வாறு பெறலாம் என்பது தொடர்பாக சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பின் தலைமை கலந்துரையாடுவதே இல்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுடன் ஏற்பட்ட முரண்பாடு தொடர்பாக கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் எவ்வித பேச்சுக்களையும் நடாத்தவில்லை. மாறாக அவருடன் பேசப்படும், தீர்வு காணப்படும் என்றே ஊடகங்கள் வாயிலாக தெரிவித்து வருகின்றார். ஆனால் நிலைமையோ கட்டுமீறிச் சென்றுவிட்ட நிலையில் இன்று அவர் தமிழ் மக்கள் பேரரவையின் தலைவராக நியமிக்கப்பட்டவுடன் ஏதோ அவர் தேசத்துரோகம் செய்தது போல அறிக்கைகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

முதலமைச்சர் விக்கினேஸ்வரனை அரசியலுக்கு கொண்டுவந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். அவர் தமது அமைப்பிலிருந்து விலகுகின்றார் என்றால் அவரிடம் பேசி தம்வழிக்கு கொண்டுவருவது கூட்டமைப்பின் தலைமையே ஒழிய வேறெவரும் அல்ல. இதைவிடுத்து நாம் கொண்டுவந்த விக்கினேஸ்வரன் வேறொரு இடத்தில் நின்று எங்களுக்கு எதிராக பேசுவதா என வேட்டியை வரிந்துகட்டக் கூடாது.

தமிழ்மக்கள் கூட்டமைப்பிற்கு வாக்களித்தது அவர்கள் பதவியைப்பெற்று சுகபோகம் அனுபவிப்பதற்கல்ல. எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டும். நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவி வேண்டும். மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைமைப் பதவி வேண்டும் என அரசுடன் பதவிகளுக்காகவே கூட்டமைப்பு இன்று மல்லுக்கட்டுகிறது. மாறாக தமது கட்சிக்குள் உள்ள உள் முரண்பாடுகள் தொடர்பாக பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாராகவில்லை. இவர்களைத் தெரிவுசெய்த தமிழ் மக்க

(தொடர்ச்சி 23 இல்......)

# அரசகேசரியின் பதில்கள்



கேள்வி: *வலிவடக்கு மக்களை எதிர்வரும் ஆறுமாதத்திற்குள் மீள்குடியேற்றம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளாரே?*

பதில்: அப்படித்தான் சொல்கின்றார். பொறுத்திருந்துதான் பார்ப்போம்.

**பகீரதன், மல்லாகம்.**

கேள்வி: *தமிழ்மக்கள் பேரவையின் இணைத்தலைவராக முதலமைச்சர் விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். இது கூட்டமைப்பை உடைக்க முயற்சிக்கும் தந்திரமா?*

பதில்: உமது இந்தக்கூற்றை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனெனில் இணைத்தலைவர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் விக்னேஸ்வரன்.

**முருகானந்தா, யாழ்ப்பாணம்.**

கேள்வி: *காணாமற்போனோரின் உறவுகள் தமது கட்சி மீது அபாண்டமாகக் குற்றம் சுமத்தியுள்ளதாக டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளது குறித்து?*

பதில்: திரு. டக்ளஸ்தேவானந்தாவிடம்தான் கேட்கவேண்டும். அது சரி அப்படி என்ன அபாண்டத்தை சொல்லிவிட்டார்கள்.

**ஸ்ராலின், உரும்பிராய்.**

கேள்வி: *வடமராட்சி மணற்காடுப் பகுதியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை எதிர்த்து அப்பகுதி மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனரே?*

பதில்: ஏன் நடாத்துகின்றார்கள்


**சர்வேஸ்வரன், பருத்தித்துறை.**

கேள்வி: *கிராமராஜ்ஜியம் வடக்கு கிழக்கை பாதிக்காது என அரசாங்கம் கூறுவது உண்மையா?*

பதில்: இது சம்பந்தமாக தமிழ் தேசியகூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன கூறுகின்றார்கள் என நாம் அறியவேண்டும். அதன் பின்னரே கருத்துக் கூற முடியும்.

**பர்ஹானா, திருகோணமலை.**

கேள்வி: *வில்பத்து காடு அழிக்கப்படுவதாக தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அரசியலிலிருந்து விலகத்தயாரென அமைச்சர் ரிசாத் தெரிவித்துள்ளாரே?*



பதில்: வரவேற்கத்தக்கது. சரியான அறிவித்தல்.

**பாஹிம், மட்டக்களப்பு**

கேள்வி: *அமைச்சர் மனோ கணேசனின் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு என பெயர் மாற்றப்பட்டுள்ளதன் மூலம் தேசிய சகவாழ்வு ஏற்பட்டுவிடுமா?*

பதில்: சொல்லத்தெரியவில்லை.

**விவேக்குமார், நுவரெலியா.**

கேள்வி: *புதிய அரசமைப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சரத்துகள் உள்ளடக்கப்படவேண்டுமென ஜே.வி.பி கூறுவதில் நியாயம் உள்ளதா?*

பதில்: புதிய அரசியல் சட்டம் நாட்டுக்கும் தமிழர்களுக்கும் ஒரு விடிவை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. எனவே ஜேவிபி விரும்புவதும் விரும்பாததையும் பற்றி எமக்கு எவ்வித அக்கறையும் இல்லை.

**பிரனீதா, கொழும்பு.**

கேள்வி: *யாழில் ஹெரோயினுக்கு மாணவர்கள் பலிக்கடா ஆக்கப்படுவது அதிகரித்து வருகிறதே?*

பதில்: போதைப்பொருள் பாவனையில் தமிழ் மக்களை திட்டமிட்டு அடிமைப்படுத்துகின்றார்கள். இந்த கைங்கரியத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் அடங்குவர்.

**மிஷாந்தன், அரியாலை.**

கேள்வி: *பிரகீத் எக்னலிகொட கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதான இராணுவ வீரர்களை முன்னாள் ஜனாதிபதி சிறையில் சென்று சந்தித்துள்ளாரே?*

பதில்: குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

**ரதீஸ், வத்தளை.**

# சொன்னார்கள் சொன்னார்கள்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்த வேண்டிய எந்தத் தேவையும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ



கிடையாது

"தமிழத் தேசியக் கூட்டமைப்பை பிளவு படுத்துவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு எதிராக சிலர் குரல் கொடுத்து வரு கின்றனர்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பு என்பது மிகவும் பலமான கட்சி. தமிழ் மக்களின் பிரதான கட்சியும் அதுவேயாகும்.

இத்தகைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இரண்டாக பிளவுபடுத்த வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை நாம் வழங்கவுள்ளோம். இந்த சந்தர்ப்பத்தில் அந்தக் கட்சி பலமாக செயற்பட வேண்டும்.

எனவே, தமிழத் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்த வேண்டிய எந்தவொரு தேவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கோ அல்லது அரசாங் கத்திற்கோ கிடையாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இனவாத போக்குடன் செயற்படக் கூடி யவர்களுக்கும், நடுநிலைப் போக்கினை கொண்டிருப்பவர்களுக்கும் இடையி லேயே பிரச்சினை காணப்படுகிறது.

இந்த இரண்டு தரப்புகளுக்கும் பெரும் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

**அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல**

விக்னேஸ்வரன் என்ற சுனாமி பேரலை யில் சம்பந்தன் சிக்கித் தவிக்கிறார். இந்த சுனாமிப் பேரலையிலிருந்து சம்பந்தனால் மீண்டு வர முடியவில்லை.



வடக்கு முதல் வர் விக்னேஸ்வரன் மக் கள் இயக்கம் ஒன்றை ஆரம் பித்துள்ளதன் மூலம் கூட்டமைப்புக்குள் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.


விக்னேஸ்வரன் மேலே இருக்கிறார். சம்பந்தன் கீழே இருக்கிறார்

**நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன.**

தற்போதைய அரசாங்கம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பொய்யையே கையாண்டு வருகிறது என்பது முதலாளித்துவ பொரு ளாதார நிபுணருக்கு கூடபுரியும்

நாட்டின் தற்போதைய காலம் வறுமை அதிகரிக்கும் காலமாக மாறி வருகிறது, இது குறித்து அரசாங்கம் எந்தவொரு கவனத்தையும் செலுத்தவில்லை.

தேயிலை மற்றும் இறப்பருக்கு நிவாரணங்கள் வழங்குவது தொடர்பாக அரசாங்கம் எதனையும் பேசுவதில்லை, அரசாங்கம் இது சம்பந்தமாக வழங்கிய வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.



இந்த விடயம் சம்பந்தமாக அரசாங்கத்தை தூக்கி நிலத்தில் அடிக் கும் அளவில் எதி ர்ப்புகள் உள்ளன.

**நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார**

தேசிய இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணும் வகையிலேயே புதிய அரசமைப்பில் சரத்துகள் உள்ளடக்கப்பட வேண்டும்

நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு அவசியம். அதை ஜே.வி.பி. வரவேற்கும். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கிய உறுதி மொழிகளை அரசு நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை



ஒழிப்பு இதில் பிரதான விடயமாகும்.

அதேவேளை, தமிழ் மக்களும் நீண்ட கால பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர். எனவே, ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் தீர்வுத்திட்டம் முன்னெடுக்கப்படவேண்டும்.

**ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி**

இந்த அரசாங்கம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்தல், புதிய தேர்தல் முறையை அறிமுகம் செய்தல் போன்ற கவர்ச்சியான வசனங்களைப் பேசி ஏனைய அனைத்து விடயங்கள் உள்ளிட்ட வகையில் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்ய முயற்சிக்கின்றது.

தற்போதைய அரசியல் அமைப்பின் இரண்டாம் சரத்தில் ஐக்கிய இலங்கை மற்றும் ஒன்பதாம் சரத்தில் பௌத்த மதத்



திற்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் ஆகியன புதிய அரசியல் அமைப்பில் மாற்றப்பட்டால் அது பாரதூரமான நிலைமையாகவே கருதப்பட வேண்டும்.

அரசியல் அமைப்பில் 250 சரத்துக்கள் காணப்பட்டால் அவை அனைத்தையும் ஒரே யோசனையில் மாற்றிவிட முடியாது. எனவே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாது அரசியல் அமைப்பு திருத்தம் செய்யக் கூடாது

**முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்**



# புலம்பெயர்ந்தோர் நாடுதிரும்ப இயல்பு நிலை ஏற்பட்டுள்ளதா?

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் விசாரணைக்குழு ஒன்று வந்து விசாரணை நடத்திச் சென்றுள்ளது. விசாரணை என்பதைக் காட்டிலும் சாட்சியங்களைப் பதிவுசெய்து சென்றுள்ளது என்பதே உண்மையாக உள்ளது.

பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றிலும் இந்த சாட்சயப் பதிவு நடந்தேறியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடத்தப்பட்ட நடந்து முடிந்திருக்கின்ற விசாரணைகளே இங்கு குறிப்பிடப்படுகின்றது.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் வழமைக்கு மாறாக தமது உறவினர்களைக் காணாமல் ஆக்கியவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளை மக்கள் பதிவு செய்து இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற ஊடகங்கள் பத்திரிகைகள் இச்செய்திகளை முதன்மைப்படுத்தி வெளியிட்டுள்ளன. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் கலந்துகொண்டு பெற்றோர்கள் உறவினர்கள் நண்பர்கள் என்ற வகையில் வெளியிட்ட கருத்துக்களை எந்தவிதமான தணிக்கைகளும் இன்றி அச் செய்திகளை அவ்வாறே வெளியிட்டுள்ளன.

தமது உறவுகளை காணாமல் ஆக்கியிருப்பவர்கள் இவர்கள்தான் என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு தகவல் வெளிப்படுத்தும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றமையை இந்த நிகழ்வுகளில் இருந்து கண்டுகொள்ள முடிகின்றது.

இதன் பின்னணியில் உள்ள அரசியல் விடயங்கள் தொடர்பில் கருத்தூன்றி நோக்கப்பட வேண்டியுள்ளது. இந்த நோக்கு இக்கட்டுரையின் ஆய்வு விடயம் அல்ல என்பதால் அவற்றை இக்கட்டுரை திணிக்கின்றது.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆய்வுக்குழு ஆய்வினை நடாத்தி பதிவுகளை மேற்கொண்டு சென்றுள்ளது.

இந்த நிலைமையில் சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகள் விடயத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகள்



உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை தமது விடுதலையை வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள இருப்பதாக அறிவித்தமை இதன் தொடர்ச்சியாக சில அரசியல் தலைவர்கள் அந்த உண்ணா விரதத்தை மேற்கொள்பவருக்கு உறுதி அளித்தமை அந்த உறுதிகளின்படி உண்ணா விரதத்தை சிறைக்கைதிகள் நிறுத்தியமை போன்ற விடயங்கள் நடந்தேறி இருக்கின்றன.

கைதிகளின் விடுதலை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் பெரும்பான்மையோரிடம் காணப்படுகின்ற போதிலும் அக்கருத்துக்களை விஞ்சிய ஏதோ ஒரு பிரதான அரசியல் காரணம் அக்கைதிகளின் அரசியல் விடுதலையை தடுத்து நிறுத்திக்கொண்டு செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இந்த இரு வகையான விடயங்களும் நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான பிரச்சினைகள், சிறையில் இருக்கும் கைதிகளின் விடுதலை என்னும் இரு விடயங்களும் தீர்க்கப்படாமல் இருக்கின்ற சூழ்நிலையில் ஜனாதிபதி வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களில் தெரிவித்துவரும் கருத்துக்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது.

தான் விஜயம் செய்யும் நாடுகளில் உள்ள இலங்கையர்களிடம் அவர்களை நாடு திரும்புமாறு அழைக்கின்றமை தொடர்பில் ஜனாதிபதி ஆர்வம் காட்டுகின்றமையை கூற முடிகின்றது. நாட்டில் சமாதானம் நிலவுவதாகவும் எல்லா வகையான பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டதாகவும் யுத்தம் நடைபெற்றபோது இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்படுகின்றார்கள் என்றும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்றவர்கள் வெளிநாட்டில் வாழ்பவர்கள் நாடு திரும்புவதற்கான சூழ்நிலைகள் தோன்றி உள்ளதாகவும் ஜனாதிபதி கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்.

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்று எமது நாட்டில் யுத்தங்கள் நடைபெற்ற போது வெளிநாட்டுக்கு இடம்பெயர்ந்து சென்றவர்கள் காதுகளுக்கு இனிப்பான செய்தியாக ஜனாதிபதியின் கருத்து அமைந்திருப்பது வியப்பான விடயம் அல்ல.

வெளிநாடுகளில் தற்போது நடைபெற்று வருகின்ற I.S தீவிரவாதிகளின் செய்கைகள் இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்ற நினைப்பை வெளிநாடுகளில் வாழும் உறவுகளுக்கு ஏற்படுத்தி இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

இந்த நியைில் இன்னொரு விடயத்தையும் நோக்குவது கட்டுரையின் முக்கிய விடயமாக அமையும் என்பதில் ஐயமில்லை. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்றவர்கள் முழுமையாக தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டார்களா, மீளக்குடியமர்ந்து வாழ்பவர்கள் தமது இயல்பான வாழ்க்கையை வாழ வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதா என்பது தொடர்பிலான வினாக்கள் வினாக்களாகவே தொடர்ந்த வண்ணம் காணப்படுவதை இவ்விடயத்தில் சுட்டிக்காட்ட வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறான நிலைமைகள் தொடருகின்ற சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளில் வாழுகின்ற உறவுகள் தமது வாழ்விடங்களுக்கு திரும்புவது தொடர்பில் ஐயப்பட வேண்டியவர்களாகியே உள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர் தொடர்பிலான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சிறையில் வாடும் கைதிகள் தொடர்பான விடயங்கள் மீளக்குடியமர்வின் வேகம் மீளக் குடியமர்த்தப்படாத மக்களின் சோகம் இவைகள் யாவும் தீர்க்கப்பட்டு இயல்பான வாழ்க்கை ஒன்று ஏற்படுகின்ற சூழ்நிலையில் யாருமே அழைக்காமல் தமது சொந்த இடங்களுக்கு வெளிநாட்டில் வாழும் உறவுகள் திரும்புவார்கள் என்பதே இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாக உள்ளது.

சுபா

---

# ஒரு கணம் சிந்தித்தால் என்ன?

**யாழ்.** குடாநாட்டில் அதிகரித்து வரும் தற்கொலை பலரது மனதிலும் ஏதோ இனம் தெரியாத பயணத்தையும், இயலாத் தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. பெறுமதிமிக்க உயிரின் தார்ப்பரியம் பூச்சிகொல்லிகளால் கரைந்து கொண்டு அலரிக்கொட்டைகளில் அழிந்து கொண்டும் இருக்கிறது. இத்தனை காலமும் தமிழ் மக்களின் உயிரிழப்புகள் பல வரலாறுகளை ஏற்படுத்தியிருக்க இப்படியாக அவலச் சாவுகள் மக்கள் மனதில் வெறுமையை ஏற்படுத்தியுள்ளன.

ஏன் இத்தனை தற்கொலைகள்? யாரில் என்ன தவறுள்ளது?

நம்மில் ஒரு தடவையேனும் தற்கொலை எண்ணம் தோன்றி மறையாதவர்கள் எத்தனை பேர்? விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் தான். ஏன் அவ்வாறான எண்ணம் தோன்றியவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடவில்லை? அது ஒரு கணநேர மனநிலைத் தடுமாற்றம். சில கேள்விகளுக்கு அவர்கள் விடை தேடிக் கொள்கிறார்கள். மறுகணம் தமது முடிவை மாற்றிக்கொள்கிறார்கள்.

நான் இறப்பதால் கிடைக்கும் பலன் என்ன? நான் இறந்து விடின் துன்பப்படுபவர்கள் எத்தனைபேர்?

ஒரு சிறு நன்மையாவது என்னால் இந்த உலகத்துக்கு உள்ளதா?

நான் இறப்பின் மனத்தால் சித்திரவதைப்படுபவர்கள் உள்ளார்களா? உதாரணமாக ஒருவர் நான் இதைச் செய்திருந்தால் இவர் இறந்திருக்கமாட்டாரா? என்று எண்ணித்துன்புறப் போவது யார்?

எனது இக்கட்டான இம் மனநிலைக் குழப்பத்துக்கு வேறு மாற்று வழியுள்ளதா?

வாழ்வில் ஒரு தடவையேனும் நான் மற்றவர்களால் பாராட்டப்பட்டு உள்ளேனா?

என்னைவிட மிகச்சிக்கலில் உள்ளவர்கள் இருக்கிறார்களா?

ஆன்மீகப் பற்றுள்ளவராயின் இறந்த பின் என் ஆவிக்கு கொடுமையான மறுபிறப்பு கிடைத்து விடுமோ? தவறுதலாக உயிர்பிழைப்பின் என் கௌரவம் என்ன ஆகிவிடும்? ஏனோ ஒரு சிலர் இவ்வாறான கேள்விகளைச் சந்திக்க முதலே முடிவெடுத்து விடுகிறார்கள் அல்லது கேட்டுக்கேட்டு விடை தெரியாமல் வேறு வழியற்று மரணத்தைத் தழுவிக் கொள்கிறார்களா?

இப்படியாக இறப்பவர்களில் பலர் மனதளவில் மிகவும் துன்புற்றவராகவே தனது பிரச்சினைகளைக் கலந்து ஆலோசிக்க தகுந்த நபர் கிடைக்காமலே இறந்திருக்கலாம்.

அடுத்து எமது இளைய தலைமுறையினரின் தற்கொலை முயற்சிக்குப் பொதுவான காரணங்கள் தான் நம்ப முடியாமல் உள்ளன.

மோட்டார் சைக்கிள் வாங்குவதற்குப் பெற்றோர் கடன் எடுத்துத்தரமுடியாமை.

காதலனோ, கணவரோ, மனைவியோ கையடக்கத் தொலைபேசி அழைப்புக்குப்பதிலளிக்காமை.

பரீட்சைகளில் தவறுதல்

தொலைக்காட்சி பார்ப்பதையோ, வேறு கேளிக்கைகளையோ குறைக்குமாறு கண்டிக்கப்படுகின்றமை.

ஏன் இப்படியான நிலைமை ஏற்படுகின்றது. பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான மனநெருக்கம் குறைவடைந்தமைதான் காரணம், வேறுவேறு காரணிகளால் ஒருவரையொருவர் அறிந்தும்

*(தொடர்ச்சி 23 இல் .....)*

Dr.பானு தில்லையம்பலம்,
மருத்துவ அதிகாரி,
யாழ். போதனா வைத்தியசாலை.

# சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் ஆளவும் பாரினில்

தமிழ்க்கவி



இலங்கை மண்ணில் அந்நியர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் நாங்கள் அடிமைகளாக இருந்தோம் என்று கூறினாலும் அக்காலத்தே நாம் அதிக நன்மைகளையும் பெற்றுக்கொண்டோம். ஆனாலுமென்ன? தமிழ்ப் பெண்கள் பெரும்பாலும் காலமாற்றத்துக்கு தம்மை ஈடுகொடுத்து முன்னேறித்தான் உள்ளனர்.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தே தாம் படிக்காதபோதும் பிள்ளைகளைப் படிப்பித்து ஒரு அரசாங்க வேலையில் அமர்த்திவிட இந்தப் பெண்கள் கடுமையாக உழைத்தார்கள். இவர்களது உழைப்பு முழுக்க முழுக்க விவசாயத்தையும் பனை மரங்களையும் நம்பியே இருந்தது. படித்த ஆண்களுக்கு அரசஉத்தியோகம் கிடைத்தாலும் அவை பரந்த பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளையே மையப்படுத்தியிருந்தது.

ஆக, ஆண்கள் பெற்ற அரச உத்தியோகங்கள். ஆங்கிலேயரின் ஆட்சி எல்லைக்குள் மலாயா சிங்கப்பூர், பினாங்கு பர்மா என வெளிநாடுகளிலேயே கிடைத்தது. கைநிறையச் சம்பளம். யாழ்ப்பாணத்துக்குள் வாழும் மனைவி பிள்ளைகளுக்கு வரும். சிலர் குடும்பங்களுடன் வேலைகிடைத்த நாடுகளில் வாழ்ந்தார்கள. அடிக்கடி திரும்ப தமது சொந்த இடத்துக்கு வரும்போதெல்லாம் இவர்களது அசையாச் சொத்துகள் அயலவர்களால் கைப்பற்றப்பட்டும் எல்லை விரிவாக்கம்பட்டும் குறைந்து போனது. அடிக்கடி பிணக்குகளும் எழுந்தன. ஒல்லாந்தர் காலத்தே இந்த பிணக்குகளை தீர்க்க வரையறை செய்ய ஒருசட்டம் தேவையாகியது. எல்லா நாடுகளிலும் அந்த அந்த நாடுகளில வாழும் மக்களால் காலங்காலமாக கையாளப்பட்டுவந்த வழமைகளையே சட்டமாகத் தொகுத்தனர். இலங்கையில் யாழ்ப்பாண ராச்சியத்தின் வழமைகளைத் தொகுக்க முதலிமார்கள் கோரப்பட்டனர்.

அவர்களால் தொகுக்கப்பட்ட தேசவழமையில் என்ன இருந்தது என்பதை விடுவோம். பெண்களுக்கான சட்டதிட்டங்களை எப்படி வரையறுத்தார்கள் என்று பார்த்தால் மிகவும் பாதுகாப்பானதாக

அதாவது பெண்களது சொத்துக்களுக்கு மிகவும் பாதுகாப்பான வேலியை அது அமைத்திருந்தது. பெண்கள் திருமணமாகி செல்லும் போது சீதனம் கொண்டு செல்வதால்... குடும்பத்தின் அதாவது பெற்றோரின் சொத்தில் பங்குகொடுக்கத் தேவையில்லை. பெற்றோர் தமது சொத்துக்களுக்கு வாரிசு குறித்து வைக்காமல் இறந்துபோனால் அந்த சொத்து ஆண்வாரிசுக்கே சேரும். அப்படியான ஆண்வாரிசு சட்டமுறையற்ற ஒரு மனைவி மூலம் பிறந்திருந்தாலும்... அவனுக்கே சேரும். (திருமணமாகாத பெண்கள் முகட்டைப் பார்த்துக் கொண்டு உட்கார வேண்டியதுதான்)

பெண் கொண்டுவரும் சீதன நகை பணம் காணிபூமி, ஆடு மாடு.. இவற்றில் கணவனுக்கு பாத்தியதை கிடையாது. ஆனால் அதை பெண் தன்னுடைய விருப்பத்துக்கு எதுவும் செய்ய முடியாது. அதாவது விற்க, மாற்ற ஈடுவைக்க, பிரியமானவர்களுக்கு கொடுக்க... கணவனது எழுத்து மூலமான சம்மதம் வேண்டும். ஏன் என்றால் பெண்ணுக்கு சொத்தைக் கையாளத்தெரியாது. யாரிடமாவது ஏமாந்து போவாள். பாவம் அப்பனோ அண்ணனோ சம்பாதித்துக் கொடுத்த பொருள். நியாயம் தானே. தமக்கான சீதனப்பணத்தையும் சொத்தையும் தாமே சம்பாதித்த, சாம்பாதிக்கும் இன்றைய பெண்களுக்கும் இதுவே சட்டம். என்னதான் கோடிக்கணக்கான சொத்துகளையும் பெரியபெரிய கம்பனிகளையும் நிர்வகிக்கும் திறமை கொண்ட பெண்ணாயினும் தன்னுடைய சொத்தை கையாள கணவனுடைய துணை சம்மதம் வேண்டும். (இல்லாட்டி ஆரும் ஏமாத்திப்போடுவாங்கள்)

பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றி... இன்றைய உலகம் நிறையவே பேசுகிறது பெண்ணுக்கு உள்ள உரிமைகள் பற்றியும் நாலாபக்கமும் குரல் எழத்தான் செய்கிறது. தீர்வுதான்.. ம்கும் குடும்ப வன்முறைகள் இன்னதுதான் என்று வரையறுத்து சொல்ல முடியாது. ஒரு பெண்ணை உடல் உள ரீதியாக கொடுமைப்படுத்துவது வன்முறைதான் சரி... அதை செய்பிறவங்களை என்ன செய்யப் போறீங்க? ஒண்ணும் பண்ண முடியாது. ஒரு பெண்ணை நித்தம் குடித்துவிட்டுவந்து கணவன் அடித்து துன்புறுத்தலாம். கொடுமை தாளமுடியாமல் அவள் காவல்துறையை நாடலாம்.

“காயமா? வீக்கமா? ஆஸ்பத்திரிக்குப் போனியா? வைத்தியசாலையில இருந்தியா? அப்பிடி ஒண்டும் இல்லையா? போம்மா அவரைக்கூப்பிட்டு புத்தி சொல்லி விடுறம்... சமாதானமாப் போங்க” (அப்ப ஆசுப்பத்திரியில வாட்டில படுக்கிற மாதிரி அடி வாங்கினாத்தான் அவர்களால் ஏதாவது செய்ய முடியும்)

அன்று மாலையில் என்ன நடக்கும்? அன்றைக்கு கொஞ்சம் கூடவே குடிச்சிட்டு வந்தான் கணவன்.

“ஏண்டீ... பொலிசுக்கா போறாய் ந... ஆங்க ஆரோடயடி போனநீ எந்த மாப்பிளையடி சொன்னவன் பொலிசில போய்... என்னையென்ன புடுங்கிறதே” வழமையை விட ரெண்டு அடி கூடத்தான். என்ன செய்ய முடியும் கட்டினவன் அடிச்சா ஆர் கேக்கிறது.

“அப்ப நீங்க கேக்கவே மாட்டீங்களா?”

“கேப்பம். வேணுமெண்டா அவனைத்தூக்கி கொஞ்ச நாளைக்கு உள்ளுக்க வைப்பம்”

(சாதாரண ஏழைக்குடும்பப் பெண்ணின் நிலை? கணவன் இரண்டு நாளைக்கு வேலைக்குப் போகவில்லையென்றாலே... அந்த குடும்பம் படும்பாடு சொல்லும் தரமன்று. உள்ளுக்க போட்டா...? நே...)

“ஏங்க அவனக் கொண்டுபோய் ரெண்டு தட்டுத்தட்டி... திருத்த மாட்டீங்களா?

என் சின்ன வயதில் பக்கத்தில் குடியிருந்த என் சித்தப்பா தன் மனைவியை வீட்டுக்குள் தள்ளிக் கொண்டுபோய் அடித்தார் என்சித்தி கதறினாள். என்அம்மா அங்கே குரல் கேட்டு ஓடிவந்து முற்றத்தில் நின்றவர்களிடம் கெஞ்சினாள் “அண்ணை... போய் மறியுங்கண்ணை பிள்ளைப்பெத்து பமினைஞ்சு நாளாகேல்ல.. ஆத்தை... போய் மறியெணை...” என்கண்களைவிட்டு அகலாத காட்சி அது. வந்து குவிந்து நின்ற பத்துப்பன்னிரண்டு பேரில் யாரும் அவனைத் தடுக்க முயலவில்லை.

“அதெப்பிடி அவன் தன்ர பெண்டிலை அடிக்கிறான். அதுகும் வீட்டுக்கை. நாங்கள் போக ஏலுமா?”

அன்றிரவே என்சித்தி இறந்து போனாள். ‘அடிபடாத இடத்தில பட்டிட்டுதாம்’ என்று பேசிக் கொண்டார்கள். அதைவிசாரிக்க வந்த விதானையார் நல்லா தண்ணி போட்டிட்டு நீ(நி)திநியாயம் கதைத்துவிட்டு போய்விட்டார். ஒரு நீலநிற நோட்டோட.

இப்படிப்பட்ட பெண் கொலைகளுக்கு இன்றும் பஞ்சமில்லை. “என்னால ஏலாதப்பா.. இனி அவனோட வாழ முடியாது” என்று முடிவெடுக்கும் பெண். சமூகத்தால் புறந்தள்ளப்படுகிறாள். சட்டத்தால் எந்தப் பாதுகாப்பையும் வழங்க முடியாது. தேசவழமையோ பொதுச்சட்டமோ விவாகரத்துக்கான காரணத்தை வரையறுத்திருக்கிறது. கணவன் ஆண்மையற்றவன் எனநிரூபித்தல் சோரம் போதல் பெண்ணுக்கு குழந்தைப் பேறு கிட்டாது என உறுதிசெய்யப்படல். இவ்வளவுதான். வேறு எந்தக்காரணத்துக்காகவும் இலங்கையில் விவாகரத்து செய்ய முடியாது. இன்னுமொரு காரணம் உண்டு. ‘வன்ம உறவறுப்பு’ கணவனோ மனைவியோ ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிந்து செல்லல்.

இன்றைய யுத்தச் சூழலில் கணவன் காணாமற் போனால் அல்லது மனைவி காணாமற் போனால் ஒருவருடம் பார்க்க வேண்டியது வரவில்லையோ சரிதான் போவியா... என்றுவிட்டு வேறு திருமணம் செய்து கொள்ளலாமாம். இது இலங்கை அரசின் பொதுசட்டம் அது எங்கள் மக்களில் அநேகருக்கு நட்டம். மனைவி செட்டிகுளம் நலன்புரி முகாமில் இருந்தாள். கணவன் புனர்வாழ்வு முகாமிலோ பூசாவிலோ இருந்தான் ஒரு வருடமாயிற்றா? இளம் மனைவிக்கு செட்டிகுளத்தில் ஒரு புதுக்காதல். கணவனை விட்டு விட்டு ஓடிவிட்டாள். பாவம் அவன் ஒன்றரை வருடத்தில் திரும்பி வந்தபோது அவனுக்குப்பிறந்த குழந்தை அவனிடம் வந்துவிட்டது. அந்தப்பெண் புதியவனின் பிள்ளையை வயிற்றில் சுமந்திருந்தாள். சட்டம் அவனுடைய வாழ்க்கையை முடித்துவைத்தது. (இதே காணாமற் போதலுக்கு காத்திருக்கும் காலம் முன்னர் ஐந்து வருடங்களாக இருந்தது என்று நினைக்கிறேன்.) காணாமற் போவோரைத்தேடுவோரை சமாதானப் படுத்த வந்த புதுச்சட்டம் இது.

பக்கத்தில் படுத்திருக்கும் கணவன் அல்லது மனைவியின் குறட்டை சத்தம் என்னை தூங்க விடவில்லை என்பதற்காகவோ, கணவன் மனைவியை ‘வேசி’ என்றோ ‘நாய்’ என்றோ திட்டினான் என்பதற்காகவோ’ விவாகரத்து பெறமுடியாது. மேற்குறித்த விவாகரத்துக்கள் மேலைத்தேச வழமையாகும். அப்படியானால் பெண்களுக்காக போடப்பட்ட சட்டங்களின் காலத்தையும் நாம் எடுத்துப்பார்த்தால் நாம் முதல் பந்திக்கு போக வேண்டும். 1706ஆம் ஆண்டில் ஒல்லாந்தரால் தொகுக்கப்பட்டு 1806 இலே ஆங்கிலேயாரால் புத்தகமாகஅடிகப்பட்ட தேசவழமைப்படிதான் இன்றைய வாழ்க்கை நடக்கிறதா தோழியரே?

அன்றைய பெண்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவினரே படித்தார்கள். பெண்கள் உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டனர். ஆனால் பெரும்பாலும் பெண்களுக்கு திருமணத்தின் போது காணி, வீடு, நகை என்பன வழங்கப்பட்டு மாப்பிள்ளை பெண் வீட்டுக்கே வந்துவிடும் வழக்கம் வடமாகாணத் தமிழர்க்ளுக்குரியது. எங்கள் பெண்களுக்கு மாமியார் கொடுமையில்லை நாத்தனார் தொல்லையும் இல்லை. மாப்பிள்ளைகள் கொழும்பிலோ கண்டியிலோ வன்னியிலோ வேலை பார்ப்பார்கள். திங்கள் விடிகாலையில் போய் சனி யாழ்ப்பாணம் வந்து... மனைவியுடன் ஒருபொழுது கழிப்பது (எஸ்.பொ.வின் சடங்குபோல) வழக்கம்.

பெண்கள் பெரும்பாலும் படிதாண்டுவதில்லை. அவர்களுக்காக உழைப்பது ஆண்கள்தான். பெண்களின் உழைப்புக்கு மதிப்பும் இல்லை. அவர்கள் குடும்பத்தின் முழுத்தேவைகளையும் பெண்தானே கவனிக்கிறாள். குழந்தை பெற்று வளர்த்து சந்ததியை பெருக்குவதும் அவளே என்பதால் அந்த உரிமையை அவளுக்கு நிலை நாட்டக்கூடிய ஒரு விடயம். தேடிய் தேட்டச்சொத்துகளில் வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு

(தொடர்ச்சி 23இல்......)

அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் அரங்கிற்குள் நுழைவதற்கு முன் அன்றைய களநிலவரம் பற்றி ஆராயவேண்டியது அவசியம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச அரங்கில் பிரபல்யப்படுத்தும் உமாமகேஸ்வரனின் முயற்சி அக்கட்டத்தில் திடீரென முடிவுக்கு வந்தது. இலங்கையில் யூலை மாதம் 1979 இல் நிலையில் திடீர் மாற்றங்கள் உருவாகிற்று. அந்த வருடத்தின் பிற்பகுதியில் தான் பிரபாகரனுக்கும் உமாமகேஸ்வரனுக்கும் பிரிவு ஏற்பட்டது.

தார். இந்த அவசரகாலச்சட்டம் பொலிசாரும், இராணுவத்தினரும் எவரையும் சுட்டுக் கொல்லலாம். அவ்வாறு சுட்டுக் கொலைசெய்யப்பட்டவர்களை எவ்வித பிரேதப் பரிசோதனைகளும் இன்றி அழிக்கவும் அரசு அதிகாரமளித்திருந்தது.

இவ்வாறு அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன வடபகுதி போராளிகளுக்கு அறைகூவல் விடுத்தார். இந்த அறைகூவல் ஏற்கனவே இராணுவத்தினராலும், பொலிசாராலும் தேடப்படுவதாக அறிவிக்கப்பட்ட 200 போராளிகளுக்கு எதிரானகள் வேறுவழியின்றி நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

அவ்வாறு வெளியேறியவர்களில் பிரபாகரன், உமாமகேஸ்வரனும் அடங்குவார்கள்.

அதையடுத்து 31 டிசம்பர் 1979 ஆம் ஆண்டு, யாழ் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பயங்கரவாதிகள் அனைவரையும் ஒழித்துவிட்டதாக கூறி, 70 பக்கங்களைக் கொண்ட இரகசிய அறிக்கை ஒன்றை திஸ்ஸ வீரதுங்க ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிடம் கையளித்தார்.

யாழ்ப்பாணம் வந்து, பயங்கர

சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்த அரசியல் சட்டம் 1972 ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவால் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியரசு அரசியல் சட்டத்தை ரத்துச் செய்தது.

அக்காலத்தில் அமெரிக்காவில் உள்ள மஷாச்சூசெஸ் மாநிலத்தில் அப்போதைய இந்தியாவின் ஜனதாக் கட்சியின் தலைவராக இருந்த டாக்டர் சுப்பிரமணியன் சுவாமியின் மறைமுக உதவியுடன் தமிழீழம் சம்பந்தப்பட்ட ஒரு தீர்மானம் மாநிலத்திலுள்ள பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்து சந்தை மற்றும் கடைகள் அனைத்தையும் யாழ்ப்பாணத்து பொலிஸார்தான் தீக்கிரையாக்கினார்கள் என்று முதலில் கூறினார். அந்த நாசவேலைகளில் ஈடுபட்ட பொலிஸார் சீருடையையோ அவருடைய இலக்கங்கள் கொண்ட பட்டியையோ அணிந்திருக்கவில்லை என்றும் கூறினார்.

அதையடுத்து மீண்டும் சாட்சியம் அளிக்கையில், பழைய சந்தையை பொலிஸார் எரிக்கவில்லை என்று மாற்றிக் கூறினார். மேலும், யாழ்ப்பாணம்பற்றி ஏறுக்கு மாறாக குருசாமி சன்ஸோனி ஆணைக் குழுவுக்கு கொடுத்த சாட்சியங்கள் தமிழ் இளைஞர்கள் மத்தியிலும், தமிழர்கள் மத்தியிலும் கடும் கோபத்தையும் சர்ச்சையையும் உருவாக்கிற்று.

# புலிப் பயங்கரவாதத்தை முறியடிக்க அரசு தீவிர முயற்சி

அரசியல் அரங்கில் இராஜதந்திர குள்ளநரி என்று வர்ணிக்கப்பட்ட அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை எதிர்க் கட்சிக் கூட்டமைப்பில் சேரவிடாமல் திட்டமிட்டு செயற்பட்டு வெற்றியடைந்த பின்னர், ஜெயவர்த்தன தனது யுத்தம் சம்பந்தப்பட்ட காய் நகர்த்தலை ஆரம்பித்தார்.

1979 ஆம் ஆண்டு யூலை இரண்டாவது கிழமை அளவில் பயங்கரவாத தடைச் சட்டம் (தற்காலிகமானது) வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டது.

அதையடுத்து, ஜெயவர்தன அவரது மருமகனான பிரிகேடியர் திஸ்ஸ (புள்) வீரதுங்கவை இராணுவத் தளபதிக்கு அடுத்த பதவியான இராணுவ பிரதம அதிகாரியாக நியமித்தார். அதையடுத்து வடமாகாணத்தின் பிரதம கட்டளைத் தளபதியாக நியமித்து 1979 ஆம் ஆண்டு முடிவதற்குள் வடமாகாணத்தில் பயங்கரவாதத்தை முடிவுக் கொண்டுவர வேண்டும் என்று உத்தரவிட்டார்.

திஸ்ஸ வீரதுங்கவுக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் வருமாறு–

* இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக பயங்கரவாதத்தை அதுவும் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள பயங்கரவாதத்தை முற்றாக முடிவுக்கு கொண்டுவரவேண்டும். அதற்காக அரசியல் சட்டங்களை முழுவதையும் பயன்படுத்த உனக்கு அனுமதி அளிக்கின்றேன். இந்த நாட்டின் சட்டதிட்டங்களை மதிக்கும் அனைவரும் உனக்கு ஆதரவளிப்பார்கள். அந்தப் பொறுப்பை 1979 டிசம்பர் 31இற்கு முன் செய்து முடிக்கவேண்டும். இந்த வேலையை செய்து முடிக்க வேண்டும்.”

இவ்வாறு திஸ்ஸ வீரதுங்கவிற்கு இராணுவ ரீதியான பணிப்புரையை நிறைவேற்ற 12 யூலை 1979 யாழ். மாவட்டத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அதாவது பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் “அவசரகாலச் சட்டம் இல 14 அரச வர்தகமானியில் பிரசுரித்

நடவடிக்கை ஆகும்.

என்னதான் இருந்தாலும், பொலிஸ் இன்ஸ்பெக்ரரான குருசாமியின் கொலைக்குப் பின் பொலிஸாரின் உளவு ஓரளவு முடக்கப்பட்டிருந்தது. ஆனால் இராணுவத்தினரின் உளவு பார்க்கும் வேலைகள் உளவுத்துறை கப்ரன் சரத் முனசிங்கவின் தலைமையில்



— அரசகேசரி —

பலாலியில் இருந்து வடபகுதியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரணதுங்கவிற்கு கீழ் வெற்றிகரமாக இயங்கியது.

பயங்கரவாத தடைச் சட்டம் (தற்காலிக ஷரத்துக்கள்) 20 யூலை 1979 ஆம் ஆண்டு எவ்வித எதிர்புக்களுமின்றி நிறைவேறிற்று. இந்தச் சட்டம் பயங்கரவாதத்தை முளையில் கிள்ளி எறியும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி பல தமிழ் இளைஞர்களை இரவில் சென்று கைது செய்து, துன்புறுத்தி இறுதியில் சுட்டுக் கொலை செய்துவிட்டு, வீதியோரங்களில் அந்தச் சடலங்களைப் போட்டுவிட்டுச் சென்றனர். நிலைமை மோசமடைந்ததை அடுத்து, தமிழ் போராளி

வாதத்தை முறியடிக்கும் பொறுப்பை ஏற்ற பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க அன்று மாவட்ட அதிபராக இருந்த யோகேந்திரா துரைசாமியினுடைய பழையபூங்காவிலுள்ள வாசஸ்தலத்தில் இருந்து, அவரை வெளியேற்றிவிட்டு, அங்கே தங்கியிருந்து, அந்த கட்டடத்தை கைது செய்பவர்களை சித்திரவதை செய்யும் கூடாமாக மாற்றி அமைத்தார்.

பல தமிழ் இளைஞர்களைப் பிடித்துவந்து, அங்கு வைத்திருந்து சித்திரவதைகள் செய்து, துன்புறுத்தி கொடுமைப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

அதையடுத்து, தனது கடமை சம்பந்தமான அறிக்கையை ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு சமர்ப்பித்தார். அவர் சமர்ப்பித்த அறிக்கை மிகவும் அந்தரங்கமானது. அன்று இராணுவத்திற்குப் பொறுப்பாயிருந்த மேஜர் ஜெனரல் டெனிஸ் பரேராவுக்குக் கூட அந்த அறிக்கையின் பிரதியைக் கூட திஸ்ஸ வீரதுங்க சமர்ப்பிக்கவில்லை.

இந்த நேரத்தில் அமெரிக்காவிலுள்ள தமிழர்கள் சிலர், 1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் இணைக்கப்பட்ட அரசியல்

அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய மாநில மக்களவை இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் தீங்குகளுக்கு எதிராக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதியையும், அமெரிக்க பிரதிநிதிகள் சபையையும் கேட்டுக்கொண்டது.

இந்த இலங்கை தமிழ் மக்கள் சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, மஷாச்சூசெஸ் மாநிலத்தின் ஆளுநர் எட்வேட் ஜே கிங் 1979 மே 22ஆம் திகதியை ‘ஈழம் தினம்’ என்று பிரகடனம் செய்தார். இந்தத் தினத்தை ஆளுநரின் காரியாலயத்தில் கொண்டாடுவதற்கு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் தலைவரும், நல்லூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. எம். சிவசிதம்பரத்துக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த ‘ஈழம் தினம்’ பொஸ்ரனிலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது மாநில மக்கள் பிரதிநிதி சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதி ஒன்றும் திரு. சிவசிதம்பரத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இவ்வாறு தமிழர்களுக்காக வெளிநாடுகளில் வழங்கப்படும் ஆதரவு, சிங்கள அரசியல் தலைவர்கள் மத்தியில் தமிழர்களுக்கு எதிரான எதிர்ப்பைத் தீவிரமடையச் செய்தது.

இந்தக் காலத்தில் தான் வவுனியாவிலுள்ள சிங்களப் பகுதியினை அநுராதபுர மாவட்டத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்தனர். ஆனால், தமிழ் இளைஞர்கள் நாடாளுமன்றத்தை நிரந்தரமாக பகிஷ்கரிக்குமாறு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினரிடம் வற்புறுத்தினர்.

அப்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக சன்ஸோனி ஆணைக்குழு முன்பு பொலிஸ் இன்ஸ்பெக்ரர் குருசாமி சாட்சியம் வழங்கினார்.

குருசாமி ஒரு துரோகி என்றும், எட்டப்பன் என்றும், காட்டிக் கொடுப்பவன் என்றும் அழைக்கத் தொடங்கினர். அதையடுத்து, ரெலோ இயக்கத்தினர் குருசாமியை கொலை செய்ய முடிவு எடுத்தனர். அதன் பிரகாரம் குட்டிமணி, ஜெகன், ஒப்ரோய் தேவன் ஆகிய மூவர் அடங்கிய குழு ஒன்றை அமைத்தனர்.

குருசாமியை கொலை செய்யும் பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸ் இன்ஸ்பெக்ரர் குருசாமியினுடைய வீடு ஓட்டுமடம் யாழ்ப்பாணத்தில் இருந்தது. அவரைக் கொலை செய்யும் நோக்கத்துடன் ரெலோ குழுவினர் அவரது வீட்டிற்குச் சென்ற பொழுது, பக்கத்து வீட்டில் ஒரு திருமண வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

குருசாமி வீட்டிற்குச் சென்று குட்டிமணி கதவைத் தட்டினார். அவ்வாறு கதவைத் தட்டும் பொழுது குருசாமி வந்தால் அவரை, ஒப்ரோய் தேவன் சுட வேண்டும் என ஏற்பாடு செய்திருந்தனர். அவரை சுடுவதற்கு தேவன் கைத்துப்பாக்கியுடன் தயாராக இருந்தார்.

குருசாமி கதவைத் திறந்து வந்தபோது, தேவனுக்கு இது முதல் கொலை என்பதால் தேவனின் துப்பாக்கி பிடித்திருந்த கை பயத்தில் உதறத்தொடங்கியது. அதைப் பார்த்த குட்டிமணி “சுடடா” என்று உத்தரவிட்டார். அப்பொழுதும் தேவனின் துப்பாக்கி பிடித்திருந்த கை உதறிக் கொண்டே இருந்தது. சினம் அடைந்த குட்டிமணி “டேய் சுடடா” என்று பலத்த குரலில் கத்தினான்.

தேவன் நடுக்கத்துடன் துப்பாக்கியின் விசையை அழுத்தினான். குண்டு பாய்ந்து இன்ஸ்பெக்ரர் குருசாமியின் மார்பைத் துளைத்தது.அவர்அந்த இடத்திலேயே மரணமடைந்தார்.

அதேசமயம், பக்கத்து திருமண வீட்டில் பட்டாசு வெடிகள் வெடிக்க ஆரம்பித்தன. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, குருசாமியை சுட்ட கொலையாளிகள், அவர்கள் வந்த ஈருருளியில் தப்பியோடினார்கள்.

தொடரும்

*(கடந்தவார தொடர்ச்சி.....)*

இவற்றையெல்லாம் நாகலிங்கம், இவ்வளவு தெளிவாக கூறுவார் என்பதை கொழும்பு வியாபாரி எதிர்பார்க்கவில்லை. அவர் மேலும் கேள்விகள் கேட்கவும் விரும்பவில்லை. சரவணனுக்கு ஆனந்தமாக இருந்தது. கொழும்பு வியாபாரியின் முகத்தைப் பார்த்தான். தலையை ஒரு உன்னல் உன்னினான். இதற்கு என்ன கூறுகிறீர் என்பது போல் இருந்தது அவன் தலையசைப்பு. கொழும்பு வியாபாரியின் முகத்தை இருவரும் பார்த்தனர். அவர் ஏதாவது கூறியே ஆகவேண்டும் போல் தொடர்ந்தார்.

"அதுக்கென்ன, நாங்கபோய் அவங்கட இடத்தில் இருக்கிறம், அவங்க வந்து, எங்கட இடத்தில் இருந்தால் என்ன?"

"சும்மா வந்து இருக்கிறது வேற பாருங்கோ. கபட எண்ணங்களோட எங்கட பூமியை அபகரிக்கிறது வேற, அவன்கள் இதைத் தான் செய்யிறான்கள்." என்றார் நாகலிங்கம்.

கொழும்பு வியாபாரி கொழும்பிலேயே இருப்பவர். அவர் யாழ்ப்பாணம் சென்று வருவது கிடையாது. அங்கு போனால் பலர் உதவி கேட்டு வருவார்கள். காலம் செய்த சதியால் கப்பலில் யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருக்கின்றனர்.

"நாங்கள் கண்மூடித்தனமாகக் கடைபோட்டுக் கொண்டு திரிந்தால் இருக்கிறத்துக்கு இடமில்லாமல் அலைய வேண்டிவரும். இப்படி, எத்தனையோ பேருக்கு உலகத்தில் நடந்திருக்கு" என்றார் நாகலிங்கம். கொழும்பு வியாபாரியை உற்று நோக்கிக் கொண்டு. "ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட பொழுது இலங்கை மக்கள், பிரித்தானிய சாம்ராச்சியத்தின் குடிகள் என்றே கருதப்பட்டனர். ஆங்கிலேயர் இங்கிருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டதும் சுதந்திரம் தந்து விடுவதாகக் கூறிய பேச்சுவார்த்தைகளில் இறங்கினார்கள். அப்போது ஆங்கிலேயரைப் பொறுத்தவரையில் தங்கள் தேயிலை, ரப்பர் தோட்டங்களையும், வியாபார நிறுவனங்களையும், விமானப்படை, கடற்படைத்தளங்களையும் எவ்வாறு தொடர்ந்து வைத்திருக்கலாம் என்பதே பிரச்சினை. மற்றைய பிரச்சினைகள் பற்றி அதிக அக்கறை கொள்ளவில்லை. இனங்களின் தனித்தன்மை பற்றியோ, அவற்றிற்கு மத்தியில் இருக்கும் பிரச்சினைகள் பற்றியோ அதிக அக்கறை இருந்திருக்க முடியாது. அதுமாத்திரமல்ல, இவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்தியவர்களும் பல்வேறு காரணங்களால் மேற்கத்தைய சிந்தனையில் ஊறிப்போய் ஆங்கிலேயருக்கு மனதால் அடிபணிந்து போனவர்கள். ஆங்கிலேயப் பெண்களை மணந்து ஆங்கிலேயருடன் ஒன்றிப் போனவர்கள். ஆங்கிலேயர் தங்கள் சௌகரியங்களை பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டபின் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு என்ற அடிப்படையில் பல கட்சிகள் போட்டியிட்டு அதிக நபர்களைப் பெறும் கட்சி ஆட்சியை அமைக்கும் என்று கூறிவிட்டு இவற்றை மேற்பார்வை செய்வதற்கு மகாராணியின் பிரதிநிதி என்று ஒருவரையும் கைவிட்டுச் சென்றுவிட்டார்கள். இதுகாலவரைக்கும், ஆங்கில ஆட்சியில் வெளிவரமுடியாமல் திணறிக்கொண்டிருந்த இடதுசாரிகள் வெளிப்பட்டு ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். வறுமையில் வாடிய தொழிலாளர்களும், இலங்கைக் கிராம மக்களும், இடதுசாரிகள் பக்கம் அனுதாபத்தைக் காட்டத்தொடங்கினர். தங்கள் நிலமைகளைக் காப்பாற்றிக் கொண்டு,




ஆங்கிலேயர் விட்டுச் சென்ற லௌகீக வாழ்க்கை முறைக்கும் அவர்களின் போக்குகளுக்கும் உடந்தையாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உட்பட்டவர்களால் இடதுசாரிகள் இலங்கைமக்களைத் தட்டியெழுப்புவதைச் சகிக்கமுடியவில்லை. இவர்களுக்கு மக்களின் ஓட்டு பெறுவதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. தமி ழனை விரட்டு!"

நாகலிங்கம் கொழும்பை அடுத்த கடகந்தையில் சுருட்டுக்கடை வைத்திருந்தார். 1930 ஆம் ஆண்டிலேயே போய்விட்டார். யாழ்ப்பாணத்தில் இருந்து சுருட்டு ரெயிலில்வரும். அந்தக்கிராமத்தில் இருந்தவர்கள் எல்லாம் ஏழை விவசாயிகள்தான். தேர்தல் காலங்களில் இந்த அரசியல்வாதிகள் கூட்டம் போடுவார்கள். கிராம மக்கள் கூடுவார்கள். சிறுவர்கள் மேடைக்கு முன்னால் வட்டமாக உட்காருவார்கள். பேசத்தொடங்குவார்கள். "தாய்மார்களே, பெரியவர்களே வணக்கம். இந்தப் பறத்திமிழ்ர்களின் தோலை உரித்துச் செருப்புத் தைத்து எமது காலில் போடாவிட்டால் நீங்கள் இருந்து பாருங்கள். ஒரு தமிழரையும் இங்கு வைக் கக்கூடாது. இந்தியாவுக்கு விரட்ட வேண்டும். நீங்கள் இந்த நிலையில் இருப்பதற்கு இவர்கள்தான் காரணம்" இவ்வாறுதான் அவர்கள் பேச்சுக்கள் அமையும். கைதட்டல் வாணைப் பிளக்கும்.

இந்த வகுப்புவாதக் காலையில் முன்னணியில் நின்றவர்களில் முக்கியமானவர் கே.எம்பி.ராஜரட்ணா. இவர் தனக்கென கட்சியை வைத்துக்கொண்டார். பின்பு இன்று ஆட்சியிலிருக்கும் கட்சியில் சேர்ந்து கொண்டார். ஆர்.ஜி. சேனாநாயக்கா, முன்னைய பிரதமர் டட்லி சேனநாயக்காவின் உறவினர். இதே பேன்ற வகுப்புவாத பேர்வழிகள், அரசாங்கங்களில் மந்திரியாக இருந்துகொண்டுவகுப்புவாதத்தைக் கக்கிக் கொண்டிருப்பார்கள்.

தற்போது அமைச்சராக இருப்பவர்களிலும் இந்தப் பணியைத் தொடர்பவர்கள் இருக்கிறார்கள். கடந்த யூஎன்.பி.அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும் அரசாங்கத்தில் சேர்ந்திருந்ததனால் இதனை வெளிப்படையாகக்காட்ட முடியவில்லை. ஆயினும் இன்றைய ஜனாதிபதியாக இருக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழர் கோரிக்கைக்கு அடிக்கடி எதிர்ப்புத் தெரிவித்துக் குறுகிய சிங்கள இனவாதத்தின் பிரதிநிதியாகக் காட்டிக் கொண்டார். இவர் சிங்கள இன வாதத்துடன், தன்னை ஆரம்பகாலம் முதலே பின்னிப்பிணைந்து வந்துள்ளதால் இவர் தமிழர்களுக்குச் சாதகமாக எதைக் கூறினாலும், தமிழர்கள் நம்பும் நிலையில் இல்லை. அதேபோல் சிங்கள மக்களும் இவர் தமிழர்களை ஏமாற்றுவதற்காகவே இப்படிக் கூறுகிறார் என்று உடன் விளங்கிக் கொள்கிறார்கள்.

கடகந்தையில் ஒரு சிறு மைதானம் அதில்தான் கூட்டங்கள் நடக்கும். இந்த அரசியல்வாதிகள் வந்து தங்கள் உயர்ந்த சிந்தனைகளைப் பொழிந்துவிட்டுப் போய் விடுவார்கள். அங்கு கூட்டத்திற்குச் சென்ற சிறு வட்டங்களெல்லாம் அடுத்தநாள் நாகலிங்கத்தின் கடைக்குமுன் கூடுவார்கள் நாகலிங்கத்தின் கடைமிகச் சிறியது. ஐந்தடி நீளம் ஐந்தடி அகலம், முன்னால் ஆறு போத்தல்கள். அதில் நாலில் விதவிதமான யாழ்ப்பாணச் சுருட்டு, மற்ற இரண்டு போத்தல்களிலும் இனிப்பு. கடைக்கு முன் இரண்டு வாங்குகள். மேற்சாரளம். இறக்கிவிட்டிருந்தார். இந்த வட்டங்களெல்லாம் கடைக்கு முன் வந்து நின்றுகொண்டு நாகலிங்கத்தைப் பார்த்துக் கதைத்துக் கொண்டிருப்பார்கள். கடகந்தையில் ஒரே ஒரு தமிழர் நாகலிங்கந்தான்.

"மேதியன சல்லி ஒக்கம, மேயா தமாய் அரங்யனவாலு" (இங்க இருக்கிற காசெல்லாம் இவன்தான் கொண்டு போகிறவன்)

நாகலிங்கம் மேசைக்குப் பின் இருக்கும் கதிரையில் இருந்து இவற்றைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

"அமகல வன்டோன" (தோலை உரிக்கவேணும்)

"கோமத அமகலவன்ன" (எப்படித் தோலுரிக்கிறது)

நாகலிங்கத்தின் தோலை எப்படி உரிக்க வேண்டுமென சர்ச்சைகள் ஏற்படும்.

"எலுவாட்ட அமகலவன்னேக்க தக்கலா தீயனவாத" (ஆட்டுத்தோல் உரிக்கிறது பாத்திருக்கிறாயா? அது மாதிரி செய்ய வேணும்) ஒரு பையன் கூறுவான்.

"தெக்கலாந கோமத?" (பார்க்கவில்லை) எப்படி என்று மற்றொரு பையன் கூறுவான்.

"கை, கால்களைச் சேர்த்துக் கட்டிப் போட்டு ஆளைக்கீழேவிழுத்திக் கழுத்தை அறுக்க வேணும். பிறகு தலை கீழாகக் கட்டிப் போட்டுக் காலில் இருந்து உரிக்கத் தொடங்கவேணும்."

"பிறகு"

"தோலுக்கு உப்புத் தடவி காய வைக்கவேணும். பிறகு வெட்டி வெட்டி செருப்பு தைக்கிறது."

"ஏமத" (அப்படியா) என்று மற்றவர்களும் மனத்திருப்தியைக் காட்டிக்கொள்வார்கள். நாகலிங்கம் எல்லோரையும் கூப்பிட்டு ஒவ்வொரு இனிப்புக் கொடுத்து அனுப்பிவிடுவார்.

கடகந்தையில் நாகலிங்கத்திற்குத் தெரிந்த நண்பர்களும் இருந்தனர். இதில் ராலாமி, என்று அழைக்கப்படும் கிழவரும் ஒருவர். நாகலிங்கத்துடன் நெடுங்காலமாகத் தொடர்பு வைத்திருக்கிறார். ஊர் நடப்புக்கள், நாட்டு நடப்புக்கள் பற்றி நாள்தோறும் வந்து வாங்கில் இருந்து கொண்டு பேசிக் கொண்டிருப்பார். நாடு எப்படிப் போகிறதே என்று அடிக்கடி மனம் நொந்து கொள்வார்.

அருளர்

கலவர நிலை ஏற்பட்டதும் முதலில் அந்தக் கிழவர் வந்து கடையைப் பூட்டி விட்டுத் தன்னுடன் வருமாறு நாகலிங்கத்தைக் கூப்பிட்டார். நாகலிங்கம் முதலில் மறுத்தாலும் ராலாமி நாகலிங்கத்தை வற்புறுத்தி அழைத்து வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் வைத்திருந்தார். அகதிகள் முகாம் தொடங்கப்பட்ட செய்தி கிடைத்ததும், ராலாமி ஒரு காரைப் பிடித்து, வேறு இருவரையும் துணைக்குக் கூட்டிக்கொண்டு நாகலிங்கத்தை அகதிகள் முகாமில் சேர்த்துவிட்டுப் போனார்.

நாகலிங்கத்தினுடைய கதைகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத கொழும்புக் கடைக்காரர், கதைக்காமல் மௌனமாக இருந்த மற்றொரு வாலிபனோடு கதையைத் தொடுத்தார்.

"தம்பி நீர் யாழ்ப்பாணம் எந்த இடம்?"

"நாரந்தனை"

"நாரந்தனையோ... நாரந்தனை ஆர்ர மகன்?"

"சூசைப்பிள்ளையின்ர மகன்"

"எந்த சூசைப்பிள்ளை?"

"நடுநாரந்தனை"

"அட இவன் புட்டுத்தின்னி... புட்டுத்தின்னியின்ர மகனா நீ?"

கொழும்பு வியாபாரி, நாகலிங்கத்தைப் பார்த்து "புட்டுத்தின்னி சூசைப்பிள்ளையும், நானும் ஒன்றாகப் படித்தனாங்கள்"

"புட்டுத்தின்னி சுகமா இருக்குதா?", மீண்டும் வாலிபனைப் பார்த்துக் கேட்டார். கொழும்பு வியாபாரியின் எதிர்பாராத தாக்குதலால் வாலிபன் திணறிப்போனான்.

ஆம் என்பதற்கு அடையாளமாக தலையை அசைத்தான். காற்சட்டையும், மேற்சட்டையும் போட்டிருந்தான். விலையுயர்ந்த மணிக்கூடும் கட்டியிருந்தான். இந்தக் கதைகளை காதில் போட விரும்பினவனாகத் தெரியவில்லை. கொழும்பு வியாபாரி தொடர்ந்தார்.

"நீ என்ன கொழும்பில வேலை பார்க்கிறீயே?"

"இல்லை"

"அப்ப"

"குவைத்துக்குப் போறத்துக்கு வந்தனான். பிளேன் எடுக்க ஏலாமப் போச்சுது; திரும்பிப்போறன்."

"குவைத்தில் என்ன வேலை?"

"கொன்ஸ்ரக்சன்"

"பிறகென்ன... நீ வீரன்தான்; இந்தப் பொடியன்கள் மாதிரி விசர் பிடித்துத் திரியாமல் எங்கையெண்டாலும் ஓடித்தப்புறது தான் கெட்டித்தனம்."

நாகலிங்கம் குறுக்கிட்டு மெதுவாகச் சொன்னார். "அது சரி... இப்படியே எல்லோரும் ஓட மிச்சம் இருக்கிற கிழடு கட்டைகளை ஏறி மிதிக்க ஒரு ஆமிக்காரன் போதும். இதெல்லாம் அழிவுக்குப் பாருங்கோ."

"அப்படிச் சொல்லாதேயுங்கோ; அங்க உழைக்கிற மாதிரி இங்க உழைக்கஏலுமே? இங்க வேலையா இருக்க செய்யிறதுக்கு."

மெதுவாக நாகலிங்கம், "என்ன வேலை கண்டறியாத வேலை" நிறுத்தி விட்டு தொடர்ந்தார். "வயலுக்க போய் இறங்கவேணும் பாருங்கோ."

"என்ன வயல் இந்த நாளையில ஒரு கோடாலி தீட்டுறத்துக்கும் அரசாங்க அதிபரட்ட போமிற் எடுக்க வேண்டியிருக்கு. வயல் என்னெண்டு செய்யிறது."

கொழும்பு வியாபாரி சொல்வதில் உண்மை இருப்பதைத் தெரிந்தும் நாகலிங்கம் விட்டுக் கொடுக்க மனமில்லாமல், "கோடாலி என்னத்துக்கு... வயல் செய்யிறதுக்கு."

*(தொடர்ச்சி 19 இல்......)*

# மதுவால் அடிமையானோருக்கு மறு வாழ்வளிக்கும் குருந்தம்

என்.கே.குலசிங்கம்

மாணிக்கவாசக சுவாமிகள் குருந்தம் மரநிழலில் அமர்ந்திருந்தே ஞானம் பெற்றார். அதேமாதிரி மதுவுக்கு அடிமையாகி மதிமயங்கிய நிலையில் பல சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு அவலம் நிறைந்த வாழ்வை மேற்கொண்டு வந்தவர்களும் குருந்தம் என்னும் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்கள் மீண்டும் மனிதர்களாக வெளியேவரமுடியும் என்பதை குருந்தம் நிரூபித்துக் காட்டியுள்ளது. பொருத்தமான பெயராகவே இந்நிலையத்திற்கு குருந்தம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

குடியால் குடியைக் கெடுத்தவர்கள் குருந்தத்தின் நிழலால் மீண்டும் உயிர் பெற்றுள்ளார்கள்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பின்புறமாக உள்ள கட்டடப்பகுதியில் அமைதியே உருவாக அமைந்துள்ளது குருந்தம் சிகிச்சை நிலையம். இங்கே சிகிச்சை பெற்றுக் குணமாகி வெளியேறியவர்கள் பலர். மீண்டும் குடிப்பதில்லை என்னும் திடசங்கற்பத்தோடு குருந்தம் நிலையத்தை விட்டு இவர்கள் புறப்பட்டவர்கள். பெரும்பாலானவர்கள் திருந்தி சமூகத்தில் இணைந்து நல்லபடியாக ஒழுங்காக வாழ்ந்து வருகின்றார்கள்.

ஒரே தடவையில் எட்டுப்பேர் குருந்தத்தில் தங்கிக் கொள்ளமுடியும். ஒரு பகுதியில் இரண்டுபேர் விகிதம் நான்கு விடுதிகளிலும் எட்டுப் பேர் தங்கி சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

தாமாகவே விரும்பிக் குருந்தம் நிழலுக்கு வருபவர்களாக அங்கு சிகிச்சைக்கும் பயிற்சிக்கும் வருபவர்கள் இருக்க வேண்டுமே தவிர கட்டாயத்தின்பேரில் இம் மனிதர்கள் இங்கே தங்கமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளநளமருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி எஸ்.சிவயோகன் குருந்தத்திற்கு மேற்பார்வையாளராக உள்ளார். விடுதிப் பொறுப்பாளராக வைத்திய கலாநிதி ஏ.விநோதா கடமையில் உள்ளார். அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அஜந்தா, உளவளத்துணையாளர் எஸ்.கதிர்காமநாதன் ஆகியோருடன் நான்கு பெண் பரிசாரகர்களும் குருந்தத்தில் உள்ளனர்.

வடமாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் இங்கு சிகிச்சைக்காக பலர் வருகின்றனர். வவுனியாவிலிருந்து வந்த இளவயது இளைஞன் ஒருவனை இங்கு சந்திக்க நேர்ந்தது. பெற்றோருக்கு இவர் ஒரே ஒரு செல்லப்பிள்ளை. வவுனியாவில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் இவர் கல்வி கற்றார். கனிஷ்ட பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் 7ஏ, 2பீ, சீ எடுத்து சாதனை படைத்த மாணவன். கணிதத்துறையில் உயர்தரம்படித்தான். ஆனால் துரதிஷ்டவசமாக கெட்ட நண்பர்களின் சகவாசம் கிடைக்கப் பெற்றதனால் இவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகினான். இதனால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு இம் மாணவன் முகம் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் முக்கியமாக இவனது கல்வி பாதிப்படைந்தது. பின்னர் குருந்தத்தைப் பற்றி கேள்வியுற்று இவன் அங்கு இணைத்துக்கொள்ளப்பட்டான்.

இருவாரங்களுக்குமேல் தங்கியிருந்து உளநல வளவாளர்கள் மற்றும் வைத்தியர்களினால் குணப்படுத்தப்பட்டு தற்போது குணமடைந்துள்ளான். மதுவை இனிமேல் தொடமாட்டேன் என இவன் சத்தியம் செய்துள்ளான். மனிதனாக சமூகத்தில் வலம் வருவேன் என்பது இவனது திடசங்கற்பமாகும்.

இன்னொரு தவில் வித்துவான் குருந்தத்தில் இருந்தார். மது பாவனை இவரைப் பலவழிகளிலும் பாதித்திருந்தது. தவில் வாசிப்பதில் மிகப்பெரும் வித்துவத்தன்மை இவரிடம் இருந்த போதிலும் அளவுக்கு மிஞ்சிய போதைப் பாவனையால் இவரது வெளிநாட்டுப் பயணங்களும் தடைப்பட்டுப்போயின. குருந்தத்திற்கு வந்ததற்கு பின்னர் மதுவை விட்டு நீங்கினார். மதுவெறுப்பு சிகிச்சைகள் உளவளத் துணையாளர்களின் தொடர் பயிற்சிகள் வைத்தியர்களின் ஆலோசனைகளின் பேரில் நல்லபடியாகத் திருந்தி வீடுதிரும்பியுள்ளார். இவரது மகள் ஒருவர் ஆசிரியையாக உள்ளார்.

மது வெறுப்பு சிகிச்சைக்காக சிலர் நீதிமன்றங்களினால் கூட குருந்தத்திற்கு அனுப்பப்படுகின்றார்கள். இவர்கள் தகுந்த உளநலப் பயிற்சிகள் மூலம் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு இனிமேல் மதுவை தொட்டுக்கூடப் பார்க்கமாட்டேன் என்னும் சத்தியத்துடன் குருந்தத்தை விட்டு வெளியேறி உள்ளனர்.

இங்கு பயிற்சிக்கும் சிகிச்சைக்கும் வருபவர்கள் பாதுகாப்புக்கருதி பெறுமதியான பொருட்கள் வைத்திருத்தல் தவிர்க்கப்பட்டுள்ளது. புகைபிடிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்கியிருக்கும் விடுதி மற்றும் சுற்றுச் சூழலை துப்புரவாக வைத்திருக்க வேண்டியது இவர்களது பொறுப்பாகும். இவர்களுக்கான உணவு, உறையுள், தண்ணீர், மருந்து, மின்சாரம், தங்குமிடம் யாவும் இலவசம். ஆனால் இவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளான பாவனைப் பொருட்களாகிய உடைகள், துவாய் செருப்புக்கள், சீப்பு சவர்க்காரம் போன்றவற்றை அவர்களே உடன் எடுத்து வரவேண்டும் என்பது கட்டாயமாகும். வெளியில் வாங்கவேண்டிய மருந்துகள் வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியாத ஆய்வுகூடப் பரிசோதனைகள் விசேட உணவுவகைகள் மற்றும் அவசியத் தேவைகளுக்கான சில பொருட்களை குருந்தத்தில் தங்கிப் பயன்பெறும் பயனாளிகள் தாங்களே தங்கள் பணத்தில் வாங்கிக் கொள்ளல்வேண்டும்.

குருந்தத்தில் தங்கி சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட வீடு திரும்பும் ஒருவர் குருந்தம் பணியாளர்களினால் மேற்கொள்ளப்படும் ஒரு வருட மாதாந்த வீட்டுத் தரிசனத்தை சந்திப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும். மாதாந்தம் போயாதினத்தில் நடைபெறும் அனுபவப் பகிர்வுடன் கூடிய குழுச்சிகிச்சைக்கு தவறாது சமூகமளிக்கவேண்டும். மாதாந்த சந்திப்புக்களின்போது



பயனாளி தனது தாய், மனைவி, வளர்ந்த பிள்ளைகள் அல்லது ஒரு நலன் விரும்பியையாவது தன்னுடன் அழைத்து வரவேண்டும் என்பது அவசியம்.

மதுவினால் சீரழிந்த குடும்பங்கள் ஏராளம். கவலையை மறப்பதற்காக குடிக்கிறேன் எனவும் வீட்டுத் தொல்லைகளினால், காதல் தோல்விகளினால், குடும்பச்சுமைகளினால் மதுவுக்கு அடிமையானேன் எனக் கூறுபவர்கள் அதிகம். இவற்றையெல்லாம் சாட்டாக வைத்து உழைப்பதையெல்லாம் குடித்துக் கும்மாளமடித்து குடும்பத்தில் மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்தி குழப்பத்தை உண்டாக்கியவர்களே நாட்டில் அதிகளவில் காணப்படுகிறார்கள். கவலைகளை மறப்பதற்கு தொல்லைகளை நீக்குவதற்கு குடிப்பதுதான் சரியான மார்க்கமா என்பதை இப்பிறவிகள் எண்ணிப் பார்க்கவேண்டும். குழப்பங்களை களைவதற்கு குடியைத்தவிர வேறு ஏராளமான வழிவகைகள் உள்ளன என்பதை இப் புதுமையான மனிதர்கள் உணர்ந்து கொள்ளவே மாட்டார்களா?

குருந்தத்தில் அனுமதிக்கப்படும் முன்னர் ஒருவர் குறைந்தது ஐந்து நாட்களாவது குடியினை நிறுத்தி அதனால் ஏற்படும் விடுபடல் அறிகுறிகளுக்கு சிகிச்சை பெற்றிருத்தல் வேண்டும். குருந்தத்தில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பயனாளியின் தாய், பிள்ளைகள், மனைவி, அல்லது ஒரு நலன்விரும்பி குருந்தத்திற்கு வருகை தந்து தேவையான குழுமற்றும் தனிச் செயற்பாடுகளில் பங்குகொள்வது அவசியமானதாகும்.

ஒருவர் குருந்தத்தில் தங்கியிருக்கும் போது அனாவசியமற்ற அல்லது ஆபத்து நிறைந்தவர்கள் இவரை சந்திப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் பழவகைகள், பழச்சாறுகள், கூழ், சூப்வகைகள், காய்கறிகள், புரதச்சத்து நிறைந்த தானிய உணவுகள் போன்றவற்றை வழங்கலாம். உறைப்பான பதார்த்தங்களை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

மதுவினால் தமது வாழ்வையும் குடும்பத்தையும் சீரழித்தவர்கள் பலர். இவர்களில் பலர் தாமாகவே முன்வந்து குருந்தம் நிழலில் தங்கியிருந்து புனர்வாழ்வு பெற்றுச்செல்வது வரவேற்கத்தக்கது. அவர்களை அன்புக்கரம் நீட்டி வரவேற்று அபயம் கொடுத்து அரவணைத்து அவர்களுக்கு உரிய சிகிச்சைகள் உளவளத்துணை அளித்து குணப்படுத்தி அனுப்பும் குருந்தத்தின் சேவை அளப்பரியது. பாராட்டுக்குரியது.

குருந்தத்தின் வளங்கள் மற்றும் சேவைகளை விரிவாக்குவதற்கு உதவ விரும்பும் நல்ல உள்ளங்கள் குருந்தத்தின் முகாமையாளரைத் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## சேர்.பொன் இராமநாதன்

# இலங்கையர்களின் ஏகோபித்த பிரதிநிதி

புதிதாக அமைக்கப்பட்ட சட்ட நிர்வாக சபையின் முதல் அமர்வு 16 ஜனவரி 1912 ஆம் ஆண்டு, நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் முதல் அமர்வு நீண்டதூர சுதந்திர ஒளிக் கீற்றாக பரிணாமித்தது.

மேலும், நாட்டின் சுய ஆட்சிக்கும், சுதந்திரத்திற்கும் வித்திடுவதாக இந்த புதிதாக அமைத்த நிர்வாக சபையின் அமர்வு அமைந்தது.

நீண்டகாலமாக, 1505 ஆம் ஆண்டு முதல் போர்த்துக்கேயர இந்த நாட்டில் காலடி எடுத்துவைத்த காலம் தொடக்கம், 1911ஆம் ஆண்டு வரை பிற நாட்டின் அடக்கு முறைக்கு உட்பட்ட நாடாகவே இலங்கை இருந்து வந்தது.

ஆனால் 1911ஆம் ஆண்டிற்குப் பின் நம்பிக்கையூட்டுவதாகவும், ஒளிமயமான எதிர்காலத்திற்கான அறிகுறியைக் கொண்டதாகவும், அந்தச் சட்ட நிர்வாகசபை அமைக்கப்பட்ட பின்னர் தென்பட்டது.

திருத்தியமைக்கப்பட்ட சட்டநிர்வாக சபையில் 23 உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால் இதற்குமுன் இருந்த சட்டநிர்வாக சபையில் 15 பேர்களே இருந்தனர். புதிய 23 பேர்கள் கொண்ட சட்டநிர்வாக சபையில் 13 பேர்கள் உத்தியோகபூர்வமாகவும், 10 பேர்கள் உத்தியோகப்பற்று அற்றவர்களாகவும் இருந்தனர்.

இந்த உத்தியோகபற்றற்றவர்களில் அறுவரை தேசாதிபதி நியமித்தார். மீதி நான்கு பேரும் மட்டுப்படுத்தப்பட்ட வாக்கெடுப்பினால் தெரிவு செய்யப்பட்டனர். பொன்னம்பலம் இராமநாதன் படித்த இலங்கையர்களால் தெரிவு செய்யப்பட்டார்.

அலெக்சாண்டர் பேயர்லெக், ஐரோப்பியரின் நகர் பகுதி நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதியாகவும், எட்வேட் றோசிலிங், ஐரோப்பியரின் கிராமப்புற நலன்களை பிரதிநிதித்துவம் செய்ய தெரிவு செய்யப்பட்டார். மேலும், ஹெட்ரர் வில்லியம் வான் கைலன்பேர்க் பறங்கியர்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கான பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் புதிய சட்ட நிர்வாகசபை மாற்றங்களைப் பற்றி அன்றைய தேசாதிபதி மல்க்கலம் குறிப்பிடுகையில், "இது ஒரு வீணான சீர்திருத்தம். எவ்வித அனுபவமும் இல்லாத இலங்கையர் கைவசம் இந்த காலணித்துவ அரசாங்கத்தின் ஓரளவு நிர்வாகத்தை ஏன் வழங்கினார்கள்?" என்று குறைப்பட்டுக்கொண்டார்.

இந்த புதிய சீர்திருத்தத்தின் பிரகாரம், இதற்கு முன்னர் ஆறு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால், இப்பொழுது 10 உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், போர்த்துகேயர் 1505 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த காலம் தொடக்கம் இன்றுவரை இம்முறை தான் மக்களால் புதிதாக தெரிவு செய்யப்பட்ட நான்கு பிரதிநிதிகள் சட்ட உறுப்பினர்களாக இருப்பதேயாகும்.

அதுவரை காலமும் "சட்டங்கள் உருவாக்குவதில் உங்களுக்கு எந்த விதமான சுதந்திரமும் கிடையாது," பிரித்தானிய காலணித்துவ ஆட்சிமுறை அமைந்திருந்தது. அதற்கு இலங்கையர்கள் விருப்பமின்றி அடிபணிந்தனர். ஆனால், மக்கள் தங்களின் அதிகாரங்களின் படி உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் அதிகாரங்களைப் பற்றித் தெரிந்துகொண்டார்கள். அதன்படி, சட்டங்களை உருவாக்குபவர்களை தங்களின் கீழ் எவ்வாறு கொண்டுவர வேண்டும் என்றும் தெரிந்து கொண்டார்கள்.



இது தேசியத்தின் ஒரு வெற்றி. இந்த வெற்றி தேசிய ஒருமைப்பாட்டினால் இடம்பெற்றது. ஜனநாயகத்தின் வெள்ளவாய்க்கால் திறக்கப்பட்டது. அதையடுத்து, மக்களே தங்கள் சொந்தத் தேசத்தின் எசமானர்கள் என்ற கோட்பாடு படிப்படியாக வேரூண்டத் தொடங்கிற்று.

1879ஆம் ஆண்டில் முதன்முதலில் பொன்னம்பலம் இராமநாதன் தமிழ் பேசும் மக்களின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகப் பற்றற்ற ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தர். இருந்ததிலும் பார்க்க, 1912 ஆம் ஆண்டில் படித்த இலங்கையர் சார்பில் நியமிக்கப்பட்ட பின்னரான நாட்டிற்கும் வேறுபாடுகள் நிறைய இருந்தன.

பொன்னம்பலம் இராமநாதன் 1879 ஆம் ஆண்டில் இளைஞர் – 28 வயது நிரம்பியவர் அன்றுதான் முதன்முதலில் சட்டநிர்வாக சபையில் நுழைந்தார்.

அவரது சிறப்பு மிக்க மாமனாரான சேர்.முத்துக்குமார சுவாமி காலமானதை அடுத்து அந்த வெற்றிடத்திற்கு அவர் நியமிக்கப்பட்டார்.

"பயத்தில் இருந்து விடுதலை பெறுவதே முக்கியமான மனித உரிமை," என்ற கொள்கை கொண்ட இராமநாதன் அந்த வயதிலேயே நியமன உறுப்பினரான அவர், ஏதாவது மசோதாக்கள் நிர்வாக சபையில் அறிமுகப்படுத்தும் பொழுது, அவை அவருடைய கருத்துக்களுக்கு முரணாக இருந்தால் அவர் அது சம்பந்தமாகப் பேச எழுந்தவுடனேயே, "எனது மனவருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். என்னால் இந்த மசோதாவிற்கு சம்மதம் தெரிவிக்க முடியாது," என அவரது வெண்கலக் குரலில் அங்கே தேசாதிபதி இருக்கிறார் என்ற அச்சமுமின்றி அவரது மனச்சாட்சிப்படி தெட்டத் தெளிவாக கூறுவார்.

அவர் அன்று சட்ட நிர்வாகசபையில் நுழைந்ததும் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் மத்தியில் ஒரு புதிய நிலைப்பாட்டை உருவாக்கினார். தேசாதிபதி மக்களின் விமர்சனத்தை சட்டை செய்ய மறுக்கின்ற பொழுது, விமர்சனம் செய்யும் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் குரல்வளையை நெரிக்க முன்வரும் பொழுதெல்லாம் – இராமநாதன் குறிப்பிடுவது, "சட்டநிர்வாக சபை இலங்கை மக்களுக்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால், இலங்கை மக்கள் சட்டநிர்வாக சபையின் பெருமைக்கும், கௌவரத்திற்குமாக இல்லை."

"ஆகவே, உத்தியோகப்பற்றற்ற கௌரவ உறுப்பினர்கள் இலங்கை மக்களின் நலன்களை கருதுபவர்களாகவும், நாட்டு மக்களின் காவலர்களாகவும் இருந்தால், மக்களின் குறைபாடுகளில் கவனம் செலுத்தி, அந்தக் குறைபாடுகளை மக்களின் நலன்களுக்கு அமைய மாற்றியமைக்க முன்வர வேண்டும்," என்று கூறுவார்.

அரசியல் விவகாரங்களில் உரிமைக் குரலில் ஒலிக்கின்ற சிந்தனைகளும், எண்ணங்களும் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் ஒற்றுமையுடன் ஒலிக்கும் குரல்கள் இல்லை. எனவே, இதற்காகத்தான் இலங்கை தேசிய சங்கத்தை இராமநாதன் அமைத்தார். நாட்டில் இங்கொன்றும், அங்கொன்றுமாக சிதறிக்கிடந்த தேசிய பற்றாளர்களை ஒருங்கிணைத்தார். நாட்டின் இறைமையையும், சிறப்பையும் விளக்கினார். நாட்டின் சுதந்திரம் என்ற போர்க் குரலையும் எழுப்பினார்.

இராமநாதன் சுதந்திரத்திற்கு இரண்டு மூல மந்திரங்களை வெளியிட்டார்.

அவையாவன –

* கல்வியை பயிலுங்கள் – சுதந்திரம் அடைவதற்கு.

* ஒற்றுமையாகுங்கள் – நீங்கள் பலம் வாய்ந்தவர்களாவதற்கு.

மூன்றாவதாகவும் ஒரு கோஷத்தை எழுப்பினார்.

அதுதான் –

"கற்று நீங்கள் ஒற்றுமைப்படுங்கள் – நீங்கள் பலம் அடைவதற்கும், சுதந்திரம் அடைவதற்கும்," என்றார்.

1912ஆம் ஆண்டு ஆரம்பமான புதியசட்ட நிர்வாக சபை மகிழ்ச்சியுடனும், நிறைய ஆக்கபூர்வமான எதிர்பார்ப்புக்களுடனும் ஆரம்பமாயிற்று.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், பதின்மூன்று வருடகாலமாக இந்தச் சபையை விட்டு ஆட்சியாளர்களின் தந்திரத்தினாலும், ஒடுக்கு முறைகளினாலும், சூழ்ச்சியினாலும் ஒதுங்கியிருந்த பொன்னம்பலம் இராமநாதன் மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஏகோபித்த ஆதரவால் சட்டசபையினுள் நுழைந்ததேயாகும்.

பொன்னம்பலம் இராமநாதன் நீண்டகால அனுபவமுள்ள இலங்கை அரசியல் தலைவர். பல அரசியல் போராட்டங்களில் வெற்றிவாகை சூடியவர். மக்களின் பிரதிநிதி. மக்களுக்கு எதிராக நடைபெறும் எந்த விடயத்தையும் துணிந்து எதிர்த்து போராடி வெற்றி பெற்றவர்.

மேலும், மக்களின் உரிமைகளுக்காக போராடும் ஒரு சுதந்திர போராட்ட வீரரும் ஆவார்.

பலர், தனியொரு இனத்திற்காகவும், ஒரு சமூகத்திற்காகவும், குறிப்பிட்ட ஒரு வட்டாரத்திற்காகவும் பிரதிநிதித்துவம் செய்வார்கள். ஆனால், இராமநாதன் அவர்களோ இலங்கையில் வாழ்ந்த மூவின மக்களான தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்தார்.

பெரும்பான்மை இனமான சிங்கள இன மக்களின் நலனில் மிகவும் அக்கறை காட்டினார். அவர் சிங்கள மக்களின் பௌத்தமத கலாச்சாரப் பின்னணியின் அடிப்படையில் தான் அவர்களின் கல்வி அமையவேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், இரண்டு சிங்களவர்கள் சந்திக்கின்ற போது, அந்தச் சிங்களவர்கள் தமக்குள் தங்களின் தாய்மொழியான சிங்கள மொழியில் தான் சம்பாசணை செய்யவேண்டும் என்று எப்போதுமே கூறுவார்.

"ஒரு சிங்களவனின் உதடு சிங்கள மொழியை பேசாவிட்டால், அந்த மொழியை வேறு யார் பேசுவார்கள்?" என்ற கேள்வியை அவர் பலமுறை எழுப்பினார்.

1947 ஆம் ஆண்டளவில் இலங்கை நாடாளுமன்றத்தின் மேற்சபையான செனற் சபையின் தலைவரான திரு.ஏ. இரத்தினநாயக்க ஒருமுறை இராமநாதனைப் பற்றிக் குறிப்பிடுகையில் – "இலங்கையின் மறுமலர்ச்சியின் பிதாமகன்," என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

(தொடரும்)



# குத்தாட்டத்தில் நயன்

விஜய்சேதுபதியுடன் முதல்முறையாக நயன்தாரா இணைந்து நடித்த 'நானும் ரௌடிதான்' படம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மீண்டும் இந்த கூட்டணி இணையவிருக்கிறதாம். ஆனால், இந்த முறை விஜய்சேதுபதிக்கு நாயகியாக அல்லாமல், நட்புக்காக ஒரேயொரு பாடலில் மட்டும் தலைகாட்டவிருக்கிறாராம் நயன். ஏற்கனவே தென்மேற்கு பருவக்காற்று, இடம் பொருள் ஏவல் படங்களின் மூலம் இயக்குனர் சீனு ராமசாமியுடன் இணைந்த விஜய்சேதுபதி, தற்போது நடித்து வரும் 'தர்மதுரை' படத்தின் மூலம் அவருடன் மூன்றாவது முறையாக இணைந்திருக்கிறார். இப்படத்தில் தமன்னா, ஐஸ்வர்யா ராஜேஷ், ஸ்ருடிஷ்டி டாங்கே ஆகியோர் நாயகிகளாக நடிக்கின்றனர். படத்தின் பப்ளிசிட்டிக்காகவும், விஜய்சேதுபதியுடனான நட்பிற்காகவும் முன்னணி கதாநாயகியாக திகழ்ந்து வரும் நயன்தாரா ஒரேயொரு பாடலுக்கு மட்டும் நடனமாடவிருக்கிறாராம். ஏற்கெனவே தனுஷிற்காக 'எதிர்நீச்சல்' பட பாடல் ஒன்றில் சிவகார்த்திகேயனுடன் நயன்தாரா நடனமாடியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரண்மனை



அர்ஜு






# அ

இளையதளபதி வி
வரும் "தெறி" பட
முடிவடைந்த நிலை
ஒரு தொழிற்ச
படப்பிடி
விஜய்யுடன் இ
வெளிநாட்டு சண்
இந்த கிளைமாக்
கிரேனில் தொங்
ஒன்று வருவதாக
டூப் இன்றி எவ்வி
அட்லியை
கிரேன், ஜிம்மி
இந்த சண்
கொண்
படமாக்கி
"தெறி" படம் ரிலீ
விஜய் ரசிகர்களிட
என




## ...ஜுனுடன் மீண்டும் மனிஷா



முதல்வன்' படத்தில் இணைந்த அர்ஜுன், மனிஷா கொய்ராலா ஜோடி நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'ஒரு மெல்லிய கோடு' படத்தில் இணைந்து நடிக்கின்றனர். புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று மீண்ட மனிஷா கொய்ராலா ரீ என்ட்ரி ஆகும் படம் இது. மர்மமாக நடக்கும் கொலையை துப்பு துலக்கும் கதை. குப்பி, வனயுத்தம், காவலர் குடியிருப்பு படங்களை இயக்கிய ஏ.எம்.ஆர்.ரமேஷ் இயக்குகிறார்.

படம்பற்றி அவர் கூறியது கொலையை துப்பறியும் கதையாக இது உருவாகிறது. பொலீஸ் துணை கமிஷனராக அர்ஜுன் நடிக்கிறார். ஷாம் மனைவியாக மனிஷா கொய்ராலா நடிக்கிறார். புற்றுநோய் பாதிப்பிலிருந்து [illegible] மனிஷா கொய்ராலா இந்தி பட இயக்குனர் ராஜ்குமார் சந்தோஷி படத்தி[illegible] நடிப்பதாக இருந்தது. ஒரு மெல்லிய கோடு கதையை கேட்டதும் இந்தி படத்தை டிராப் செய்துவிட்டு இதில் நடிக்க ஒப்புக்கொண்டார். மொத்தம் 25 நாட்கள் அவர் நடித்த காட்சிகள் சென்னை மற்றும் பாங்கொக்கில் படமாக்கப்பட்டது. காஷ்மீரை சேர்ந்த அக்ஷா பட் இளம் ஹீரோயினாக அறிமுகமாகிறார். முக்கிய வேடத்தில் சீதா நடிக்கிறார்.

## அட்லியை அசத்திய விஜய்



...ளபதி விஜய் நடிப்பில் இயக்குனர் அட்லி இயக்கி "தெறி" படத்தின் கோவா படப்பிடிப்பு சமீபத்தில் ...டந்த நிலையில் தற்போது சென்னையில் உள்ள ...தொழிற்சாலையில் கிளைமாக்ஸ் காட்சியின் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

...யுடன் இந்த காட்சியில் 50இற்கும் மேற்பட்ட ...டு சண்டைக்கலைஞர்கள் நடித்து வருகின்றனர். ...ளைமாக்ஸ் காட்சியின் ஒரு பகுதியில் ஒரு பெரிய ...ல் தொங்கியபடி விஜய் சண்டைபோடும் காட்சி ...ருவதாகவும், இந்த ரிஸ்க்கான காட்சியில் விஜய் ...றி எவ்வித தயக்கமும் இன்றி நடித்து இயக்குனர் அட்லியை அசத்தியதாக கூறப்படுகிறது.

...ன், ஜிம்மி ஜிப்பி போன்ற கருவிகளை வைத்து ...த சண்டைக்காட்சியை 6 நவீன கமராக்கள் கொண்டு பல்வேறு கோணங்களில் படமாக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

... படம் ரிலீஸாகும்போது இந்த சண்டைக்காட்சி ...சிகர்களிடம் இருந்து பெரும் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது



## நியாயம் தானா நித்தியா

விக்ரம் நடிக்கும் புதிய படத்தை ஆனந்த் சங்கர் இயக்க உள்ளார். நயன்தாரா ஹீரோயின். இதில் மற்றொரு ஹீரோயின் பாத்திரத்துக்கு பிந்து மாதவியிடம் படக் குழு பேசி வந்தது. இந்த நிலையில் படத் தயாரிப்பு நிறுவனம் கைமாறியது. இதையடுத்து படத்தின் நட்சத்திர தேர்விலும் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தேர்வான காஜல் அகர்வாலுக்கு பதிலாக நயன்தாரா ஹீரோயினாக ஒப்பந்தம் ஆனார். இரண்டாவது நாயகி வேடத்துக்கு பிந்து மாதவிக்கு பதிலாக நித்யா மேனனை நடிக்க கேட்டனர். அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். முதலில் இப்படத்தின் படப்பிடிப்பு மலேசியாவில் தொடங்க திட்டமிடப்பட்டது. தற்போது அதிலும் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. சென்னையில் படப்பிடிப்பு தொடங்கி நடத்த உள்ளனர்.

# புதிய இடதுசாரி புரட்சிகர இயக்கத்தின் தோற்றம்

**ஜே.வி.பியின் வரலாறு - 3**

1967 நடுப்பகுதியில் அநுராதபுரம் கலத்தேவயில் இடம்பெற்ற கலதேவ கலந்துரையாடல் ஜே.வி.பி கட்சி வரலாற்றில் மிக முக்கியமானதும் தீர்மானகரமானதுமான கலந்துரையாடல் ஆகும். கட்சியிலும் கருத்தியல் தெளிவேற்படுத்தியதைப் போன்றே, கட்சியை கட்டியெழுப்பும் போது இணைவோருக்கு அரசியல் கல்வியை வழங்குவதற்காக கல்விக் கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தலும் இந்த கலந்துரையாடலின் பயனாக ஏற்பட்டது.

கலத்தேவ கலந்துரையாடலுக்கு அப்போது கட்சியில் அமைப்பு ரீதியாக முன்னிலை வகித்தவர்களே அழைக்கப்பட்டிருந்தனர். பல நாட்களாக இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின் போது மார்க்ஸிச லெனினிஸ நிலைப்பாட்டிலிருந்து கருத்துக்களை எடுத்துரைத்த தோழர் ரோகண விஜேவீர புரட்சியின் வடிவத்தை பிரதிபண்ணும் (கொப்பி) கருத்தியலை மாற்றி அதற்குப் பதிலாக இலங்கைப் புரட்சியின் வடிவத்தை இலங்கை முறைக்கு ஏற்ப நமது போராட்டத்தில் தோன்றும் போராட்ட வடிவங்களை அமைக்க வேண்டுமென உறுதிப்படுத்தியதோடு அது வெளிப்படையாக முன்வைக்கப்பட்டது. பிற்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி கல்விக் கலந்துரையாடலில் ஒன்றான இலங்கை புரட்சிக்கு செல்ல வேண்டிய பாதை எனும் கலந்துரையாடலுக்கு அடித்தளமிட்டதும் இந்தக் கலந்துரையாடலாகும்.

மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்திலேயே தமது இயக்கத்தினுள் தோன்றிய தவறான கருத்துக்களை இனங்கண்டு அதை கருத்தியல் ரீதியாக தோற்கடிப்பதில் வெற்றிகண்ட கலத்தேவ கலந்துரையாடல் மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றில் மிக முக்கியமானதாக அமைகிறது. புரட்சியின் வடிவத்தை பிரதிபண்ணுகின்ற (கொப்பியடிக்கும்) எண்ணம் கட்சியில் கருத்தியல் ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போதிலும் சிலரின் மனத்திலிருந்த தாக்கம் முற்றாக நீங்கவில்லை. 1971 இளைஞர்களின் எழுச்சியின் போது அவ்வாறு சிலரிடம் அழியாது காணப்பட்ட அக் கருத்து சிறு அளவிலான தாக்கத்தை செலுத்தியிருப்பது காணக் கூடியதாயிருக்கிறது.

எவ்வாறாயினும் இதில் காணப்படுகின்ற முக்கிய விடயம் யாதெனில், குழந்தைப் பருவத்து இயக்கமான ம.வி.மு தன்னுள் மார்க்ஸியமற்ற போக்குகள் தோன்றும்போது அவைகளை ஆரம்பத்திலேயே இனங்கண்டு தோற்கடிப்பதற்கான நடவடிக்கை எடுத்தமையாகும்.


பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பயணத்தின் போது சந்தர்ப்பவாதம் இயல்பாக எழக்கூடிய ஒன்றாக உள்ளபோதிலும் அவ்வியக்கத்தின் வெற்றிக்காகச் சந்தர்ப்பவாதத்தை தோற்கடிப்பது அத்தியாவசியமான விடயமாகும். 1920. ஜூன். 19ஆம் திகதி இடம்பெற்ற 03ஆம் அகிலத்தின் 02ஆவது காங்கிரசில் லெனின் முன்வைத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் அது உறுதிப்படுகிறது. "சந்தர்ப்பவாதம் எமது பிரதான எதிரியாகும். **தொழிலாள வர்க்க இயக்கத்தின் மேல் வர்க்கத்தினரிடம் உள்ள சந்தர்ப்பவாதம் என்பது பாட்டாளி வர்க்க சோஷலிசமல்ல, முதலாளித்துவ வர்க்க சோஷலிசமாகும். சந்தர்ப்பவாத போக்கில் களைத்துப் போயிருக்கின்ற தொழிலாள வர்க்க இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள், முதலாளிகளை விட முதலாளிகளைப் பாதுகாப்பாளர்களாக நடைமுறையில் வெளிப்படுத்தியுள்ளனர். தொழிலாளர்களுக்கு அளிக்கும் அவர்களின் தலைமைத்துவமின்றி முதலாளிக்கு அதிகாரத்தில் இருப்பதற்கு முடியாது என்பது உறுதியாகும்".**

"நமது எதிரி இருப்பது இவ்விடத்திலாகும். நாம் இந்த எதிரியை தோற்கடித்தாக வேண்டும். சகல கட்சிகளினதும் கடைசி முடிவு வரையில் இந்தப் போராட்டத்தை கொண்டு செல்வதற்காக உருக்கு நிறைந்த உறுதியுடன் உறுதிபூண்டே நாம் இந்த மாநாட்டிலிருந்து வெளியேறியாக வேண்டும். இது நமது பிரதானமான கடமைப் பணியாகும்".

சந்தர்ப்பவாதத்தை தோற்கடிப்பதன் முக்கியத்துவத்தை லெனின் வலியுறுத்தியது அவ்வாறாகும். உலகில் எந்தவொரு உண்மையான இடதுசாரி இயக்கத்தை போன்றே ம.வி.மு யின் பயணத்தின் போதும் சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இடையறாத போராட்டத்தின் குறியீட்டைக் காணமுடியும். இலங்கையின் இடதுசாரிய இயக்கமான ம.வி.மு முதிர்ச்சியடைந்தமை, ஒரு புறத்தில் முதலாளித்துவ முறைக்கு எதிராகவும் மறுபுறத்தில் கடும் கோட்பாட்டு இடதுசாரிய மற்றும் வலதுசாரிய சந்தர்ப்பவாதத்திற்கு எதிராகவும் முன்னெடுத்த போராட்டத்திலாகும். மேற்குறிப்பிட்ட 1967 கலத்தேவ கலந்துரையாடல் அதன் முக்கிய திருப்பு முனையாகும். அதன் பின்னர் மீண்டும் 1969இல் தர்மசேகரா கும்பலுடன் கருத்துப் போராட்டத்தின் மூலமாகவும் இது வெளிப்பட்டது.

1967 டிசம்பர் கலத்தேவயில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தோற்கடிக்கப்பட்ட சந்தர்ப்பவாதம் மீண்டும் வேறு வடிவத்தில் வெளிப்படுவது, 1969களிலாகும். அது தர்மசேகரா குழுவினரின் நடவடிக்கைகள் மூலமாகும். தர்மசேகரா குழுவினரால் தோற்றம் பெற்ற சந்தர்ப்பவாதப் போக்குகளை நன்கு புரிந்து கொள்வதென்றால் 1967 டிசம்பருக்கு பின்னர் 1968-69 களில் ஜே.வி.பியின் பயணத்தின் முக்கியமான சம்பவங்களையும் விடயங்களையும் பற்றிக் கவனத்தை செலுத்தியாக வேண்டும்.

எந்தவொரு படைப்பாளியாலும் எதுவிதமான குறைபாடுகளுமின்றி முழுமையாக்கப்பட்ட படைப்பொன்று ஒரே தடவையில் தோன்றிய எந்தவொரு வரலாறும் இந்த உலகில் இல்லை. சகலதும் எளிமையாக தோன்றி தமது வளர்ச்சியின் போது பரிணாம ரீதியாக வளர்ச்சியடைந்தவையாகும். இது அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும். அதற்கிணங்க ஜே.வி.பியும் மிக பரந்துபட்ட அனுபவங்களுடனான அமைப்பாக மாறியது வரலாற்றுப் பயணத்திலாகும். ஜே.வி.பி தனது பயணத்தின் போது முகம் கொடுத்த சவால்கள், பின்பற்றிய தந்திரோபாயம் மற்றும் செயற்பாடுகள் அதன் விளைவாக உருவான அனைத்தும் ஜே.வி.பியை உருவாக்குவதற்கு முன்னிலை வகித்த இளம் புரட்சியாளர்களின் விருப்பத்தினால் மட்டுமே தீர்மானிக்கப்பட்டவைகள் அல்ல. தம் முன்னால் உள்ள மற்றும் வரலாறு முன்வைத்துள்ள யதார்த்தத்தினுள் அவர்கள் செயற்பட்டனர். ஜே.வி.பியின் பயணத்தின் போதும் எமக்கு காணக்கிடைக்கின்ற பல சம்பவங்களை இவ்வாறே நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.



இராமலிங்கம் சந்திரசேகர்
மத்திய குழு உறுப்பினர்
மக்கள் விடுதலை முன்னணி.

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று ஜே.வி.பி ஆரம்பத்தில் தொழிலாளர்கள் மத்தியில் அல்ல விவசாயிகளிடமும் இளம் தலைமுறையினர் மத்தியில் வேலை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அது ஜே.வி.பி தாம் விரும்பி தேர்ந்தெடுத்த ஒன்றல்ல. பழைய இடதுசாரிகள் தொழிலாளர் வர்க்கத்தை காட்டிக் கொடுத்து அரசியல் ரீதியாக அவர்களிடையே நம்பிக்கையீனத்தை விதைத்திருந்த காரணத்தினாலும் கிராமிய மக்கள் அவற்றிற்கு இரையாகாமல் இருந்தமையும் அதற்கான காரணமாகும்.




அவ்வாறே பிரசித்தமான ஜே.வி.பியின் 05 வகுப்புகள் தோன்றியது. புதிய புரட்சிகர இடதுசாரிய இயக்கத்தை நிர்மாணிக்கும் பணிக்கு கைவைத்த இளைஞர்களின் முன்னால் பாரிய சவால்கள் நிறைந்திருந்தன. அவர்களால் நிர்மாணிக்கத் தயாராகின, **தற்போதுள்ள சமூக முறையில் தமக்கும் சலுகைகளை பெற்றுக் கொண்டு அப்போதைய சமூக முறையில் வாழ்வதற்கு இலகுவான இடமாக மாற்றிக்கொள்ளும் சீர்திருத்தவாத அரசியல் அல்ல. தற்போது நிலவும் சமூக முறையை வேரோடு பிடுங்கியெறியும் புரட்சிகர அரசியலாகும். அதற்காக புரட்சிவாதிகள் தோன்றியாக வேண்டும். அதற்காக மார்க்ஸிசவாதிகள், கம்யூனிஸ்ட்வாதிகள் தேவைப்பட்டனர். ஆனால் தற்போதைய முதலாளித்துவ முறை அவ்வாறான மனிதர்களை உருவாக்காது. அது முதலாளித்துவத்திற்கு பொருத்தமான மனிதர்களையே உருவாக்கும். அதனால் முதலாளித்துவத்தினுள் பிறந்த முதலாளித்துவக் கருத்துக்கள், பழக்கவழக்கங்களால் மூழ்கியிருந்த மக்களை புரட்சிவாதிகளாக மாற்றியமைத்தாக வேண்டும்.** கம்யூனிஸவாதிகளாக மாற்றியமைத்தாக வேண்டியிருந்தது. அதைச் சொல்ல முடியுமாயிருப்பது மார்க்ஸிய கல்வியை பெற்றுக் கொடுக்கும் கருத்தியல் போராட்டத்தின் மூலமாகவும் மறுபுறத்தில் அமைப்பினுள் அனுபவம் மற்றும் நடைமுறை செயற்பாடுகளால் புடம் போடுவதன் மூலமாகும் முன்னுதாரணங்களினாலாகும். தோழர் ரோகண விஜேவீர உள்ளிட்ட இளைஞர்கள் தடைகளின் மத்தியிலும் வெற்றி கொண்டது இந்த சவால்களையாகும்.

1967 கலத்தேவ கலந்துரையாடலில் சந்தர்ப்பவாத கருத்தியலைத் தோற்கடிப்பதற்குப் புறம்பாக இன்னுமொரு முக்கியமான முடிவினை

(தொடர்ச்சி 23 இல்......)

# வடபகுதி மக்களின் எண்ணை உற்பத்தியும் பாவனையும்

உலக நாடுகளைப் போன்று இலங்கை வாழ் மக்களும் வன வாழ்வு விட்டு கிராம வாழ்க்கைக்குக் காலடி எடுத்து வைத்த காலம். வன வாழ்க்கையில் தீயை



வளர்த்து உணவாக்கினார்கள். அந்தத் தீ ஒளியிலே இரவின் இருளைப் போக்கி வாழ்ந்தார்கள். இந்த வாழ்வு கிராமத்திற்கு வந்தது. இரவில் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல்ல வேண்டுமாயின் எரியும் குறக் கொள்ளியை எடுத்து வீசி வீசிக் கொண்டு செல்வார்கள். அல்லது காய்ந்த இலை ஓலைகளைக் கட்டி தீப்பந்தமாகக் கொண்டு செல்வார்கள். வன்னிப் பிரதேசத்தில் காடுகளின் நடுவேயுள்ள கிராமங்களில் இன்றும்கூட நெருப்புக் கொள்ளியின் உதவியுடன் வழிப் பயணம் செய்வதைக் காணலாம். கிராம வாழ்க்கைக்கு வந்த பின்னரும்கூட இரவில் நிலாவெளியில் உணவு உண்பது முற்றத்தில் தீ மூட்டி அதனைச் சுற்றியிருந்து உண்ணும் வழக்கம் இருந்தது.

மந்தைகளை வளர்த்த மக்கள் குறிப்பாக பசுவிலிருந்து பெறப்படும் பாலிலிருந்து வெண்ணை, நெய் பேன்றவற்றை எடுத்தார்கள். அவற்றையே முதலில் விளக்கெரிப்பதற்கு எடுத்துக் கொண்டார்கள். இவற்றுடன் எண்ணை பெறக் கூடிய விதைகளையும் கண்டறிந்தார்கள்.

இலங்கையின் வடபகுதி மக்களும் இலுப்பை, புன்னை, வேம்பு போன்ற விதைகளைக் கண்டறிந்தார்கள். அத்துடன் எள்ளுப் போன்றவற்றையும் கண்டறிந்தார்கள்.

இனி நாம் இலங்கையின் வடபகுதி மக்களின் எண்ணை உற்பத்தியும் பாவனையும் என்ற பகுதியை விரிவாக ஆராய்வோம்.

பிற சமயங்கள் எதுவும் வடபகுதி மக்களை அணுகாத காலம். இப்பகுதி மக்கள் தாவர உணவையும் மாமிச உணவையும் உண்டனர் என்பது உண்மையிருந்தாலும் பசுவை ஒரு புனிதமான மிருகமாகவும் செல்வம் தரும் மிருகமாகவும் பாதுகாத்து வந்தனர். இதனால் பசுவின் பாலைக் குடித்தனர். வெண்ணை எடுத்தன்ர நெய்யாக்கினர் இந்த நெய்யையே உணவுக்காகவும் கோயில்களில் தீபங்கள் ஏற்றுவதற்கும் வீட்டில் விளக்கெரிப்பதற்கும் எடுத்துக் கொண்டார்கள். இதனாலோ என்னவோ அன்றைய வடபகுதி மக்கள் குடிகளுக்கேற்ப நெய்யிருந்தது. இப்பகுதிகளில் கால்நடை என்றால் பசுக்கள் பட்டி பட்டியாக இருந்தன. இங்கு வெள்ளாடுகளும் கணிசமான அளவு அன்றைய காலத்தில் இருந்தன. அவைகளுடன் எருமை மாடுகளும் அன்று இருந்தன. அவை பால் கொடுத்தன நெய்யெடுத்தனர் என்பதற்குரிய எச்சங்களாக தென்மராட்சிப் பகுதியில் குறிப்பிட்ட அளவும் வன்னி, மன்னார் பிரதேசங்களில் கூடுதலாகவும் இன்றும் எருமைகள் இருக்கின்றன. அக் காலத்திலும் ஏன் இப்பொழுதும்கூட ஆலயங்களில் நெய் விளக்கேற்றுவதையும் நெய்ப்பொங்கல் நெய் புரியாணி போன்றவற்றை ஆக்குவதையும் காணலாம். நெய் தொடர்பான முதுவாசகம் ஒன்று இருக்கிறது. "கையில் வெண்ணையிருக்க நெய்க்கு திரிந்தது போல" என்று சொல்வார்கள்.

பசு நெய்க்கு அடுத்ததாக வடபகுதி மக்களிடம் பிரதான இடம் பிடித்தவை இலுப்பை நெய், புன்னை நெய், வேப்பநெய், தேங்காய்நெய், எள்நெய் என்பனவாகும்.

இலுப்பை நெய்யைக் கவனிப்போம். கிராமப் புறங்களில் ஒரு காலத்தில் இலுப்பை மரங்கள் நிறைந்திருந்தன. இந்த மரங்கள் காய்த்து பழுக்கின்ற காலங்களில் குறிப்பாக வெளவால் மற்றும் பறவைகள் பழங்களை உண்டு விட்டு கொட்டைகளைப் போடுவது வழக்கம். இந்த இலுப்பங் கொட்டைகளை அதன் பருப்புகளை ஊற்றுப் பெட்டியிலே போட்டு நசிப்பார்கள். அதிலிருந்து வரும் எண்ணையே இலுப்பெண்ணை என்று அழைப்பார்கள். ஊற்றுப் பெட்டி முறையை ஆரம்பத்தில் இலுப்பம்பருப்பை நசிப்பதற்கு பயன்படுத்தினார்கள். அதன்பின் செக்கு மூலம் எண்ணை எடுத்தார்கள். இப்பொழுது இயந்திரம் மூலம் எடுக்கிறார்கள்.

எண்ணை வந்தபின் மிகுதியாகவிருக்கும் சக்கையை அரப்பு என்று சொல்வார்கள். இந்த அரப்பு அழுக்கு நீக்கி. இதனையே சீகாய் காயுடன் சேர்த்து அரைத்து தலையில் தேய்த்து நீராடுவார்கள். தலையிலிருக்கும் அழுக்கெல்லாம் போய்விடும். சிலர் நீராடும் பொழுது அரப்பினை உடலில் தேய்த்து நீராடுவார்கள். உடலிலுள்ள அழுக்குகள் நீங்கி புத்துணர்ச்சி கொடுக்கும் என்று சொல்வார்கள்.

இலுப்பெண்ணையை எடுத்துக் கொண்டால் வீட்டிலே விளக்கேற்றுவார்கள். விளக்கீடு காலத்தில் பந்தம் ஏற்றுவதற்குப் பயன்படுத்துவார்கள். இலுப்பெண்ணையில் உணவாக்கி உண்டால் நோய்கள் எம்மை வந்து சேராது எனக் கருதுகிறார்கள். குறிப்பாக வாதம் போன்ற நோய்கள் உள்ளவர்கள் இலுப்பெண்ணையை பயன்படுத்துவது நன்று என்பார்கள். இன்று வடபகுதி மக்களுக்கு இலுப்பெண்ணை என்றால் என்னவென்று தெரியாத நிலையேற்படும் வகையில் வெளிநாட்டு எண்ணை வகைகள் குவிந்துள்ளன. குறிப்பாகக் கூறின் அன்றைய வீதி உலாக்களின்போது இலுப்பெண்ணைப் பந்தத்துடன் சென்றதாகச் சொல்வார்கள்.

புன்னை மரங்கள் பண்டைய காலங்களில் வடபகுதியில் குறிப்பிடக்கூடிய அளவிற்கு நின்றன. இப்பொழுது விரல்விட்டு எண்ணக்கூடிய தொகை மரங்களே நிற்கின்றன. இதன்மூலம் பெறப்பட்ட எண்ணை விளக்கேற்றவும் மருந்திற்குமாகப் பயன்படுத்தப்பட்டன என்று சொல்வார்கள்.

வேப்பெண்ணை இது வடபகுதியில் பெறப்படும் ஒன்றாகும். வேம்பு ஒரு மருத்துவ குணம் நிரம்பிய மரமாகும். இதன் வேர் தொடக்கம் விதை வரையான பகுதிகள் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானதாகிவிட்டன. குழந்தை பிறந்த வீட்டிலே விளக்கெரிப்பதற்குப் பயன்படுத்துவர். வேப்பெண்ணையைத் தெளிவெண்ணை என்றும் சொல்வதுண்டு.

பண்டைய காலத்தில் தெங்கு முக்கிய இடம் வகித்துள்ளதை யாரும் மறக்க முடியாது. தேங்காய் எண்ணை பிறந்த வரலாற்றைப் பார்ப்போம்.

அன்றைய காலங்களில் தென்னைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்றன. கால்நடைகளின் தாக்கத்திலிருந்து தப்பிய தப்பவைத்த தென்னைகளே தேங்காய்களைத் தந்தன. முற்றிய தேங்காய்களைத் துருவி அதிலிருந்து தேங்காய்ப்பூவினை எடுத்து பாலினைக் கொதிக்க வைத்து அதன்மூலம் தேங்காய் எண்ணெய் முதலில் எடுத்தனர். அது உணவுக்கு சுவை சேர்த்தது. அவ் எண்ணெயினால் விளக்கு ஏற்றினர். இதனால் ஆலயங்களின் விளக்கு எரிந்தன. வீடுகள் ஒளி பெற்றன. இரவு நேர இறை வீதியுலாக்கள் ஒளி பெற்றன. திருவிழாக்கள் சிறந்தன. நாடகங்கள் சிறந்தன. பந்தங்கள் மூலமும் விளக்குகள் மூலமும் ஒளி வெள்ளத்தைப் பரப்ப உதவின.

சுவாமி இரவு வேளை சப்பறத்தில் வலம் வருகின்றபோது எத்தனை வகைப் பந்தங்கள் சூரிய பந்தங்கள், ஆலவட்டப் பந்தங்கள், சூலாயுதப் பந்தங்கள் என சப்பறத்தையும் இறைவனையும் ஒளி மயமாக்கின. கண்ணாடி போட்ட வீதி விளக்குகளுக்குங் கூட சங்கிலிப் பந்த விளையாட்டுகளுக்கும் ஒளி கொடுத்தது தேங்காய் எண்ணையே.

பெற்றோல்மாக்ஸ் என்று சொல்லப்படுகின்ற மண்ணெய் விளக்கு வருவதற்கு முன் பந்தங்களே



நாடகங்களைச் சிறப்பித்தன.

அந்தக் காலத்தில் நாடக மேடைக்கு முன் இரு பக்கங்களிலும் இருவர் நிற்பார்கள். அந்தக்கால நாடகங்களை கூத்து என்று சொல்வார்கள். நடிகர்கள் தொங்கிக் குதித்து ஆடியே நடிப்பார்கள். அவர்களின் முகங்கள் சபையோருக்கு தெரியும்படியாக பந்தம் பிடிப்போர் அவர்களின் ஆட்டங்களுக்கு ஏற்ப தொங்கித் தொங்கிப் பிடிப்பார்கள். இவர்களை பந்தம் பிடிப்பவர்கள் என்று அழைத்தனர். இக் காலத்தில் ஓர் அதிகாரியின் ஆட்டங்களுக்கு எல்லாம் ஆடும் ஊழியரை இவர் ஒருபந்தக்காரன் என்றும் அழைப்பார்கள் அல்லது நீ என்ன அவருக்கு பந்தம் பிடிக்கிறாய் என்றும் சொல்வார்கள்.

வடபகுதி கோயில்களில் ஒரு காலத்தில் கொப்பறாவில் பந்தம் எரிக்கும் முறை இருந்தது. ஆனால் இப்பொழுது ஏன் கண்டிப் பெரகராவின் போதும் கொப்பராப் பந்தம் எரிப்பதைக் காணலாம். கிட்டத்தட்ட 15 அடித்தடி அதன் நுனியில் இரும்புப் பூண் போட்ட 3 அடிக்கம்பி அதன் நுனி 1 அடி சரிந்திருக்கும். அதன் ஒரு கொழுக்கி அதில் இரும்பு வலையிலான பெட்டி அதற்குள் கொப்பரா போட்டு மூடுவார்கள். அதில் தீயை மூட்டினால் நீண்ட நேரம் எரிந்து பெரகரா ஊர்வலத்திற்கு ஒளி கொடுத்துக் கொண்டிருக்கும். இன்றும் அவற்றினைக் காணலாம்.

தொகுப்பு : கலாபூஷணம் சு.துரைசிங்கம்

## வாழ வழியிருக்குது எழு

எதர்க்கு சோர்ந்து போய்க்
கிடக்கிறாய் ஒரு மூலையில்
உன் வாழ்க்கைக் கப்பல்
தாண்டுவிட்டதா கடலில்

ஆயிரம் கப்பல்கள் மூழ்கினால்கூட
மூழ்கவிடக்கூடாது
நம்பிக்கையை

போன பேருந்து போகட்டும்
இனிவாற பேருந்தில் ஏறு
நீ வீழ்வதும் எழுவதும்
வாழ்க்கைக்கு அசிங்கமல்ல
அழகு

வீழ்ச்சி என்பது எழுச்சியை
பிரசவிக்கின்ற கருவறை
ஆலமரம் சாய்ந்துபோன
பிறகும் வாழும் விழுதுகளைப்
பார்

பாலைவனத்திலும் வாழ்க்கை
நடத்துகின்றன ஒட்டகங்கள்

தூசி படிந்து போன உன்
இலட்சியத்தைத் துடை

கனவுகள் சாகாமல்
வாழ்வதற்கு அடிக்கடி எழுச்சி
உணவு கொடு

நீ போகும் வழிகளை
தளைகள் வழிமறிக்கும் போது
பயத்தை விரட்டினால்
தடைகள் உனக்கொரு குடை

கால நேரங்களை எல்லாம்
வீணடிப்பது தவறு
நீ காற்று உள்ளபோதே
தூற்றிக்கொள்ளப் பழகு

உன் வாழ்க்கை வாகனத்தை
சும்மாயல்ல
வரலாறுகளோடு சேர்த்து
நகர்த்து
உனக்காக பூமியில்
பிறந்திருக்கும்
சாதனைக் குழந்தை!

உயிரோவியன்

## குட்டீஸ் பக்கம்



## சைமன் காசிச்செட்டி

புத்தளம் மேற்குக் கரையோரத்தில் பெரிய பட்டணமாகவும், துறைமுகமாகவும் விளங்கிய கற்பிட்டியிலே 1807 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் பிறந்தவரே சைமன் காசிச்செட்டியாவார். அவருடைய தந்தையாரின் பெயர் காபிரியேல், தாயின் பெயர் மேரி றொசைறோ

காசிச்செட்டி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியைத் தமது சொந்த ஊராகிய கற்பிட்டியிலும், உயர்கல்வியை புத்தளம், கொழும்பு ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொண்டார்.

இளம் வயதிலேயே தாய்மொழியாம் தமிழுடன், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், பாளி, அரபு, போர்த்துக்கீசம், டச்சு, இலத்தீன், கிரேக்கம், அரேபியம் ஆகிய மொழிகளையும் தாமாகவே கற்றுப் பன்மொழிப் பண்டிதராக விளங்கினார்.

கோல்புறூக் ஆணைக்குழுவின் விதந்துரைக்கமைய 1833 இல் உருவாக்கப்பட்ட சட்டசபைக்கு, தமிழ் மக்களுக்காக நியமிக்கப்பட்ட திரு.ஆ.குமாரசுவாமி முதலியார் 1838 நவம்பரில் காலமாகிவிட அந்த இடத்துக்கு 1838 இல் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டவர் காசிச்செட்டி அவர்களே என்பதை அறியும்போது அவர் பெற்றிருந்த உயர்நிலையை உணர முடிகிறது.




மாவட்ட நீதிபதியாகச் சிறந்த பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலே அறிஞர் சைமன் காசிச்செட்டி அவர்கள் தமது ஐம்பத்து மூன்றாவது வயதில் 1860 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பூதவுடலைத் துறந்து புகழுடம்பெய்தினார்.

தமது நுண்மாண் நுழைபுலத்துணை கொண்டு சாதனைகள் பலவற்றை நிலைநாட்டியவரும் தமிழ் மக்களின் பெருமைகளை ஆங்கில மொழி மூலம் அகிலத்தோர் அறியச் செய்தவருமான தமிழ்ப்பெரியார் சைமன் காசிச்செட்டி அவர்களின் பெயர் இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ரா.ரஜீனா
தரம் -07
யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி

## வாரமொரு குறள்



வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.
இறைவன் அடிசேரா தார்.

**பொருள் : உலகத்தை வாழ வைப்பது மழையாக அமைந்திருப்பதால் அதுவே அமிழ்தம் எனப்படுகிறது.**

## நாம் வாழும் பிரதேசத்தின் நிலத்தோற்றம்


இலங்கை மணித்திருநா டெங்கள்நாடே - இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே
மகாவலி கங்கை எங்கள் வளநதியே - அருள்
மன்னுசிவ னொளிபாதம் எங்கள் மலையே
பூவலஞ் செய்கதிரை எங்கள் தலமே - இதைப்
போற்றிப் புகழ்ந்தால் வரும் பெருநலமே

முத்து குளிக்க நல்ல துறைகளுண்டு - ஒளி
முதிர்ந்த மணிகள்தரச் சுரங்கமுண்டு - தினைத்
தித்திக்கும் நறுங்கனிச் சோலைகளுமுண்டு - எங்கள்
தேசத்தில் பொன்விளையும் பூமியுண்டு
அமுதமனைய நன்னீர்ப் பெருக்குமுண்டு - தினைத்
தாட வினிய வெந்நீர்ச் சுரப்புமுண்டு

தமிழின் இனிய சுவை யூற்றுமுண்டு - மெல்லத்
தண்ணென் றுலவுதென்றற் காற்றுமுண்டு
தேமல் திரைகருங் காலிகளுண்டு
தேக்குண்டு வனந்தனில் தேனுமுண்டு
பால்மலி பசுவுண்டு மேதிகளுண்டு - தமிழ்ப்
பாட்டுக்கு நல்ல யானைப் பரிசுமுண்டு

## நாய்கள் ஏன் சண்டை பிடிக்கின்றன

ஒருமுறை காட்டில் விருந்து நடைபெற்றது. அதற்கு நாய்களும் அழைக்கப்பட்டன. அப்போது கடவுள் ஒரு கேள்வி எழுப்பினார். அதாவது இக் காட்டிற்கு யார் ராஜா என வினாவினார். அப்போது முயல் ஒரு நாயை சுட்டிக்காட்டி இவர்தான் காட்டிற்கு ராஜா எனக் கூறியது. மற்றய நாய்களுக்கு கோபம் வந்துவிட்டது. மற்ற நாய் அவனைவிடச் சுத்தமாக இருப்பவன் நான் தான் எனவே ராஜா நான்தான் எனக் கூறியது. ஆனால் அதைக் கேட்காத மற்ற நாய் இல்லை நான்தான் அவனைவிட அழகும், சுத்தமாகவும் இருப்பவன் நான்தான் எனவே நான் தான் எனக் கூறியது. இப்படிச் சொல்ல நாய்கள் ஒன்றுக்கொன்று சண்டை பிடித்து விருந்து சீர்குலைந்தது. கடவுள் சொன்னார் எனிமேல் நாய்கள் ஒன்றுக்கொன்று கண்டால் சண்டையாக தான் மாறும் எனக் கூறினார். இதனால் தான் நாய்கள் ஒன்றுக்கொன்று சண்டை பிடிக்கின்றன.



பா.கயலவன்
தரம் -07
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி

## கல்வியின் சிறப்பு

* உலகில் இரு வகையான செல்வங்கள் உள்ளன.
* ஒன்று எல்லோராலும் மதிக்கப்படும் கல்விச் செல்வம். மற்றையது பொருட் செல்வம் ஆகும்.
* கல்வி நீராலோ நெருப்பாலோ அழியாது. திருடரால் ஒருநாளும் திருடப்படமாட்டாது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாது. மற்றவர்களுக்குக் கொடுக்கத்தோணும் பெருகிக்கொண்டே செல்லும்.
* அரசனுக்கு அவனது நாட்டில் மட்டுமே மதிப்பு உண்டு. கல்வி கற்றவர்களுக்கு அவர்கள் செல்லும் நாடுகளில் எல்லாம் சிறப்புண்டு.
* அதனாற்றான் அழியாத செல்வமாகிய கல்வியை எல்லோரும் கற்க வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.
* எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பர். கல்வியே ஒருவருக்கு உண்மையான கண் எனலாம்.
* உண்மையான கண்ணாண கல்வியை இளமை தொடக்கம் கற்றல் வேண்டும்.
* இளமையிற் கற்கும் கல்வி நமது மனதிலே நன்கு பதியும். கல்லிலே எழுதப்பட்ட எழுத்துப்போல அழியாது.
* இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்னும் பழமொழியும் இதனையே உணர்த்துகிறது.
* அழியாத செல்வமாகிய கல்வியைக் கற்று நாம் நலமாக வாழ்வோம்.



பு.மதிராஜ்
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி

## பழமொழிகளும் கருத்துக்களும்

01. **ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்**
பிறர் பிள்ளையை ஆதரித்தால் தனது பிள்ளை தானாய் வளரும்
02. **தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்**
சிறுவயதில் பழகிய பழக்கம் நாம் இறக்கும் வரைக்கும் நீடிக்கும்.
03. **இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை**
திருப்தி அற்ற மனம்
04. **ஆழம் அறியாமல் காலை விடாதே**
எதையும் ஆராய்ந்து செய்
05. **அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு**
ஒற்றுமையே பலம்
06. **காற்றுள்ள போதே தூற்றிக்கொள்**
சந்தரப்பத்தை தவற விடாதே.
07. **ஆறிலும் சாவு நூறிலும் சாவு**
மரணம் எந்த வயதிலும் வரும்.

க.யதுசா.
தரம் - 07
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி

## ஐம்பெரும் காப்பியங்கள்

* சீவகசிந்தாமணி
* சிலப்பதிகாரம்
* குண்டலகேசி
* மணிமேகலை
* வளையாபதி

01. தலையில் (கீரிடத்தில்) அணியப்படுவது-**சிந்தாமணி**
02. காதுகளில் அணியப்படுவது **குண்டலம்**
03. கைகளில் அணியப்படுவது **வளையல்**.
04. இடையில் அணியப்படுவது **மணிமேகலை**
05. காலில் அணிவது-**சிலம்பு**

த.அக்சிகா
தரம் – 06
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி

## கொக்கு பாரு கரையில

கொக்கு பாரு கரையிலே
காத்திருக்கு வெயிலே
எதற்கிருக்கு கரையிலே
மீனுக்கது புரியல
நீரைவிட்டு வெளியிலே
மீனும் துள்ளி வரையில
கொத்திக்கின்னு லபக்கென
மீனு கொக்கு வாயில
மக்குமீனு கொக்குடன்
மல்லுக்கட்ட முடியல
ஏமாளி மீனுதான்
இரையாகிப் போனதாம்
காத்திருந்த கடமையை
கச்சிதமாய் முடிக்கணும்
நேரம் பார்த்த கொக்கு போல
நினைத்ததெல்லாம் முடிக்கணும்



பா.தமிழிசை
தரம் – 07
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி

# மனந்திறக்கிறார் அனந்தி



வன்னி யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்த நிலையிலும் இன்றுவரை போர்க் கைதிகளாக சரணடைந்தவர்கள் எங்கே என்று என்னைப் போன்ற குடும்பங்கள் தேடித்திரிவது ஒரு வழமையான நிகழ்வாக போய்விட்டது. இலங்கை இனப்பிரச்சினை உருவாகி 60 வருடகாலத்தில் 30 வருடகால அரசியல் போராட்டம் அதன் பின்னான ஆயுதப்போரட்டம் மௌனிக்கப்பட்டபின் இன்றுவரை ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். தமிழர், சிங்களவர், சோனகர், பறங்கியர் போன்று இலங்கை வாழ் இனமாக கருதப்பட்டு காணமால் ஆக்கப்பட்ட இனமும் ஒன்றாக இப்போது உருவாகியுள்ளது. கடந்த காலங்களில் சிங்கள இளைஞர்கள் JVP என்ற பெயரில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு பின்னர் களனிகங்கையில் ஆயிரக்கணக்காக வீசப் பட்டதையும் நாம் அறிவோம். சொந்த இனத்துக்குள்ளேயே தங்கள் இளைஞர்களையே காணாமல் ஆக்கிய சிங்கள ஆட்சியாளர்களிற்கு தமிழ்த் தேசிய இனத்தின் இளைஞர்களை, யுவதிகளை காணமால் ஆக்கப்படுவது என்பது ஒரு பெரிய விடயமே அல்ல.

நாங்கள் போரின் முடிவின் பின்னர் LLRC ஆணைக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழு என்று சாட்சியங்களை கொடுத்து உள்நாட்டு பொறிமுறையில் தோல்வி கண்ட பின்னர் ஐ.நா.சபையை அதி தீவிரமாக நோக்கி நகர்ந்தோம்.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாகிய எனக்கு மாகாணசபை மூலம் அங்கீகாரம் கிடைத்தது. தனித்து ஒருத்தியாக நியாயம் கோரி பல அரச அதிகாரிகள், அமைச்சர்கள், ஜனாதிபதி, முதற் பெண்மணி என்று கணவர் சரணடைவு தொடர்பான கண்டறிதலுக்கு போராடிய பின்னர் பலநாடுகளின் தூதுவர்களிடமும் சென்றேன். ஆனால் நான் தனித்து விடுத்த கோரிக்கை ஒரு மக்களின் பிரதிநிதியாக சென்றபோது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது.

உண்மையில் ஒரு அரச உத்தியோகத்தராக, விடுதலைப் போராளி எழிலனின் மனைவியாக இருந்த என்னை அரசியலுக்கு அழைத்து வந்தவர் இன்றைய தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாரளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா. அவர்களுக்கு என்னை சிபாரிசு செய்தவர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிறிதரன் அவர்களும் கௌரவ சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களும்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதியாக சர்வதேசத்தில் எனது குரல் ஒலிக்கின்றது. இன்று இவர்களின் ஆதரவினால்தான். எனவே சில கருத்து முரண்பாடுகள் எங்களுக்குள் இருந்தாலும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் இவர்களுக்கு தேசிய இன விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து வடக்கு கிழக்கில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் பல ஆணைக்குழுக்களை அன்றிலிருந்து இன்றுவரை கண்டுவிட்டோம். எந்த நியாயமும் இன்றுவரை பாதிக்கப்பட்ட எங்கள் தரப்புக்கு கிடைக்கவில்லை.

ஆனால் தற்போது ஜனாதிபதி ஆணைக் குழு யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து காணாமற்போனோர் தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆணைக்குழு 2013இல் மகிந்த அரசினால் உருவாக்கப்பட்டது. மனித குலத்திற்கு எதிரான ஒரு இன அழிப்பு கொடியபோரை நடாத்திய மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது உருவாக்கிய ஆணைக்குழு.

மிகத்தெளிவாக 2014 முதற் காலாண்டில் கிளிநொச்சியில் இந்த ஆணைக்குழு முன்னிலையில் சரணடைந்தவர்களின் பொறுப்பெடுத்த படைப்பிரிவு இடம் சம்பவம் எல்லாமே கூறி இருந்தும் ஜெனிவா அறிக்கையின் பின் ஜனாதிபதி ஆணைக்குழு பரணகம அறிக்கை என்ற பெயரில் பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தது. ஆனால் ஆணைக்குழுவின் தலைவர் கூறியகருத்து எங்களை அதிர்ச்சி அடையச்செய்தது. காரணம் அவ்ர கூறியிருந்தார் தனது அறிக்கையில் தான் இராணுவத்தை குற்றம் சாட்டவில்லையென. எனவே இவர் எங்களது சாட்சியங்களை தணிக்கை செய்துவிட்டாரோ என அஞ்சுகின்றேன். கடந்த செப்ரெம்பர் மனித உரிமை பேரவை கூடிய போது மனித உரிமையாளர் அவர்களின் காணாமற் போனவர்களின் குடும்பங்கள் படும் துயரம் நீண்ட நெடியதாக நீண்டு செல்கின்றது. உறவினைத்தேட வேண்டும், வாழ்வாதாரத்தை தேட வேண்டும், பாதுகாப்பைத் தேடவேண்டும் சமூகத்தின் அவப் பெயர்களுக்கு தப்பிக் கொள்ளத்தக்கவாறு வாழ வேண்டும். இதனை விட சமூகத்தில் நடைபெறும் மங்கள காரியங்களில் முன்னுக்கு நிற்பதா ஒதுங்கி நிற்பதா என்ற மன ஆதங்கம்.

எனவே இது ஒருவகையில் அவர்களை உளவியல் தாக்கத்திற்குள் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது.

தமிழர், சிங்களவர், சோனகர், பறங்கியர் போன்று இலங்கை வாழ் இனமாக கருதப்பட்டு காணமால் ஆக்கப்பட்ட இனமும் ஒன்றாக இப்போது உருவாகியுள்ளது. கடந்த காலங்களில் சிங்கள இளைஞர்கள் JVP என்ற பெயரில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு பின்னர் களனிகங்கையில் ஆயிரக்கணக்காக வீசப்பட்டதையும் நாம் அறிவோம். சொந்த இனத்துக்குள்ளேயே தங்கள் இளைஞர்களையே காணாமல் ஆக்கிய சிங்கள ஆட்சியாளர்களிற்கு தமிழ்த் தேசிய இனத்தின் இளைஞர்களை, யுவதிகளை காணாமல் ஆக்கப்படுவது என்பது ஒரு பெரிய விடயமே அல்ல.

பலநாடுகளின் உதவியுடன் நடத்தப்பட்ட தமிழின அழிப்புப் போரில் சரணடைந்த விடுதலைப் புலிகள் தொடர்பாக நேரடி சாட்சியாக இறுதி இடமான ஐ.நாவில் பேசியும் இலங்கை அரசுக்கு இடித்துரைக்க முடியாத ஐநாவும் அமெரிக்க வல்லாதிக்க அரசுக்கும் முண்டு கொடுக்கும் இந்தியாவுக்கும் அடிபணிந்து போயுள்ளது.

நாடெங்கும் போர் நடக்கும் போது தலையிடும் ICG-International Crisis Group RP யை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் தலைவர் தமிழ் வரலாற்றில் வன்மையாக கண்டிக்கதக்கவர். எதிர் வரும் காலங்களில் மில்லியன் கேள்விகளை ஈழத்தமிழர் பிரச்சினையில் உலகமக்களால் கேள்வி கேட்கப்பட வேண்டியவர் ஆகின்றார்

சர்வதேசத்தின் முன் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, பாகிஸ்தான், சீனாபோன்ற நாடுகளும் இப்போரில் பங்குகொண்ட காரணத்தினால் குற்றவாளிக் கூண்டில் தாங்களும் நிறுத்தப்படுவோம் என்ற காரணத்தினால் சர்வதேச விசாரணையை எதிர்த்துள்ளன.

ஆயினும் நம்புகின்றோம் மாற்றங்கள் உலகில் ஏற்படும். உலக ஒழுங்குமாறும் அப்போது ஈழத் தமிழர்கள் நீதியைப் பெற்றுக் கொள்வார்கள்.

அனந்தி சசிதரன் 1971 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி பிறந்தார். இவர் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த வேலாயுதம் சசிதரன் (எழிலன்) என்பவரை திருமணம் செய்துள்ளார். முகாமைத்துவ உதவியாளராக உள்ள அவர் இலங்கை தமிழரசுக் கட்சி மூலம் அரசியலுக்குள் பிரவேசித்து தற்போது வடக்கு மாகாணசபை உறுப்பினராக உள்ளார்.

இவரது பெற்றோர் காங்கேசன்துறை மற்றும் சுழிபுரத்தை வசிப்பிடமாக் கொண்டவர்கள். அனந்தியின் சகோதரியான வசந்தி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இருந்தவேளை 1989ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டார். இவரது இளைய சகோதரன் போராட்ட காலத்தில் காணாமல் போயுள்ளார்.

அனந்தி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வி கற்றார். பின்னர் 1992 ஆம் ஆண்டு வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் கணக்காளராகப் பணிபுரிந்தார். இராணுவம் யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றிய வேளை வன்னிக்கு இடம்பெயர்ந்த அனந்தி முல்லைத்தீவு செயலகத்தில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்தார். பின்னர் கிளிநொச்சி செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரிந்தார்.

இறுதி யுத்தம் இடம்பெற்ற நிலையில் விடுதலைப்புலிகளின் போராளிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தவேளை அனந்தியின் கணவரான எழிலனும் இராணுவத்திடம் சரணடைந்தநிலையில் காணாமல் போயிருந்தார். அனந்திக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்குமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டுத் தெரிவானார். இன்றுவரை அவர் மாகாணசபை உறுப்பினராக உள்ளார்.



# கைகளைக் கழுவுவது எப்படி?

நீங்கள் தினமும் எத்தனை சந்தர்ப்பங்களில் உங்கள் கைகளைக் கழுவுகின்றீர்கள்? இதோசில பயன் தரும் குறிப்புக்கள்.

கைகழுவுவதால் தடிமன், இன்புளுவென்சா, ஈரழற்சி A, கிருமிகளால் உண்டாகும் வயிற்றோட்டம், புறொன்கியோலைற்றிஸ் போன்ற பல நோய்கள் வராமல் தடுக்கலாம்.

***கைகழுவ வேண்டிய சில சந்தர்ப்பங்கள்:***

உணவைத் தயாரிக்க முன்பு, இறைச்சி, கோழி போன்றவற்றைச் சுத்தம் செய்தபின்பு, சாப்பிட முன்பும் பின்பும்

கழிப்பறையைப்பாவித்த பின்பு, சுகாதாரத் துவாய்களை மாற்றிய பின்பு

காயங்களுக்கு மருந்திட முன்பும் பின்பும்

நோயாளிகளைக் கவனிக்க முன்பும் பின்பும்.

வைத்தியசாலைக்குச் சென்று வந்த பின்பு

கண்வில்லைகளை அணிய முன்பு, மூக்கைச் சீறியபின்பு கைகளில் இருமியிருந்தால் அல்லது தும்மியிருந்தால் அதன்பின்பு

குப்பை கூழங்கள், மண், அழுக்கு நிறைந்த இடங்களைக் கையாண்ட பின்பு

வளர்ப்புப் பிராணிகளுடன் விளையாடிய பின்பு.

***எவ்வாறு கழுவுவது?***


கைகளைச் சவர்க்காரம் போட்டு ஓடும் நீரில் மூன்று முறை கழுவுங்கள்.

பின்பு சவர்க்காரத்தினைக் குறைந்த பட்சம் 20 செக்கன்களுக்குக் கைகளில் தேயுங்கள்.

அப்போது விரல் இடுக்குகள், நகங்களைச் சுற்றிய விரலின் நுனிப்பகுதி, உள்ளங்கை இறைகள் மற்றும் கையின் மேற்புறம் என்பவற்றைக் குறிப்பாகத் தேயுங்கள். பின் நன்றாகக் கைகளைக் கழுவுங்கள்

கைகளைச் சுத்தமான துணி ஒன்றினால் துடையுங்கள்.

***குறிப்பு-*** நீங்கள் பாவிப்பது கிருமி கொல்லி சேர்ந்த சவர்க்காரமாக இருக்க வேண்டியதில்லை. நீங்கள் கைகளைத் தேய்ப்பதில் செலவிடும் நேரமே முக்கியமானது.




**R .திருமதி. பிரதிபனா செல்வகரன்,**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

---

# கேள்விக்கு என்ன பதில்

***எனக்கு உடம்பு முழுவதும் அடிக்கடி கடித்து, ட்டித்து பின் தானாக மறைகின்றது. தோலில் நிரந்தரமான எந்த மாற்றமும் இல்லை. இந்த நிலைமை ஆறு மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது. இந்த நிலைமைக்கு காரணம் என்ன? நான் என்ன செய்ய வேண்டும்.***

இந் நிலைமையானது ஒவ்வாமை காரணமாக ஏற்படுகின்றது. இவ் ஒவ்வாமை நிலைமையானது சில வகை உணவுகள், சுற்றாடலில் காணப்படுகின்ற ஒவ்வாமையை ஏற்படுத்துகின்ற சில பதார்த்தங்களைத் தொடுவதன் மூலமும், சுவாசிப்பதன் மூலமும் ஏற்படலாம். எனவே இந்நிலைமையைத் தோற்றுவிக்கும் காரணிளைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும். குறிப்பிட்ட சிலரில் இந்நிலைமையானது எந்தவிதமான காரணங்களும் கண்டறியப்படாமலும் ஏற்படலாம். இதனை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வாமையைத் தடுக்கும் சில மாத்திரைகள் பாவிக்க வேண்டி ஏற்படலாம். சில வேளைகளில் சில நோய்களின் அறிகுறிகளாகக் கூட மேற்கூறிய நிலைமை காண ப்படலாம். உங்களுக்கு இந்த நிலைமையானது 6 மாதங்களுக்கு மேலாக நீடிப்பதால் வைத்தியர் ஒருவரை நாடி சில சோதனைகளும், அறிவுரைகளும் சிகிச்சை முறைகளும் பெற்றுக் கொள்வது நல்லது.




* * *

***சிலர் அடிக்கடி தடிமனால் பாதிக்கப்பட்டு, தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல் என்பவற்றால் அவஸ்தைப்படுகின்றார்கள். அன்ரிபயோட்டிக்(Antibiotics) பாவித்தும் குணமடைவதில்லை. இதற்கு காரணம் என்ன? இதை எவ்வாறு தடுக்கலாம்?***

இந்த அறிகுறிகளுக்கு ஒவ்வாமையால் சுவாசப்பாதையில் ஏற்படும் அழற்சியே காரணமாகும். இதை ஆங்கிலத்தில் Allergic Rhinitis என்பர். இது கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய் அல்ல. கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய்களுக்கே அன்ரிபயோட்டிக் (Antibiotics) தேவைப்படும். தூசு மற்றும் காற்றில் கலந்துள்ள மகரந்த மணி என்பன சுவாசப் பாதையைத் தூண்டி சில இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்வதால் Allergic Rhinitis ஏற்படுகின்றது. இதனால் அரிப்பு, வீக்கம், மூக்கிலிருந்து நீர் வடிதல், கண்கள் வீங்கி சிவத்தல், மூக்கடைப்பு என்பன ஏற் படுகின்றன. குறித்த ஒரு நபருக்கு சில பொருள் கள் ஒவ்வாமையை ஏற்படுத்தும். அவற்றைக் கண்டறிந்து தவிர்ப்பதே இந்த நிலை ஏற்படுவதை தவிர்க்கும் வழியாகும். சிலருக்கு காலநிலை மாறுபாட்டின் போதும் இவ்வாறு ஏற்படலாம். இதனைத் தவிர்க்க முடியாதவர்கள் மருந்துகளைக் குளிகைகளாகவோ அல்லது நாசியினுள் விசிறியோ (Nasal spray) உள்ளெடுக்கலாம். உதாரணமாக Diphenhydra mine, Cetriazine மற்றும் Loratidine என்பனவாகும். இதில் முதலில் கூறியது நித்திரையைக் கூட்டும் என்பதால பின்னைய இரு மருந்துகளைப் பகல் வேளையில் பாவிக்க முடியும். அவ்வாறு பாவிக்க வேண்டியவர்கள் வைத்திய ஆலோசனையின் பின்னரே எடுக்க வேண்டும்

* * *

***நான் சிறுநீரகக்கல் வந்து அவதிப்பட்டேன். இப்போது கல் வெளியேறிவிட்டது. எதிர்காலத்தில் கல் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? என்ன என்ன உணவுகளைத் தவிர்த்தல் நல்லது?***

உங்களுக்கு ஒரு தடவை சிறுநீரகக் கல் தோன்றி இருப்பதால் உங்களுக்கு ஏற்பட்டது எவ்வகையான கல் என்றும், ஏன் தோன்றியது என்பதும் இன்னமும் உங்கள் சிறுநீர்த் தொகுதியில் கற்கள் உள்ளனவா என்பதும், உங்களின் சிறுநீரகத் தொழிற்பாட்டு வீதம் எவ்வளவு என்பதும் சோதிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. தொடர்ந்து வரும் உங்கள் கவனிப்பு முறையைத் தீர்மானிக்க உங்களின் தற்போதைய நிலை துல்லியமாக அவதானிக்கப்பட வேண்டும். வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய உதவியை நாடுதல் நன்று. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுநீர் சனனித் தொகுதி சம்பந்தமான விஷேட வைத்திய பிரிவு உள்ளது. தேவையேற்படின் வைத்தியர்கள் ஆலோசனைக்கு இப் பிரிவுக்கு உங்களை அனுப்பி வைப்பர்.

**- நன்றி -**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்**

# எல்லாப் பழங்களும் தேவையே


எல்லாப் பழங்களிலும் மனிதனுக்குத் தேவையான கனியுப்புக்கள், விற்றமின்கள், தாதுப்பொருள்கள், நார்ப்பொருள்கள், மாப்பொருள்கள் சில அளவு வித்தியாசத்துடன் காணப்படுகின்றன. குடல் சுத்தமாக இருப்பதுதான் ஆரோக்கியத்தின் அடிப்படை. இதனை வாழைப்பழம் செய்கின்றது. அத்துடன் குடற்புண்களையும் மாற்ற வல்லது. குறைந்தது தினமும் ஒரு பழமாவது சாப்பிடுவதன் மூலம் மலச்சிக்கலைத் தவிர்க்கலாம். இதனால் கொழுப்புச்சத்துக் கிடையாது. இருதய நோயாளிகள் சாப்பிடலாம்.

மாதுளம்பழம் சாதாரண குளிர் சாதனப் பெட்டியில் ஆறுமாதம் வரை பழுதடையாமல் வைத்திருக்கலாம். விற்றமின் C அதிக அளவில் உள்ள பழம் நெல்லிக்கனி (பெருநெல்லி) அதற்கு அடுத்தபடியாக விற்றமின் C நிறைந்தபழம் கொய்யாப்பழம். விற்றமின் A அதிக அளவில் உள்ள பழம் மாம்பழம். அதற்கு அடுத்தபடியாக விற்றமின் A நிறைந்த பழம் பப்பாளிப்பழம்.

முதுமையை எதிர்க்கும்திறன் நெல்லிக்கனியில் இருக்கின்றது. இதில் இருக்கும் ஒருவகை அமிலம் உடலில் உயிர் அணுக்களின் சிதைவைத் தடுத்து நிறுத்துவதாக ரஷ்ய மருத்துவக் கழகத்தால் 1980இல் கண்டு அறியப்பட்டது.

எலுமிச்சம்பழம் விற்றமின் C உட்படப் பலவிதமான கனியுப்புக்கள், விற்றமின்கள், தாதுப்பொருள்கள், அமிலங்கள் என்பன கொண்டுள்ளது. இதனை மருத்துவ மன்னன் என்றும் அழைப்பர். இதில் இருக்கும் சிற்றிக் அமிலம்நோய்க் கிருமிகளை அழிக்கக்கூடியது.

வியர்வை, துர்நாற்றம், அதிக பருமன் ஆனவர்கள் உடலில் உள்ள வியர்வை மணத்தை அகற்றுவற்கு எலுமிச்சம்பழத்தை வெட்டி உடல் முழுவதும் தேய்த்து 10–15 நிமிடங்களின்பின் குளிப்பதால் அடுத்து 24 மணித்தியாலங்களுக்கு வியர்வை, துர்நாற்றம் உங்களை அணுகாது. குடற்புண்கள் உள்ளவர்கள் இதனைப் பருகுவதைத் தவிர்ப்பது நல்லது.



**- ச. சுதாகரன் -**
**தாதிய உத்தியோகத்தர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

கொழும்பு வியாபாரி உடனே, "மண்வெட்டியையும் சேர்த்து தான் சொல்லுறன்."

நாகலிங்கம் "தேசத்தில வேலை செய்யிறதுக்கு மண்வெட்டியைத் தீட்டத் தேவையில்லை" என்றார்.

சரவணன் சிரித்தான். நாகலிங்கம் தொடர்நதார். "வயல் செய்யிறதுக்கு மனம் இல்லையெண்டு சொல்லுங்கோ. நான் இதை ஏன் சொல்லுறனெண்டால் நாங்க வயலுக்குள்ள இருந்துதான் வந்தனாங்கள். இப்ப எல்லாம் குழம்பிப் போச்சு, திரும்பப் போய் வயலுக்க நிண்டுகொண்டு தொடங்க வேணும்."

கொழும்பு வியாபாரி சரரவணனைப் பார்த்துக் கேட்டார். "நீர் யாரட மகன்?"

கொழும்பு வியாபாரி தனக்கு யாழ்ப்பாணத்தில் தெரியாதவன் இல்லை என்ற எண்ணத்தில் அவன் எந்த இடம் என்று கேட்காமல் நீர் யாருடைய மகனென்று கேட்டுவிட்டார்.

சரவணன் பதில் சொன்னான். "ஆண்டியடமகன்" சிரித்தான். அவன் கூறிய ஆண்டியைக் கொழும்பு வியாபாரிக்குத் தெரியவில்லை. அடுத்தாகக் கேட்டார். "யாழ்ப்பாணத்தில் எந்த இடம்?"

"கொத்தளாய்."

சற்று யோசித்து விட்டு நுணுக்கமாகக் கேட்டார். "கொத்தளாய் எங்க இருக்கு?"

சரவணன் இதற்கு எந்தவித பதிலும் கூறாமல் "கொப்பற்ற தலைக்குள்ள்" என்று தனக்குள்ள முணுமுணுத்துக் கொண்டு மேசையிலிருந்து குதித்து அறையைவிட்டு வெளியேறித் தளத்திற்கு வந்தான். மழை தூறிக்கொண்டிருந்தது. காற்று வீசியதால் கப்பல் ஆட்டம்காட்டத் தொடங்கியிருந்தது. நேராகச் சமையல் அறைக்குச் சென்று குமாருடன் ஏதோ கதைத்துவிட்டு, சரவணன் அங்கிருந்து வெளியேறி வந்து முன்தளத்திற்கு இறங்கினான்.


இளைஞர்கள் தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தனர். சாதிப்பிரச்சினை, தமிழரின் எதிர்காலம், இந்த அரசாங்கம் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பது பற்றிய பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டன.

இந்த தளத்தில் பெண்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். கப்பல் கிழக்கு மாகாணத்தை அண்டிப் போகத் தொடங்கிவிட்டதால் எல்லோரும் உற்சாகமாகவே காணப்பட்டனர்.

இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கும், சிங்களப் பெண்களுக்கும் பல வித்தியாசங்கள் இருக்கும். இரு வகையினரையும் வெகு இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளலாம். வாழ்க்கை முறைகளும், பழக்கவழக்கங்களும் மாறுபட்டவையே. தமிழ்ப் பெண்கள் பொட்டு வைத்திருப்பார்கள், மணமானவர்கள் தங்கத் தாலிக்கொடி அணிந்திருப்பார்கள். சிங்களப் பெண்கள் இதை அணிய மாட்டார்கள். சேலை உடுத்துவதிலும் வித்தியாசம் உண்டு. சிங்களப் பெண்கள் சேலை உடுத்தினால் அது உடலோடு ஒன்றிப் போயிருக்கும். தாவணியை வலது பக்கம் விட்டிருப்பார்கள். தமிழ்ப் பெண்கள் பல்வேறு கட்டுப்பாடுகளை வைத்திருக்கின்றனர்.

தென்னிந்தியாவிலுள்ள தமிழர்களுடன் பலவழிகளாலும் ஒன்றுபட்டுக், கலாச்சார ரீதியிலும் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் பெண்கள் தென் இந்தியப் பட்டுச்சேலைகளையும், சிங்கபூர்ச் சேலைகளையும் விரும்பி அணிவார்கள். இந்தச் சேலைகளுக்கு இலங்கை அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாடு விதித்திருந்தது. இதனால் சிங்களப் பெண்கள் அநேகமானோர் இலங்கையில் தயாராகும் சின்தெற்றிக் சேலைகளையே அணிவர். தமிழர்கள் மத்தியில் மிகவும் கண்டிப்பாக நிலவிவரும் சீதன வழக்கம் சிங்களவர் மத்தியில் இல்லாததால் தமிழ்ப் பெண்களைப் போல் பொருள் சேர்ப்பதிலோ, பிள்ளைகள் கல்வி பற்றியோ குறைவாகவே கவலைப்படுவார்கள்.

இதேபோல் தமிழர் மத்தியில் நிலவிவரும் சாதி முறையும், அவ்வளவு கடுமையாகச் சிங்களவர் மத்தியில் கடைப்பிடிக்கப்படாததினால் பெண்கள் வாழ்க்கை முறையில் கட்டுப்பாடுகள் குறைந்தே காணப்படுகின்றன. குடும்பங்களும் பெரிதாக இருக்கும். இனக்கலவரங்களில் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் பெண்கள்தான். தமிழ்ப்பெண்களை இது மிகவும் பாதித்திருந்தது. சிங்களப் பெண்கள் கூட தமிழ் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தார்களாம்.




தேனீர் பரிமாறுவதற்குத் தொண்டர்கள் கீழிறங்கி வந்தனர். சரவணன் தான் கொண்டு வந்த பெட்டியில் வைத்திருந்த சேட்டை எடுத்து மாட்டிக்கொண்டு, இடுப்பில் எதையோ எடுத்து வைத்துக் கொண்டு, இளைஞருடன் வந்து இருந்து கொண்டான். எல்லோருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. இளைஞர்களின் உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்தது.

நீர்கொழும்பைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் தனக்கு நடந்ததைக் கூறிக்கொண்டிருந்தான். தான் ஒரு சிங்களவனின் கடையில் வேலைக்கிருந்தானாம். தன்னுடன் இன்னுமொரு சிங்கள வாலிபன் வேலை பார்த்தவனாம். கலவரம் தொடங்கிய நாள் காலையிலிருந்து இச்சிங்கள வாலிபன் அதைச் செய், இதைச் செய் எனக் கட்டளையிட்டானாம். வழக்கமாக இந்த வேலையெல்லாம் சிங்கள வாலிபன்தான் செய்வானாம். பின்னேரம் நாலு மணியிருக்கும். எண்ணெய்த் தகரங்களை எடுத்துத் துடைக்கச் சொல்லியிருக்கின்றான்; இவன் மறுத்திருக்கின்றான். "என்னடா சொறியிறியா" என்று கூறிக்கொண்டு அங்கிருந்த அரிசி அளக்க பாவிக்கும் பொல்லை எடுத்து மண்டையில் போட்டானாம். சிங்களவனின் நெற்றியிலிருந்து இரத்தம் பீறிட்டிருக்கின்றது."தமிழனைத் தொட உனக்கென்ன துணிவு" என்று கடையை விட்டு ஒரே ஓட்டமாக ஓடி வந்திருக்கிறான். இவன் ஒரு முடக்கால் திரும்பும்போது, ஒரு பொலிஸ் காரன் எட்டிக் கையில் பிடித்து விட்டான். நல்ல காலமாக அது தமிழ்பொலிஸ். "அங்க பாருங்க" என்று தமிழில் பொலிஸ் காரனுக்குக் கூறியிருக்கிறான். பொலிஸ்காரன் திரும்பிப் பார்த்தான். சுமார் முப்பது காவாலிகள் துரத்திக்கொண்டு வந்தனர். "ஓடித் தப்பு" என்று கையைவிட்டு விட்டார். பின்பு கோவில் ஒன்றில் தஞ்சம் புகுந்தானாம். அங்கிருந்து அகதிகள் முகாமுக்கு வந்து சேர்ந்திருக்கிறான்.

அடுத்ததாக மருத்துவ வளாக மாணவன் ஒருவன் தனக்கு நடந்ததைக் கூறினான். மருத்துவக் கல்லூரியில் தமிழ் மாணவர்களும், சிங்கள மாணவர்களும் அன்புடனேயே பழகி வந்தார்கள். ஆனால் பரப்பப்பட்ட வதந்திகள் சிலவற்றைக் கேள்விப்பட்ட இளைஞர்கள் பரபரப்படைந்தனர். அன்று மாலை ஆறு மணிக்கு ஒரு சில சிங்கள மாணவர்கள், யாழ்ப்பாண வளாகத்திலிருந்து வந்து சேர்ந்தனர். அவர்கள் வரும்போது நன்றாகத்தான் இருந்தார்கள். ஒரு மணித்தியாலயம் சென்றிருக்கும். அங்குள்ள கூடத்தில் ஒரே சத்தம். என்னவென்று பார்ப்பதற்கு இம் மாணவன் சென்றிருக்கிறான். அங்கு யாழ்ப்பாண வளாகத்திலிருந்து அனுப்பப்பட்ட சிங்கள மாணவன் தனது சேட்டை கிழித்து விட்டுக்கொண்டு மேசையில் ஏறி உரக்கக்கத்திக் கொண்டிருந்தான்.

"யாழ்ப்பாணத்தில் சிங்களவர் இருக்க முடியாது. மணவிகள் கற்பழிக்கப்படுகின்றார்கள். அவர்கள் மார்புகளை வெட்டியுள்ளார்கள். எங்கள் மாணவரில் சிலர் உயிரிழந்துள்ளார்கள். நீங்களெல்லாம் இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சிங்களவர்தானா? வெட்கமா இல்லையா? ஒரு தமிழனையும் இங்கு இருக்கவிடக்கூடாது" என்றெல்லாம் பேசினான்.

அங்கு இருந்தவர்களும் அதை நம்பியவர்கள்போல் பரபரப்படைந்தார்கள். இவன் மெதுவாக நடந்ததை மற்ற தமிழ் மாணவர்களுக்கும் கூறினான். எல்லோரும் ஒன்று கூடினார்கள். ஒரு சில இடதுசாரிச் சிங்கள மாணவர்கள் வந்து பாதுகாப்பாக நின்றனர். போன் செய்தனர். சில நிமிடங்களில் பொலிசார் வந்து எல்லோரையும் அழைத்துக்கொண்டு அகதிகள் முகாமில் சேர்த்தனர்.

சரவணனால் அங்கு அதிக நேரம் இருக்க முடியவில்லை. மீண்டும் மேல் தளத்திற்கு வந்தான். சரவணன் இந்த நாட்களில் கொழும்பை அடுத்த வத்தளையில் ஓர் அறையெடுத்து தங்கியிருந்தான். அங்கெல்லாம் இவனை யாரென்று கேட்டால் தன்னை ஒரு தோட்ட முதலாளியின் மகனென்று கூறுவான்.

சரவணன் மேலே வந்து மீண்டும் சமையல் அறைக்கு வந்தான். அங்கே முத்தையாவும் ஆட்களும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். குமாரை வெளியே வரும்படி அழைத்தான். குமாரை அழைத்துக் கொண்டு சமையல் சாமான்கள் வைக்கப்பட்டிருந்த கீழறை ஒன்றுக்கு இறங்கினான். அங்கே வெவ்வேறு பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. மா மூடைகள், அரிசி மூடைகள், பால்மா தகரங்கள், வாழைப்பழங்கள் அங்கு மிங்குமாகப் போடப்பட்டிருந்தன. இதில் வேறு யாரும் இருக்கவில்லை. சிறிய அறை, சரவணன் வசதியாக ஒரு மா மூடையின் மீதேறி அமர்ந்து கொண்டான். குமாரும் எதிராக அமர்ந்து கொண்டான்.

"அங்கு ஒருத்தர் இருந்துகொண்டு கொஞ்சம் அதிகமாகக் கதைக்கிறார்."

"என்னவாம்."

"அமிர்தலிங்கத்தால்தான் கலவரம் வந்ததாம். எங்களுக்கெல்லாம் பைத்தியம் பிடிச்சிருக்காம். இப்படி கன கதைகள்."

"எங்கே இருக்கிறார் ஆள்?"

"பின்னுக்கு ஒரு அறை இருக்குது: அதில" எனக் கூறிக்கொண்டு இருவரும் வெளியேறினர். சரவணன் முதலில் ஏறித்தளத்திற்கு வந்தான். குமார் பின் தொடர்ந்தான். நாகலிங்கம் கதைத்துக் கொண்டிருந்தார். அங்கிருந்த மற்ற இளைஞனைக் காணவில்லை. அவன் கீழே தனது இருப்பிடத்திற்குச் சென்றிருந்தான். சரவணன் மெதுவாக அங்கிருந்த மேசை மீது உட்கார்ந்து கொண்டான்.

கொழும்பு வியாபாரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மீது அபார நம்பிக்கை வைத்திருந்தார். அவர் யூ.என்.பி. கட்சிக்குத் தேர்தலில் ஆதரவு அளித்தவர் என்பது நன்கு தெரிந்தது. கொழும்பில் உள்ள பிரபல தமிழ் வியாபாரிகள் யூ.என்.பி கட்சிக்குத் தேர்தலுக்குத் தடையின்றி நிதி அளிப்பார்கள். கொழும்பு வியாபாரி, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார் என்றும், யப்பான்காரருக்கு ஜே.ஆர்.மீது நல்ல நம்பிக்கை இருக்கிறது என்றும், யேர்மன் காரனும் சகல உதவிகளையும் செய்வார்கள் என்பது பற்றியும் தமிழர்களுக்கு எவ்வித ஆபத்துமிராது என்றும் கூறினார்.

> **இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கும், சிங்களப் பெண்களுக்கும் பல வித்தியாசங்கள் இருக்கும். இரு வகையினரையும் வெகு இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளலாம். வாழ்க்கை முறைகளும், பழக்கவழக்கங்களும் மாறுபட்டவையே. தமிழ்ப் பெண்கள் பொட்டு வைத்திருப்பார்கள் மணமானவர்கள் தங்கத் தாலிக்கொடி அணிந்திருப்பார்கள். சிங்களப் பெண்கள் இதை அணிய மாட்டார்கள். சேலை உடுத்துவதிலும் வித்தியாசம் உண்டு. சிங்களப் பெண்கள் சேலை உடுத்தினால் அது உடலோடு ஒன்றிப் போயிருக்கும். தாவணியை வலது பக்கம் விட்டிருப்பார்கள். தமிழ்ப் பெண்கள் பல்வேறு கட்டுப்பாடுகளை வைத்திருக்கின்றனர்**

(தொடரும் .....)

# பெண்கள் மீதான வன்முறை

என தோன்றுகின்ற விடயங்களில் கூட, பின்வருவனவற்றின் நிமித்தம் அது இன்னுமே பாலியல் வல்லுறவுக்கு ஈடாகும்:

• நிர்ப்பந்தத்தின் அல்லது பயமுறுத்தலின் அல்லது அச்சுறுத்திப் பணிய வைத்திருப்பதன் மூலம் அல்லது மரணத்தின் அல்லது காயத்தின் அச்சத்தில் பெண்ணை வைத்திருப்பதன் மூலம் இணக்கத்தை ஓர் ஆண் பெறுதல்.

• பெண் ஒருவர் பாதுகாவலில் அதாவது பாலியல் வல்லுறவு சம்பவம் தொடர்பில் பாதுகாவலில் இருக்கும்வேளை, பெண்ணின் இணக்கத்தை ஓர் ஆண் பெறுதல்.

• ஒரு பெண்ணுக்கு குற்றமிழைப்பவரினால் அல்லது சில வேறு நபரினால் மதுபானம் அல்லது போதைப்பொருள் வழங்கப்பட்டு, அவர் மதிமயங்கி இருந்தால், அத்தகைய நிலைமையின் கீழ் பாலியல் உடலுறக்கு அவர் இணங்கினாலும் கூட, அத்தகைய நடவடிக்கை பாலியல் வல்லுறவுக்கு ஈடாகும்.

• பிரச்சனையில் உள்ள பெண்ணின் கணவராக பாசாங்கு செய்வதன் மூலம், இணக்கத்தை ஓர் ஆண் பெறுதல்.

**பாலியல் வல்லுறவின் சாட்சி**

வழமையாக பெண் ஒருவர் மீது ஏனையோர் சமூகமளித்திருக்காத போது பாலியல் வல்லுறவு மேற்கொள்ளப்படுவதுடன், அதை நிரூபிப்பதற்கு சாட்சிகள் இருப்பதில்லை. ஆனால், பாலியல் வல்லுறவை நிரூபிப்பதற்கான வேறு வழிகள் உள்ளன. அவை வருமாறு:

வன்முறையை ஆண் ஒருவர் பயன்படுத்தியிருந்தால், பிறப்புறுப்பு பகுதியில் காயங்கள் அல்லது வேறு காயங்கள் (வெளிப்புறத்தில்) இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை).

இணக்கமின்றி பாலியல் உடலுறவு இடம்பெற்றுள்ளது என்பதை நிரூபிக்கக்கூடிய கிழிந்த ஆடைகள்.

பரிசோதிக்கப்படுகின்ற வேளையில் மருத்துவ உத்தியோகத்தருக்கு குற்றவாளியையிட்டு பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவரினால் செய்யப்பட்ட விபரம்

கையடக்கத் தொலைபேசிகளால் சம்பவம் பற்றிய காட்சிகள் எடுக்கப்பட்டிருந்தால், அதையிட்டு ஏதாவது பதிவுகள் (ஓடியோ அல்லது வீடியோ)

பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவ்ர மீது காணப்படும் விந்து, தலைமயிர், இரத்தம் போன்ற குற்றமிழைத்தவ்ரின் DNA சான்று

ஏனைய தருணங்களில் பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவரை நோக்கி குற்றமிழைத்தவரினால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட பயமுறுத்தல்கள் அத்துடன் ஏதும் இருந்தால், அதை ஆதரவளிப்பதற்கு மூன்றாம் தரப்பினரின் நற்சான்றுகள்

பெண் ஒருவர் மீது பாலியல் வல்லுறவு நிகழ்த்தப்பட்டு, பாலியல் வல்லுறவுடன் குற்றமிழைத்தவர் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தால், அப்பெண் பின்வருவனவற்றை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்:

குற்றத்தை இழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆணின் அடையாளம்

குழு பாலியல் வல்லுறவைப் பொறுத்தளவில் சம்பந்தப்பட்ட சகல ஆண்களினதும் அடையாளம். சகல ஆண்களையும் அடையாளங் காண முடியாவிட்டாலும், வேறு சாட்சியம் மூலம் அவர்களை அடையாளங் காண்பது சாத்தியமானதாகும்.

பெண் மீது உண்மையாகவே பாலியல் வல்லுறவு நிகழ்த்தப்பட்



டுள்ளது.

நடவடிக்கைக்கு பெண் இணங்கவில்லை.

**குற்றத் தீர்ப்பொன்றைப் பெறு வதில் உள்ள சில கஷ்டங்கள்:**

சாட்சியம் குறித்த சட்டத்தில் பால்நிலையிலான ஒருதலைப் பட்சம்

மூர்க்கத்தனமான குறுக்கு விசாரணை

சாட்சியம் குறித்த பாரபட்சத்திலான விதிகள்

இணக்கமின்மையை நிரூபிப்பதில் உள்ள கஷ்டம்

சில வேளைகளில் நீதியைப் பெறுவதிலிருந்து பெண்களைத் தடுக்கும் வகையில் நீதிமன்ற நடைமுறைகளினதும், வழக்கத்தினதும் மீதான சட்டம் செயற்படுகின்றது. பாலியல் வல்லுறவின் குற்றத்தை நிரூபிப்பதற்கு பெண்ணின் அல்லது பெண்பிள்ளையின் இணக்கமின்மை முக்கியமானது. எனவே, இப்பிரச்சனை மீது அவர் மூர்க்கத்தனமான குறுக்கு விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். எனினும், சட்டபூர்வமான பாலியல் வல்லுறவைப் பொறுத்தளவில், திருமணமான பெண்களின் விடயத்தில் புறநீங்கலாக, 16 வயதுக்கு குறைந்த சிறுமியொருவருடன் பாலியல் உடலுறவு இடம்பெற்றுள்ளது என்று மட்டுமே வழக்கைத் தொடர்ந்துள்ள தரப்பு நிரூபிக்க வேண்டும் என்பதால், இணக்கம் முக்கியமல்ல.

பாலியல் வல்லுறவை மேற்கொண்டதாகக் கூறப்படுபவரின் அதிகாரத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ள பெண்ணின் மீதான பாலியல் வல்லுறவின் சூழ்நிலையொன்றில், இணக்கமின்மையை நிரூபிப்பது வழக்கைத் தொடரும் தரப்புக்கு கஷ்டமாக விளங்குகின்றது. இப்பிரச்சனை குறித்து சட்ட நிபுணர்கள் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளதுடன், பெண்ணினால் அல்லது பெண்பிள்ளையினால் உடலுறவுக்காக வெளிப்படுத்தப்படும் இணக்கத்தை நிரூபிப்பதற்கு எதிர்த்தரப்பு கோரப்படுகின்றவாறு, பாதுகாவல் ரீதியான பாலியல் வல்லுறவின் வழக்குகளில் நிரூபிக்கும் பொறுப்பில் நகர்வொன்றுக்கான இந்திய அணுகுமுறையை முன்மொழிகின்றனர்.

பெண்ணின் ஒழுக்கமும், வேறு ஆண்களுடன் ஏற்கனவே அவர் இணக்கத்துடன் உடலுறவைக் கொண்டிருந்தார் என்ற உண்மையும் குற்றத்திற்கு தொடர்பானவை அல்ல ஆனால், சாட்சியம் குறித்த விதிகளில் உள்ள ஒருதலைப்பட்சமானது உண்மையில் இவ் விடயம் மீது சாட்சியம் வழிநடத்தப்படுவதில் முடிவடையக்கூடும்.

**பாலியல் வல்லுறவை மேற்கொண்டதாகக் கூறப்படுபவரின் அதிகாரத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ள பெண்ணின் மீதான பாலியல் வல்லுறவின் சூழ்நிலையொன்றில், இணக்கமின்மையை நிரூபிப்பது வழக்கைத் தொடரும் தரப்புக்கு கஷ்டமாக விளங்குகின்றது. இப்பிரச்சனை குறித்து சட்ட நிபுணர்கள் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளதுடன், பெண்ணினால் அல்லது பெண்பிள்ளையினால் உடலுறவுக்காக வெளிப்படுத்தப்படும் இணக்கத்தை நிரூபிப்பதற்கு எதிர்த்தரப்பு கோரப்படுகின்றவாறு, பாதுகாவல் ரீதியான பாலியல் வல்லுறவின் வழக்குகளில் நிரூபிக்கும் பொறுப்பில் நகர்வொன்றுக்கான இந்திய அணுகுமுறையை முன்மொழிகின்றனர்.ஸ்ரீ**

## ஒரு நோக்கு

**பெண்ணின் ஒழுக்கமும், வேறு ஆண்களுடன் ஏற்கனவே அவர் இணக்கத்துடன் உடலுறவைக் கொண்டிருந்தார் என்ற உண்மையும் குற்றத்திற்கு தொடர்பானவை அல்ல ஆனால், சாட்சியம் குறித்த விதிகளில் உள்ள ஒருதலைப் பட்சமானது உண்மையில் இவ் விடயம் மீது சாட்சியம் வழி நடத்தப்படுவதில்**

# பாலியல் வல்லுறவு

**பாலியல் வல்லுறவுக்கு தண்டனை என்ன?**

ஆகக் குறைந்தது ஏழு (7) வருடங்களைக் கொண்ட கடுங்காவல் சிறைத்தண்டனை என்பதுடன், இது ஆகக்கூடுதலாக அபராதத்துடன் இருபது (20) வருடங்களுக்கு நீடிக்கப்படலாம்.

விளைவிக்கப்பட்ட காயங்களுக்கு பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைக்கின்றவருக்கு நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தொகையொன்றை நஷ்ட ஈடாகச் செலுத்துமாறும் குற்றமிழைத்தவருக்கு கட்டளையிடப்படும். காயங்கள் உடல் ரீதியாக இருக்க வேண்டும் அல்ல.

பின்வரும் தருணங்களில், பாலியல் வல்லுறவுக்கான ஆகக் குறைந்த தண்டனை பத்து (10) வருடங்களுக்கு குறையாத கடுங்காவல் சிறைத்தண்டனையாக இருக்கும்.

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அதிகாரத்திலான நிலையொன்றில் உள்ள நபர் ஒருவர் தனது உத்தியோகபூர்வ நிலையை அனுகூலத்திற்கு எடுத்து, உத்தியோகபூர்வ ரீதியில் தனது பாதுகாவலில் உள்ள பெண் ஒருவர் மீது பாலியல் வல்லுறவை இழைத்தல் அல்லது பெண் ஒருவரை முறைகேடாக கீழ்ப்படுத்தி அவர் மீது பாலியல் வல்லுறவை இழைத்தல்.

• விளக்கமறியல் கூடமொன்றின் அல்லது சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பாதுகாவலின் வேறு இடத்தின் அல்லது பெண்கள் அல்லது சிறுவர் நிறுவனமொன்றின் (எவ்விதத்திலும் விபரிக்கப்பட்டுள்ளவாறு பெண்களையும், சிறுவர்களையும் வரவேற்பதற்கும், அவர்களைப் பராமரிப்பதற்குமான ஒரு நிறுவனம்) நிருவாகத்தின் உறுப்பினர் ஒருவர் தனது பதவி நிலையை அனுகூலத்திற்கு எடுத்து, அத்தகைய விளக்கமறியல் கூடத்தில், இடத்தில் அல்லது பாதுகாவல் நிறுவனத்தில் தங்கியுள்ள ஏதாவது பெண் மீது பாலியல்வல்லுறவை இழைத்தல்.

• வைத்தியசாலையொன்றின் நிருவாகத்தில் உள்ள நபர் ஒருவர் அல்லது பணியாளர் ஒருவர் தனது பதவி நிலையை அனுகூலத்திற்கு எடுத்து, அவ் வைத்தியசாலையில் உள்ள பெண் ஒருவர் மீது பாலியல் வல்லுறவை இழைத்தல்.

• பெண் ஒருவர் கர்ப்பிணியாக இருக்கின்றார் என அறிந்திருந்தும், அவர் மீது பாலியல் வல்லுறவை இழைத்தல்.

• பதினெட்டு வயதுக்கு குறைந்த பெண் ஒருவர் மீது ஆண் ஒருவர் பாலியல் வல்லுறவை இழைத்தல்.

• உடல்ரீதியாக அல்லது உளவியல் ரீதியாக அங்கவீனமான பெண் ஒருவர் மீது ஆண் ஒருவர் பாலியல் வல்லுறவை இழைத்தல்.

• குழு பாலியல் வல்லுறவு இடம்பெறுகின்ற விடத்து. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களினால் அல்லது குழுவினால் இழைக்கப்படும் பாலியல் வல்லுறவின் குற்றத்தினால் குழு பாலியல் வல்லுறவு இடம்பெறுகின்றது. எனவே, அத்தகைய குற்றத்தை இழைப்பதில் குழுவில் உள்ள ஏனையோர் உடந்தையாக இருக்கும் வரை பாலியல் உடலுறவின் உண்மையான நடவடிக்கையில் ஒரு நபர் மட்டுமே போதுமானதாகும்.

பாலியல் வல்லுறவுக்கான ஆகக்குறைந்த தண்டனை 15 வருடங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்பதுடன், இதில் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டவர் 16 வயதுக்கு குறைவாகவும், குற்றமிழைத்தவருக்கு பின்வருவோராகவும் இருத்தல்:

• மகள்/பேத்தி

• சுவீகார மகள்/சுவீகாரப் பேத்தி

• சகோதரி/ ஒன்றுவிட்ட சகோதரி/ சுவீகாரச் சகோதரி

• மருமகள்/ பெறாமகள்/ ஒன்றுவிட்ட மருமகள்/ ஒன்றுவிட்ட மருமகள்/ சுவீகார மருமகள்/ பெறாமகள்.

• தாயின், தந்தையின் மறுமணத்தின் மூலமான மகள், தாயின், தந்தையின் மறுமணத்தின் மூலமான பேத்தி

நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டவாறு, நஷ்டஈட்டைச் செலுத்துவதற்கு தவறுதல், ஆகக்கூடுதலாக இரு (2) வருடங்களைக் கொண்ட சிறைத் தண்டனையொன்றின் நீடிப்பொன்றை விளைவிக்கும்.

தொடரும்

# தன்வினை

## (தொடர்கதை - 7)

சேர் நான் பிள்ளைக்கு திருப்ப கட்டித்தரலாம் வா எண்டு போக் காட்ட விரும்பலே. நாலு பேருக் குத் தெரியாம நீங்கதான் அந்த தம்பியிட்ட சொல்லி பிரிச்சுத்தர வேணும். பிளீஸ் மாஸ்ரர் உங் களை கெஞ்சி கேட்கிறேன். இந்த உதவியைச் செய்யுங்கள். இப்படி கந்தப்பர் அழுதழுது கூறிக் கொண்டிருப்பதைக் கேட்ட முருகேசு மாஸ்ரரின் கண்களிலும் கண்ணீர் எட்டிப் பார்க்க அதனை அவர் துடைத் துக் கொண்டிருக்கும் போது சரி ஐயா நாங்க இப்ப அந்த ரெலிபோன் கவரேச் உள்ள ஏரியா வுக்கு போக வேணும் நீங்களும் வாங்க. நான் ஏற்கனவே அந்த தொலைத்தொடர்புக்குரியவர்களைப் பின்தொடரச் சொல்லியிருக்கு. அதால கண் கலங்காம ஜீப்பில ஏறுங்கையா, மாஸ்ரர் நீங்களும் வாறியளோ அல்லது வீட்டை கொண்டுபோய் விடட்டுமா என பொலிஸ் இன்ஸ்பெக்ரர் கேட்க, ஐயோ தம்பி எனக்கு முதல்ல இந்த அலுவல்தான் மிக முக்கியம் அந்தாளின்ர அழுகையையும் கதை யையும் கேட்க எனக்கு விசராய் இருக்கு. அந்தாள் பிள்ளையை நம்பித்தான் எவ்வளவு பாசமாய் வளர்த்தது. அடுத்தவனிட்ட என் டைக்கும் இரந்திடாத மனுசன் அடுத்தவனுக்கு கஸ்ரம் எண்டா உதவி செய்யிற மனுசனுக்கும் அந்தாளின்ர கௌரவத்துக்கும் அந்தப் பிள்ளை இப்பிடி நம்பிக் கைத் துரோகம் செய்து தலை குனிய வைச்சிட்டுது. அந்தப் பிள்ளையைக் கண்டுபிடிச்சு குடுத் தாதான் எனக்கு நின்மதி முதல்ல. அந்த ஏரியாவுக்கு விடு தம்பி என நடந்து நடந்து கதைத்துக் கொண்டுவந்த முருகேசு மாஸ்ரர் பெரிய ஜீப் வாகனத்தில் நாலை ந்து மப்ரியில் உள்ள பொலிஸ் காரரோடு ஏறி இருக்கிறார்.

இதென்னடா பொலிஸ்காரர் என்றால் பொலிஸ் உடுப்பிலதானே வருவாங்க இவங்கள் சும்மா சாதாரண மனுசர் மாதிரி சாதாரண ரீசேட்டும் ஜீன்சோடும் வாறாங்களே ஏன் இப்படி வாராங்கள் என இன்ஸ்பெக்ரரிடம் கேட்க வேண் டுமென முருகேசு மாஸ்ரரின் மனம் உந்தியபோதும் வாய்திறக்காமல் அமைதியாக இருந்தார். இந்த பொம்பிளை பிள்ளைகளின்ர மனசு கடலின் ஆளத்தைவிட ஆளமா னது. அதில இறங்கி என்ன இருக்கெண்டு யாராலுமே அறிய முடியாது. "கம்பியூட்டர் வந்த காலத்திலும் பொம்பள மனசை புரியல நண்பா மனசையும் கூட மணிப்பேசிஸ் மறைச்சு வைப்பா பொம்பளை தாம்பா" என்ற வைர முத்தரின் வைரவரிகள் முருகேசு மாஸ்ரருக்கு அப்போது ஞாபகம் வந்தது. இதற்கிடையில் என்ன மாஸ்ரர் கடுமையா யோசிக்கிறியள் என்ன பொலிஸ் உடுப்பு இல்லாம வாறாம் எண்டு பாக்கிறியளா. இப் பத்தே காலத்து பையங்கள் பற்றி உங்களுக்கு தெரியும்தானே சேர் பொலிஸ் நடமாட்டத்தைக் கண்டா உடனை அலேட்டாகி ரெலிபோனில மசேச் குடுத்து ஓடி ஒழிச்சிடு வாங்க. அதால தூரத்தில இறங்கி மெல்ல மெல்ல தான் போய் சரியான இடத்தில ஆக் களை கைது செய்யணும். இதை விட இன்னொரு காரணம் என்ன ண்டா பொலிஸ் உடுப்பில வந்து பிடிச்சா நிச்சயம் கோட்டு கேஸ் என்று அலையோணும். உங்க ளிட்ட அந்த ஐயா கெஞ்சியதை பார்த்தனான். அதாலதான் இப்படி நாங்க எல்லோரும் மப்ரி பொலிசா வாறம். வாகனத்தில இருந்து இறங்கி அவங்க தங்கி இருக்கிற இடம் வரைக்கும் யாரும் அறியா வகையில் செல்லணும் எனக் கூறியபடி தனது கையில் இருந்த லப்ரப் மூலம் கந்தப்பர் கொடுத்த ரெலிபோன் நம்பர் கொண்ட போனுக் கான ஜிபி.ஆர்.எஸ் தொடர்பு பற்றி இன்ஸ்பெக்ரர் பார்த்துக் கொண்டி ருந்தார்.

ஏற்கனவே தான் அனுப்பியி ருந்த மப்ரி பொலிஸ்காரர் மூலம் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் நபர்கள் பற்றிய தகவல்களை அவ்வவ்போது பெற்றுக் கொண் டிருந்த பொலிஸ்காரர் முகத்தில் திடீரென பிரகாசம் தோன்றியது. சேர் நாங்க தேடிவந்த ஆட்கள் மாட்டிகிட்டாங்க. ஏற்கனவே அனுப்பின மப்ரி பொலிஸ் அவங் களை அரஸ் பண்ணிட்டுது மோட் டார் சைக்கிள்ள அழைச்சு வரச் சொல்லி இருக்கிறன். கொஞ்சம் அந்த மரத்தடியில காவல் நிப்பம் எனக் கூறிவிட்டு மரத்தடிக்கு வாகனத்தைச் செலுத்தச் சொல்லி தனது வாகன சாரதியிடம் தெரு விக்க, வாகனசாரதி மரத்தடியில் நிறுத்தினான். முருகேசு மாஸ்ட ரருக்கு பழக்கப்பட்ட இடம் என்ப தால் முருகேசு மாஸ்ரர் வாகனத் தைவிட்டு இறங்கவில்லை. அதே நேரம் கந்தப்பரும் அந்த வாக னத்தை விட்டு இறங்கவில்லை. முருகேசு மாஸ்ரரின் ஊரில் கந்தப் பருக்கும் நன்கு பழக்கமானவர் கள் இருக்கிறார்கள். அதனால் அவர் வண்டியை விட்டு இறங்கவில்லை.


கந்தப்பர் இப்படி பயப்படுவ தற்கு காரணம் பெட்டை தன்ர சாதியைவிட குறைஞ்ச சாதிய லோட ஓடிவிட்டாள் என்பது ஓர் புறம். சின்ன வயசிலேயே மாப் பிளை பிடிச்சிட்டாள் தாய், தேப்பன்ர வளர்ப்புச் சரியில்லை என்ற ஊரா ரின் பழிப்புக்கு ஆளாக வேணும் என்ற காரணம் மறுபுறம். அண்ணை பயப்படாதைங்கோ பொலிஸ் இப்ப கொண்டுவந்து தந்திடும் நீங்க வீட்டை கூட்டின் கிட்டு போகலாம். ஆனா தயவு செய்து பிள்ளையின்ர மனம் நோகப் பேசாதைங்க, முடிஞ்ச வரை அன்பாய் இருங்க, ஆறேழு வருசம் போக, அதே பையனுக்கு கட் டித் தாறதாய் சொல்லி பிள்ளையை சமாதானப் படுத்துங்க என முருகேசு மாஸ்ரர் கூற என்ன சேர் சொல்லுறீங்க அப்ப நான் என்ர மற்ற புள்ளை யளை கிணத்திலையே தள்ளிறது. மூத்தவள் சாதி குறைஞ்சவனைச் செய்தா மற்ற பிள்ளையளை எங்கட ஊரில யாரும் கட்ட மாட்டாங்க. சரி பிறத்தில கட்டி வைப்பம் எண்டு யோசிச்சா அதுவும் சரி வராது. நீங்களே உங்கட ஊரிலும் எங்கட ஊரிலும் இந்த யதார்தத்தை பார்த்திருப்பி யள்தானே எனக் கந்தப்பர் சொல்ல,

"ஜாதிகள் இல்லையடி பாப்பா குல தாழ்ச்சி உயர்ச்சி கொள்ளல் பாவம்" எனப் பாரதியார் சொல்லி யென்ன பயன். உங்களைப் போன்ற பணம் படைத்தவர்கள் கொஞ்சம் இறங்கினால் இந்த சாதிப்பிரச்சனை ஒழியும். என முருகேசர் கூற ஐயா நீங்க சொல்லுறது சரிதான். ஆனால் வெண்டைக்காய் வெட்டி வதக்கினாலும் வழு வழுப்பு போகாது என்பது நமது பழ மொழிகள். இதுமட்டுமல்ல வள்ளுவனே சொல்லியிருக்கிறார்.

"நிஜத்தின் கண் தாழ்காட்டும் காட்டும் நல்ல குலத்தின்கண் குடிப்பிறந்தார் வாய்னூல்" ஐயா இப்படி வாதப்பிரதிவாதம் செய்ய லாம். ஆனா ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது. கற்பது சினிமாவில காட்டுவது எல்லாம் யதார்த்த வாழ்க்கைக்கு உதவாது. இதை நீங்க எவ்வளவு தூரம் ஏற்கிறி யள் எண்டு தெரியாது. எங்கட ஊரில நான் ஓம் எண்டாலும் எங்கட சாதிப்பயலுகள் சம்மதிக் காது. எதுக்கும் இப்ப அவள் குழந்தை பொட்டை இப்ப எடுக்கிற முடிவை ஐந்து வருஷம் கழிச்சு அந்த முடிவில உறுதி யாய் இருந்தா என்னால என்ன செய்ய முடியும். ஏதோ இறைவன் விட்ட வழி. என கந்தப்பர் கூறினார்.

காந்தி

(தொடரும் .....)





No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com

# தவற விடாதீர்கள்

கிரிக்கெட் இரசிகர்கள் மிக ஆவலோடு எதிர்பார்க்கும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் ஏப்ரலில் இந்தியாவில் நடைபெறவுள்ளன. ஆனால் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெறுமா, நடைபெறாதா என்று காணப்படும் இழுபறி நிலையில், அதிலும் இருகூட்டுத் தொடர் பற்றி இறுதி முடிவு எடுப்பதில் இந்திய கிரிக்கெட் சபை நீண்டகாலதாமதம் செய்வது தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடுப்பில் இருப்பதாகத் தெரிகிறது.



இந்தக் கோபம் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப் போட்டிகளை பாகிஸ்தான் பகிஷ்கரிக்கும் நிலைக்குச் சென்று விடுமோ என்ற அச்சம் ஒன்று உருவாகியுள்ளது. என்ன காரணங்கள் இருந்தாலும் பாகிஸ்தான் இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டியில் பங்கு கொள்ளாமல் விடுவதை கிரிக்கெட் இரசிகர்கள் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இதே கருத்தை தனது நாட்டின் கிரிக்கெட் வளர வேண்டும் என விரும்பும் வசீம்அக்ரமும் எடுத்துக் காட்டியுள்ளார். இந்தியா, இரு நாடுகளுக்கும் இடையிலான தொடரை நீண்ட தாமதத்துக்கு உள்ளாக்குவது தெரிந்த விடயம்தான். இப்போது தாமதம் இருந்தாலும், விரைவில் இந்தத் தடங்கல் நீங்கும் என்பது உண்மை. இருந்தாலும் பாகிஸ்தான் இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வது அவசியம். இதனைத் தவிர்த்தால் அது நீண்டகாலக் கண்ணோட்டத்தில் பாகிஸ்தானுக்கே பாதகமாக அமையும். மேலும் எமது கிரிக்கெட் வீரர்களுக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கும் பாதகமாகவும் அமையும். ஒருவேளை இந்தியாவுடன் கிரிக்கெட் விளையாடாவிட்டாலும் கிரிக்கெட் ஒன்றும் அழிந்துவிடப் போவதில்லை. ஆனால் இதனால் தீவிரவாதம் ஒன்றும் முடிந்துவிடப் போவதில்லையே என்று கூறியுள்ளார். மேலும் இந்திய கிரிக்கெட் மீதும், வீரர்கள் மீதும் பாகிஸ்தான் ரசிகர்கள் நிறையவே அன்பு வைத்திருக் கிறார்கள். அதே போலத்தான் நானும் அன்பு வைத்திருக்கிறேன் என்று முடிக்கிறார்.

இந்தியா பாகிஸ்தானுக்கு இடையிலான பல்வேறு கருத்து வேறுபாடுகள், இரு நாட்டு அணிகளும் சந்தித்துக் கொள்வதில் தடையாக இருக்கின்றன என்பது ஒன்றும் ரகசியம் அல்ல. ஆனால விளையாட்டை வேறெதிலும் கலக்க விரும்பாத சர்வதேச கிரிக்கெட் ரசிகர்கள் இரண்டு அணிகளும் என்று சந்திக்கும் என்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். அதேபோல அடுத்த வருடம் இந்தியா வில் நடைபெறவுள்ள இருபதுக்கு இருபது உலகக்கிண்ணப் போட்டி களில் பாகிஸ்தான் அணி கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்.




அடுத்த மார்ச் ஏப்ரலில் இந்தியாவில் நடைபெறவுள்ள இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான அட்டவணையையும் குழுக்களையும் ஐ.சி.சி வெளியிட்டுள்ளது. இந்தப் போட்டிகளில் மகளிர் போட்டிகளும் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாகவே சுப்பர் 10 அணிகளாக எட்டு நாடுகள் தெரிவாகியுள்ளன. இதில் குழு ஒன்றில் இலங்கை, தென்.ஆபிரிக்கா, மே.இந்தியத்தீவுகள், இங்கிலாந்து அணிகளும் குழு இரண்டில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து அணிகளும் இடம்பெறுகின்றன.

இதற்குப் புறம்பாக இன்னும் இரண்டு குழுக்களில் இருந்து வெற்றிபெறும் இரண்டு அணிகள் சுப்பர் 10 அணிகள் இரண்டிலும் ஒவ்வொரு அணியாக இடம்பெற்று மறுபுறம் இந்தச் சுற்றுப்போட்டியே இந்திய அணித்தலைவர் டோனிக்கு இறுதி சுற்றுப்போட்டியாகவும் அமையக் கூடும். எனவே இவர் இலேசில் விட்டுக் கொடுக்கப்போவதும் இல்லை. மேலும் இந்திய மண்ணிலேயே சுற்றுப்போட்டி நடைபெறுவது இந்திய அணிக்குச் சாதகம் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இன்னொரு அணி தென்.ஆபிரிக்கா இதுவரையில், எவ்வளவுதான் சிறப்பாக விளையாடினாலும் அதிஉயர் கிண்ணம் ஒன்றை வெல்லும் அதிர்ஷ்டம் இல்லாத அணி.

இந்திய சுற்றுப்பயணம் அவர்களுக்கு வாய்ப்பாக அமையவில்லை என்பது உண்மைதான். ஆனால் மார்ச் மாதம் மீண்டும் வரும்போது மிகப் பெரிய வைராக்கியத்துடன் தான் வந்திறங்குவார்கள்.

எனவே எல்லோரிடமும் நிறைய எதிர்பார்க்கைகள் இருக்கின்றன.

# விரைவில் சந்திப்போம்

ஜோசப் கிருஷ்ணா

மொத்தம் 10 அணிகளைக் கொண்டதாக சுற்றுப்போட்டி அமையும். இந்தக் குழுவில் பங்களாதேஷ், நெதர்லாந்து, அயர்லாந்து, ஓமான் நாடுகளும் இன்னொரு குழுவில் சிம்பாப்பே, ஸ்கொட்லாந்து, ஹொங்கொங், ஆப்கானிஸ்தான் அணிகள் கலந்துகொள்ளும்.

முன்னதாக 2014 இல் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றிருந்தது. இம்முறை அநேகமாகப் புதுமுகங்களைக் கொண்ட இலங்கை அணி எந்தள விற்கு சோபிக்க முடியும் என்று தெரிய வில்லை.



பொறுத்திருந்து பார்ப்போம்.

# தினச்செய்தி வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டம் ஜனவரியில்

கொழும்பில் பிரபலமாகவுள்ள 4 உதைபந்தாட்ட அணிகள் வடமாகாணத்திலுள்ள 4 உதைபந்தாட்ட அணிகளும் இணைந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை "தினச்செய்தி" வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் மோதவுள்ளன.

வடமாகாணத்தில் பலாலி விண்மீன், வல்வெட்டித்துறை ஆதிசக்தி, கம்பர்மலை யங்கம்பன்ஸ், பாசையூர் சென்.அன்ரனீஸ், மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை யங்கென்றீஸ், நாச்சிக்குடா சென்மேரிஸ், மன்னார் சென்.ஜோசப், மன்னார் கில்லரி, மன்னார் சென்.அந்தோனியார்புரம், முல்லைத்தீவு சென்யூட், வவுனியா யங்ஸ்ரார் ஆகிய அணிகள் வடமாகாணம் சார்பாக பங்கேற்கவுள்ளன.

இப் போட்டி வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடாத்த தினச்செய்தி திட்டமிட்டுள்ளது. விலகல் முறையில் போட்டி ஆரம்பிக்கப்படும்.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள இலங்கை உதைபந்தாட்ட சமாசத்தில் தினச்செய்தி பிரதம ஆசிரியருடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் அனுர டி சில்வா, செயலாளர் சி.பாலேந்திரா அந்தோனி பிரதம நிறைவேற்று அதிகாரி ஆனந்த் அந்தோனிப்பிள்ளை, ஊடகத்துறைப் பணிப்பாளர் யூரியன் ருவி ஒன்டாயி ஆகியோர் பேச்சுக்களை நடாத்தினர்.

இந்தப் பேச்சின் முடிவில் தினச்செய்தி வெற்றிக்கிண்ணத்திற்கான இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ரூபா ஐந்து இலட்சமும், வெற்றிக் கிண்ணமும், தினச்செய்தி சுழல் கிண்ணமும் வழங்கப்படும். இரண்டாவது இடத்தைப் பெறும் அணிக்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் கேடயமும் வழங்கப்படும். மூன்றாவது இடத்தைப் பெறும் அணிக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த செப்ரெம்பர் மாதம் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டு மைதானத்தில் தினச்செய்தியின் அனுசரணையுடன் ஒரு மாத காலமாக மின்னொளியில் "வடக்கின் வல்லவன் – 2015" உதைபந்தாட்டத்தொடர் நடாத்தப்பட்டது. இதில் வடக்கின் வல்லவனுக்கான பட்டத்தை யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் தனதாக்கியது. இதில் முதலிடம் பிடித்த அவ்வணிக்கு இரண்டு இலட்சம் ரூபா பணப்பரிசும் தினச்செய்தியின் சுழல் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டது.

இரண்டாம் இடத்தைப் பிடித்த மன்னார் கில்லரி அணிக்கு 1 இலட்சம் ரூபா பணப்பரிசும் மூன்றாம் இடத்தைப் பிடித்த மன்னார் சென்லூசியஸ் அணிக்கு ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் உதைபந்தாட்டத்தை வளர்க்கும் நோக்குடன் தினச்செய்தி பல்வேறு போட்டிகளை தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# ஒரு கணம்...

புரிந்தும் கொள்ள நேரப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ள நிலை.

எனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களை யாரும் தாழ்வாகவோ, வெறுப்பாகவோ நோக்குகின்றதன்மை இயலுமான வரை குறைக்கப்படவேண்டும். உடலில் ஏற்படும் நோய்போல அவருக்கு மனதளவில் தற்காலிகமாக ஏற்படும் ஓர் இயலாத் தன்மைதான் இதற்குக்காரணம்.

தற்கொலை எண்ணம் ஏற்பட்டு வலுப்படுகையில் அந்த நபர் தன்னையே கேள்வி கேட்டு மனநிலையைச் சீராக்கலாம். புரிந்துணர்வு உடைய ஒருவருடன் உரையாடித் தெளிவடைய வேண்டும்.

வன்னியில் இடம் பெயர்ந்த எம்மக்கள் இத்தனை இழப்பின் பின்பும் தமது நிலையைக் கட்டி எழுப்புகின்ற மனவலிமையுடையவர்களாக இருக்கின்றபோது, அதே தமிழராகிய எம் யாழ். குடாநாட்டு இளம் சமுதாயம் ஏன் இப்படி வழிமாறிக் கொண்டு இருக்கிறது. விடையை அவரவரே தேடிக் கொள்வோம்.

விடையளிக்க வேண்டியவர்களின் பட்டியலில் பெற்றோர், நண்பர்கள் மருந்தக முதலாளிகள். (எந்த விதமான மருந்துச் சிட்டைகளுமின்றித் தொகையான மாத்திரைகளை வழங்குதல்).

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# தமிழ் மக்கள்...

ளுக்கும் எவ்வித விமோசனமும் இல்லை.

தமிழ் மக்கள் பேரவை என்பது உருவாக்கம் பெற்றவுடன் அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தமிழ்மக்களின் உரிமைகள், நலன்கள், அபிலாசைகள் என்பவற்றை வலியுறுத்தும் வகையிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் இங்கு இயல்பாகவே ஒரு கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாகிறது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரித்துக் கொண்டிருப்பதால் என்னபயன்? ஒரு புறம் அரசுடன் நல்லுறவு. மறுபுறம் அரச எதிர்ப்புக் கொள்கை என்றால் அவர்களின் அரசியல் செயற்பாடுதான் என்ன?

சிவகரன்

(07 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# சட்டங்கள் செய்யவும்...

கணவன் மீதிருந்த உரிமையானது தேடிய தேட்டத்தில் அது யாருடைய பெயரில் வாங்கப்பட்டாலும். கணவனுக்கும் மனைவிக்கும் சமமான உரிமையுள்ள உடைமையாகிவிடும்..

இன்றைய பெண்கள் உழைக்கிறார்கள். தாம்மட்டுமல்ல சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்த பெண்கள் ஏராளம். ஆண்பிள்ளை காதலியின் பின்னே சென்று விட தாம் உழைத்து குடும்பத்தைக் காப்பாற்றும் இளம்பெண்கள் ஏராளம். இப்படி குடும்பத்துக்கு உழைத்து திருமணமே செய்ய முடியாத அளவு முதிர்ந்த பெண்களையும் காண்கிறோம் இப்படி குடும் பத்துக்காக தேயும் பெண்ணுக்கு சொத்தில் வாரிசுரிமை இல்லை என்பது அநியாயமல்லவா?

அன்றாடம் கொடுமைசெய்யும் கணவனோடு ஆயுள் முழுதும் வாழ ஒரு பெண்ணை நிர்ப்பந்திப்பது பாவமில்லையா?

தானே உழைத்த அல்லது தனது பெற்றோரால் வழங்கப்பட்ட தனது சொத்துக்கான அதிகாரத்தை கணவனுக்கென்று விதிப்பதும் அதை தன் விருப்பத்துக்கேற்ப கையாள முடியாமல் செய்திருப்பதும் அவளை அவமதிப்பதாயில்லையா?

தடுக்கிவிழுமிடமெல்லாம் பெண்கள் அமைப்புகள் இருக்கிறதே இந்த சட்டங்களை திருத்தும் படிகேட்கவே மாட்டீர்களா? பெண்கள் அரசியல், சமூக, பொருளாதார விடுதலையை பெற்றுத்தான் உள்ளார்களா?

இடைதெரிய உடை அணிந்து இரும்புக்குதிரைகளில் சவாரிசெய்வதும் இரவுபகல் பாராது சுற்றித் திரிவதும் சுதந்திரமல்ல. ஆணும் பெண்ணும் சமமாகக் கற்றாலும் சமமாக உழைத்தாலும், இன்னும் தராசு சமநிலைக்கு வரவில்லை என்பதுதான் உண்மை. பெண்ணியம் பேசுவோரே கொஞ்சம் கவனியுங்கள்.

(14 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# புதிய இடதுசாரி...

எடுத்தனர். அது இயக்கத்தில் இணையும் பகுதியினருக்கு அரசியலை புகட்டுவதாகும். அதற்காக ஒரே தடவையில் ஆழமான பாடங்களிலிருந்து ஆரம்பிப்பதற்குப் பதிலாக இலகுவானதும் எளிமையானதும் கலந்துரையாடல்கள் சிலவற்றின் மூலமாக அரசியல் அறிவை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்காகச் சில கலந்துரையாடல்களைத் தயாரிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன.

அவைகள்:

1) முதலாளித்துவ முறையின் நெருக்கடி.

2) சுதந்திரம் மற்றும் நவ காலனித்துவத்தின் தந்திரோபாயமாகும்.

3) இந்திய விஸ்தரிப்புவாதம்.

4) இலங்கையின் இடதுசாரிய இயக்கம்.

5) இலங்கை புரட்சி முன்னெடுக்க வேண்டிய பாதை.

அந்த 05 கலந்துரையாடல்கள் இவைகளாகும். பிற்காலத்தில் "05 வகுப்புகள்" என பிரசித்தம் பெற்றவை இந்த கலந்துரையாடல்களாகும். இக் கலந்துரையாடல்கள் இளைஞர் யுவதிகளின் அறிவினை மெருகேற்றியதுடன் முதலாளித்தவத்தின் உண்மை நிலையை அவர்களுக்குப் புரியச் செய்வதில் வெற்றிகண்டது. இந்த 05 வகுப்புகள் பின்னர் காலக் கிரமத்திற்கு ஏற்ப தலைப்புகள் மாற்றமடைந்தும் வளர்ச்சியடைந்ததும் வந்தன. அவ்வாறு பார்க்கும் போது தமது அங்கத்தவர்களுக்கு அரசியலைக் கற்பித்து கருத்தியல் ரீதியாக அவர்களை ஆயுதபாணிகளாக்குவதற்கு அப்போதிருந்த பௌதீக வளங்களின் வரையறைக்கு ஏற்றவிதத்தில் முறையான கல்வி முறையொன்றை வகுத்து செயற்பட இலங்கையின் ஒரே கட்சி ஜே.வி.பிற்கும் பின்னர் மேலதிகக் கல்விக்காக கல்வி முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவைகள் பல நாட்களாக தொடர்ச்சியாக இடம்பெற்றன.

இவ்வாறாக அரசியல் வகுப்புகளில் கலந்துகொண்டு இந்தக் கருத்தியலை ஏற்றுக் கொண்டவர்கள் பின்னர் காலத்தேவ கலந்துரையாடலின் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமைவாக ஸ்தாபனமயப்படுத்தல் ஆரம்பமானது. அதற்கிணங்க முதலில் ஆட்களை இனங்காண்தல் பின்னர் அவர்களுக்குக் கல்வியைப் புகட்டி அதன் பின்னர் ஸ்தாபனமயப்படுத்தல் (அமைப்பு) வரையிலான வரலாற்று ரீதியான செயற்பாடுகளில் அமைப்பாக வளர்ச்சியடைந்தது. இதன் போது கட்சியை மேலிருந்து கீழ் வரையில் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக தோழர் ரோகணை விஜேவீர கீழிருந்து மேல் நோக்கி அமைப்பு முறையை கட்டியெழுப்பினார். அதற்கிணங்க கீழ்மட்ட அமைப்பு கூறுகளாக 05 பேர் அடங்கிய அமைப்பு உருவாக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அமைப்புகள் உருவாக்கப்பட்டதுடன் மாவட்ட செயலாளர்களும் நியமிக்கப்பட்டனர். இதுபற்றி "சில அனுபவங்கள்" எனும் நூலில் தோழர் விஜேவீர பின்வருமாறு குறிப்பிடுகிறார். "அமைப்பொன்றை உருவாக்குவதற்கு ஏதுவான புரட்சிவாதிகள் கட்டியெழுப்பப்பட்டு வருகையில் அமைப்பாக அணி திரட்டுவது பற்றிய வினா எழுந்த போது அப்பிரச்சினையை சரியாக மார்க்சிஸ லெனினிச அடிப்படையிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. நாம் மேல் இருந்து கீழ் நோக்கி இயக்கத்தின் அமைப்புகளை உருவாக்கவில்லை. பழைய இடதுசாரிய இயக்கங்களும் முதலாளித்துவ கட்சிகளைப் போன்று, அதற்குப் பதிலாக நாங்கள் கீழ் இருந்து மேல் நோக்கி அமைப்புகளையே உருவாக்கினோம். அதற்கிணங்க கட்சியின் கிளை, கிராமிய கமிட்டி, பிரதேச கமிட்டி வழியாக மாவட்ட கமிட்டி வரையிலான அமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.

1968–69 காலப்பகுதியில் அமைப்பின் அரசியல் கருத்தியல் பல்கலைக்கழகங்களில் இக் கருத்தியல் வேகமாக பரவியதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் மூலமாக மீண்டும் இந்த கருத்துக்கள் கிராமங்களுக்கும், நகரங்களில் இளைஞர்கள் மத்தியில் பரவியதன் காரணமாக 1969இல் மிக வேகமான வளர்ச்சியை காணக்கூடியதாயிருந்ததும் பல்கலைக்கழகங்களில் குழுக்கள் உருவானதும் தர்மசேகரா குழுவின் சந்தர்ப்பவாத போக்கை இனங்கண்டதும் இவ்வாறான சூழலாகும்.

மார்க்சிஸ–லெனினிஸ கட்சியின் அமைப்புக் கொள்கையானது "ஜனநாயக மத்தியத்துவம்" எனும் அமைப்பு அடிப்படையிலாகும். ஜே.வி.பியின் ஆரம்பகால அமைப்பு முறைகளிலும் அமைப்பு கொள்கைகளிலும் இந்த அடிப்படையின் அறிகுறிகள் தென்பட்டபோதிலும் அது ஆரம்பத்திலேயே அங்க சம்பூரணமான அமைப்பு முறையாக அமையவில்லை. அக்காலத்தில் அவ்வாறான ஒன்றை எதிர்பார்க்கவும் முடியாது.

இதனிடையே ஜே.வி.பிக்கே உரித்தான சில கட்டுப்பாடுகளும் ஒழுக்கக் கோவைகளும் இந்த வரலாற்றுப் போக்கிலேயே உருவானது. ஜே.வி.பி தலைவர்களும் அங்கத்தினர்களும் மது அருந்துதல், புகைப்பிடித்தலை தவிர்த்த நபர்களாக இருந்ததுடன் தேவையற்ற செலவுகள் அற்ற வாழ்க்கையை கொண்டிருந்தனர். மதுபானம், புகைப்பிடித்தல் இல்லாத சம்பிரதாயம் 1966–67 காலப்பகுதியில் மிகவும் கஷ்டமான வாழ்க்கையை கொண்டிருந்த காலமாகும். அப்போது கிரிந்த பண்ணை அமைக்கப்பட்டிருந்ததுடன் வேலை செய்வதற்காக, போக்குவரத்துக்கு, உணவுப் பொருட்களை வாங்குவதற்கான பணம் இருக்கவில்லை. பணத்தை பெற்றுக்கொள்வதற்கான ஆதரவாளர்களும் அன்று இருக்கவில்லை. அதனால் இன்றுபோல் அன்று அவ்வாறான சம்பிரதாயம் உருவாகியிருக்கவில்லை.

இக்காலத்தில் தோழர் விஜேவீரவும் மேலும் மூன்று பேர்களே முழுநேர ஊழியர்களாக செயற்பட்டதுடன் ஆரம்ப வட்டத்திற்கு தொடர்புடைய சிலர் (உதாரணம்:– சனத், சிரிபால அபேகுணவர்த்தன, தெல்கொட ராஜா, கருணாரத்ன) ஆகியோர் தொழில் செய்து வந்தனர். அவர்கள் மாதாந்த சம்பளத்தை பெற்றனர். அதேபோன்று அவர்கள் சமூகத்தில் மற்றவர்களைப் போன்று மது, புகைத்தல் போன்றவற்றிற்காக செலவு செய்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் இவர்கள் அனைவரும் கிரிந்த பண்ணையில் கூடிய போது தற்போதுள்ள நிதி நெருக்கடியைப் பற்றி தெளிவுபடுத்திய தோழர் விஜேவீர முன்மொழிவுகளையும் முன்வைத்தார்.

அதாவது அமைப்பிலிருந்து தொழில் செய்வோர், வருமானத்தை பெறுவோர் புகைபிடித்தல், மது அருந்துதலை நிறுத்தி அதற்கு விரயமாகும் பணத்தை மிச்சப்படுத்தி அமைப்பு நடவடிக்கைகளுக்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்பதே அவ்யோசனையாகும். அதற்கு அனைவரும் இணக்கப்பாட்டிற்கு வந்து அதன் பின்னர் அதை நடைமுறைப்படுத்தினர். அதன்படி ஜே.வி.பியில் மதுபானம் மற்றும் புகைப்பிடித்தலை நிறுத்துவது சுகாதார ரீதியான காரணங்களால் அல்ல. பொருளாதார ரீதியாக முகங்கொடுத்த பிரச்சினைகளுக்கு தீர்வாகவேயாகும். அது மிகவும் பெறுமதியான படிப்பினையானது. தமது மத வழிபாடுகள் மூலமாக மது அருந்துதல், புகைப்பிடித்தலை நிறுத்த முடியாதவர்கள் அப்பழக்கத்தை நிறுத்துவதில் ஜே.வி.பி வெற்றி கண்டது. அது ஜே.வி.பிக்கே உரிய சிறப்பம்சமாகும்.

அவ்வாறாக பல்வேறு ஒழுக்கக் கோவைகளை உருவாக்கிக்கொண்டு, புதிய படிப்பினைகளை உருவாக்கி, கல்வியை வழங்கி, அமைப்பினைக் கட்டியெழுப்பியதன் காரணமாக இளம் தலைமுறையினரை ஈர்த்தது. அதுவே பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அமைப்பு வேகமாக பரவியபோது ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறை ஆரம்பமானது. அதேபோன்று குழுவாதம், சந்தர்ப்பவாதம், அதன் வழியாக உள்ளக நெருக்கடியும் தோற்றம் பெற்றது.

(தொடரும்)

# முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்



## அமைச்சர் நிசாத் பதியுதீன் தமிழ்த் தேசியக் கூட்டணியினரிடம் வேண்டுகோள்



முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ந்து முடிவெடுக்க தீவிர நடவடிக்கைகள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவர் நிசாத் பதியுதீனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறான நடவடிக்கையில் ஒன்றாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தை அண்மையில் நடைபெற்றது. பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு அவற்றில் பல விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவாகத் தெரிய வருகின்றது. இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தலைமை வகித்தார். கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் வடக்கில் மீள்குடியேற்றம் தொடர்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக ஐந்து மாவட்டங்களுக்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இதன்படி குழுக்களின் விபரம் வருமாறு:

1. வவுனியா மாவட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர். இசாக் தலைமையில் ஒரு குழு.
2. மன்னார் மாவட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். நவவி தலைமையில் ஒரு குழு.
3. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்றூப் தலைமையில் ஒரு குழு.
4. யாழ். மாவட்டத்திற்கு பிரதியமைச்சர் அமீர் அலி தலைமையில் ஒரு குழு
5. கிளிநொச்சி மாவட்டத்திற்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்றூப் தலைமையில் ஒரு குழு - நியமிக்கப் பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் நியமனம் தொடர்பாக அமைச்சர் நிசாத் பதியுதீன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அறிவித்துள்ளார்.

அதேபோன்று, வடக்கிலுள்ள 5 மாவட்டங்களிலுமுள்ள பிரச்சினைகளைக் கையாள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் குழுக்களை நியமிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

விரைவில் அந்தக் குழுக்களில் இடம்பெற்றுள்ளவர்களின் பெயர் விபரங்களைத் தருவதாக மாவை சேனாதிராசா உறுதியளித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்ற சந்திப்புப் பற்றி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் "தினச்செய்தி" க்கு தகவல் தருகையில் வருமாறு கூறினார்.

"இந்த முதலாவது கட்ட சந்திப்பு, மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இரு பகுதியினருக்குமிடையிலான இந்த சந்திப்பில் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுதல், பிரதேச அபிவிருத்தி, மீள்குடியேற்றம் தொடர்பில் புரிந்துணர்வுடன் இணைந்து செயற்படுவது தொடர்பான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

இரு பகுதியினருக்குமிடையிலான அடுத்த சந்திப்பு எதிர்வரும் ஜனவரி இறுதி வாரத்தில் மீண்டும் இடம் பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது", என்று கூறினார்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு டிச.27,2015 அன்று வெளியிடப்பட்டது.

# தினச்செய்தி

என்றும் உங்களுடன்




தில்லைகட்டி லேன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

## நாட்காட்டி – 2016

T.P: 021 7539300
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

### தை 01

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### மாசி 02

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | | | | | | |

### பங்குனி 03

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### சித்திரை 04

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### வைகாசி 05

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### ஆனி 06

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### ஆடி 07

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### ஆவணி 08

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### புரட்டாதி 09

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### ஐப்பசி 10

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### கார்த்திகை 11

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### மார்கழி 12

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |